T. 1537.

கழக வெளியீடு : ௧௦௨

1537

மணிவாசகப் பெருமான்

T
1537



GOVERNMENT OR... LIBRARY
10 DEC 1948
TRIPLICANE P.O., MADRAS

கழக வெளியீடு—௬௨

௨

திருச்சிற்றம்பலம்

மணிவாசகப்பெருமான் வரலாறு

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
எம். ஏ., எம். எல்., எழுதியது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை
விய௵-தைமீ

First Edition August 1928

(Copy Right)

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD., ::
TIRUNELVELI & MADRAS.

Q. H. M. S. 95-B. March 1947
The Progressive Printers, Madras.

பதிப்புரை

பாண்டிவள நாட்டிலுள்ள திருவாதவூரிலே ஆதி சைவமரபிற் றோன்றியவரும், திருப்பெருந்துறையில் சிவபெருமான் மக்களுருவில் வந்து ஆட்கொண்டருளப் பெற்றவரும், சைவசமயாசாரியர்களுள் காலத்தால் முற்பட்டு விளங்கியவரும், தமிழ் நாட்டின்கண் உரமுற்றுச் சைவவான்பயிர்க்குக் கேடு விளைத்த புத்த மதத்தைக் களைந்தவரும், ஊமைப் பெண்ணைப் பேசுவித்த பெருமை பெற்றவரும், இறைவனே தம் பொருட்டு நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும், வைகையைப் பெருக் கெடுக்கச் செய்தும், பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்து மண் சுமந்தும் அவ்வாற்றால் அரிமர்த்தன பாண்டியனுக்குத் தம் பெருமையை நன்கு அறிவுறுத்திய பேறுபெற்றவரும், உருகா உளத்தையும் உருக்கவல்லதாய் அன்புச் சுவை ததும்பும் திருவாசகத்தையும், அகப் பொருட் சுவை நிரம்பித் துளும்பிக் கோவைகட்கெல்லாம் முற்பட்டதாய் விளங்குந் திருச்சிற்றம்பலக் கோவையாரையும் அருளிச்செய்தவரும், தில்லைத் திருவருளில் இரண்டறக் கலந்தவருமாகிய **மணிவாசகப் பெருமான்** மாண்புமிக்க வரலாற்றனை மாந்துவது மக்கள் கடனே.

முன்னரே அறிஞர் பலர் அடிகளது வரலாற்றினை எழுதி வெளியிட்டிருப்பினும் **சைவசமயாசாரியர் நால்வர் வரலாறு** என்னுந் தொகுதியை நிரப்புதற்கு இந் நூலாசிரியராலேயே புதிய முறையில் ஆராய்ச்சிக்கருத்துக்களுடன் எழுதப்பட்டு வெளிவந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் வரலாறுகளை யடுத்து இந்நூலும் அம்முறையில் வெளிவரல்வேண்டுவது இன்றியமையாத தாயிற்று.

இந்நூலின்கண் மணிவாசகப்பெருமான் வரலாறு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வரலாற்றுப்

பகுதி முடிந்ததும் அதனல் உணரக்கிடக்கும் ஆய்வுரைகளை விளக்கி எழுதிச் சேர்த்திருப்பதும், அடிகள் மூன்ருவது நூற்ருண்டின் பிற்பகுதியிலே தேவாரஆசிரியர்களுக்கு முற்பட்டு விளங்கினர் என்பதைப் பல எடுத்துக்காட்டுக்களால் சிக்கறுத்து விளக்கியிருப்பதும், அதனை விளக்குவதற்குப் போந்த பழைய செப்புப் பட்டயத்தின் மூலத்தை நன்கு மொழிபெயர்த்து அதனை அம் மூலத்தோடு இறுதியிற் சேர்த்திருப்பதும், பொதுவாக அடிகளருளிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூல்களில் செறிந்து கிடக்கும் அருங்கருத்துக்களையும், சிறப்பாகத் திருவாசக நான்கு அகவல்களிலுள்ள அரும் பொருள்களையும் ஆய்ந்தெழுதிச் சேர்த்திருப்பதும் கற்பவர்க்கு அளப்பிலின்பம் அளிப்பனவாகும்.

இதன்கண் சேர்த்திருக்கும் செப்புப்பட்டயத்தை எழுதியனுப்பியுதவிய திருவனந்தபுரம் திரு. T. K. சோசப் அவர்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்ருேம்.

இத்தகைய அரிய பெரிய ஆராய்ச்சி நூல்களை மிகவும் பாடுபட்டு எழுதித் தமிழ்மக்கட்குப் பயன்படுத்திவரும் பேரறிஞர் உயர்சைவத் திருவாளர் **கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்** நோயற்ற வாழ்விலுங் குறைவற்ற செல்வத்திலும் ஓங்கி எல்லாநலங்களும் பெற்று நீடு வாழ்கவென எல்லாம் வல்ல மங்கைபங்கனை இடையருது வழுத்துகின்ருேம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பதிப்புரை

புகழ்மாலை

க.	தோற்றுவாய்	க
உ.	குருவருள்பெற்றது	எ
௩.	தில்லைக்கு ஏகுதல்	௪௯
௪.	புத்தரை வாதில் வென்றது	௫௮
௫.	திருவாசக ஆராய்ச்சி	எ௮
௬.	திருக்கோவையார் ஆராய்ச்சி	௯௪
எ.	திருவாசக அகவல் ஆராய்ச்சி	க0௩
௮.	அடிகளைப்பற்றிய பட்டயத்தின் மூலம்	க௨0
௯.	௸ மொழி பெயர்ப்பு	க௨௨

மணிவாசகர் புகழ்மாலை

மச்சபுராணம்

கறைமிடற்றெம் பரற்போற்றி நரிபரியா
வரவழைத்துக் கயற்கண் மூங்கை
யிறைவளையைப் பேசுவித்துப் புத்தரைவென்
றம்பலத்தி னினிதி னாடும்
பிறைமுடித்த பிரானெழுதக் கோவைதிரு
வாசகப்பேர் பிறங்கு பாடன்
மறைவகுத்த வாதவூர் மாணிக்க
வாசகர்தாள் மனத்துள் வைப்பாம். க

செவ்வந்திப்புராணம்

தேனூறும் வாசகங்க ளாறுநூறுந் திருக்கோவை
நானூறு மமுதூற மொழிந்தருளு நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன். உ

திருவெண்காட்டுப்புராணம்

சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியுஞ் செம்முகிலை
மற்றொப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றைத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே. ங

காஞ்சிப்புராணம்

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து

திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி.

பேரூர்ப்புராணம்

உள்ள மாகிய புலத்தினைப் பத்தியா லுழுது
தெள்ளு ஞானவித் துறுத்துநற் சிரத்தைநீர் பாய்த்திக்
கள்ள வான்பொறி களைகள்கட் டானந்தம் விளைத்துக்
கொள்ளை கூறுமா ணிக்கவா சகன்கழல் குறிப்பாம்.

திருவோத்தூர்ப்புராணம்

நிலனேறும் புகழ்வைகை நீரேற நீரோடு
மலரேறுஞ் சடைமுடியின் மண்ணேற மணிமேனி
யலரேறு மாறேற வாண்டருளும் பெருமானைக்
கலனேறும் பரியேறக் கண்டவர்தாள் பரவுவாம்.

திருச்சுழியற்புராணம்

குதிரைகொளத் தரும்பொருளைக் குருந்தடியி லேகிடத்தி
மதுரையிற்பாண் டியனுர்முன் னரிவாசி கொண்டானை
யெதிரினெய்திப் பெருந்துறையிற் றனைப்புரந்த வெழிற்கோலங்
கதிர்மணியார் கழுக்குன்றிற் கண்டானைத் தினம்பணிவாம்.

திருவருட்பா

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே.

உ

திருச்சிற்றம்பலம்

மணிவாசகப் பெருமான் வரலாறு

க. தோற்றுவாய்

இந் நிலவுலகத்திலே கடவுள் உயிர்களுய்தற் பொருட்டு அருளுருக்கொண்டு தோன்றியுந் தோன்றாதும் அருள் புரிவர். அன்பர்கள் நினைந்த வடிவொடு எப்போதாவது தோன்றி அருள்புரியா விடத்து இறைவனியல்பை மக்கள் திட்பமாக உணரமாட்டார். வீடென்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்று கருதுவார்க்கு அவ்விறைவன் இயல்பை யுணர்ந்தாலன்றி வீடெய்துதல் முடியாது. இறைவன் உருவுகொண்டெழுந்தருளி யிருக்கும் ஓர் உலகத்தையடைதலே வீடென்பார்க்கும் இறைவன் திருவுருக் காண்டல் வேண்டப்படுவதொன்றே. இறைவன் அருளொளியாகத் தோன்றினும் அவ்வொளியும் ஓர் உருவே. கடவுள் எந்நாளும் தோன்றாத் துணையாகவே யிருப்பார் என்னுங் கொள்கையும் உலகத்தில் நிலவுகின்றது. கடவுளைக் கண்டவர் இல்லாத நாட்டிலே கடவுளைக் காணுதல் கூடுமென்ற கொள்கை உண்டாதற்கிடமில்லை. கடவுளைக் கண்டவர் இருந்திருப்பினும் அவர்களைப்பற்றி யறியாத மாந்தர் கடவுள் தோன்றுதல் கூடுமென்பதை நம்பமாட்டார். கௌதம புத்தர், வாசெட்டன் என்னும் பார்ப்பன மாணவனை நோக்கிப் பிரமத்தைக் கண்டவர் யார்? என்று வினவியபோது ஒருவருமிலர் என்று அவன் கூறவும், அவர், ஆதலினாற்றான் மும்மறைகளுங் கற்று வல்லவர்கள், 'நாமதனைப் பார்த்ததுமில்லை அறிந்ததுமில்லை, அதனோடு ஒன்றாகும் வழியையும் நம்மாற் காட்டமுடியாது என்ற

னர்' என்று அக்கொள்கையை வற்புறுத்தினர். அவர் காலத்திலே மூன்றுவேதங்களையுங் கற்றவர் கடவுளைக் காண முடியாதென்ற கொள்கையை உடையராயிருந்தன ரென்பது தெளிவு.

> காணு யாறரி தரிதா மெனக்கணிப் பிலாப்பல சாகைக்
> கோணை மாமறை யாவையுந் தனித்தனி குழறுவ தல்லான்
> மாணு மாறிது வெனக்காட்ட வல்லதே''

என்று ஆசிரியர் சிவஞான முனிவர் கூறியதுங் காண்க. தென்னாட்டிலே நான்மறைகளையும் இறைவன் நால்வர்க்கீந்தனனென்று தமிழ் மறைகள் முழங்குகின்றன.

> "சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள்"

என்ற தேவாரப் பாட்டில் 'சைவவேடந்தானினைத்து ஐம்புலனு மழிந்த சிந்தை அந்தணாளர்' என்றமையால், இறைவனது சிவவேடத்தினை முனிவர் நினைந்தாரென்பது பெறப்படும். படவே இறைவர்க்கு உருவம் உண்டென்று கொள்ளப்பட்டது. திருவாசகத்துள்

> மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
> உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

என்றமையால்; இறைவன் ஐந்து திருமுகங்களோடு ஆகமங்கேட்ட முனிவர்க்குத்தோன்றியருளின னென்பது பெறப்படும். இறைவனே முதனூலருளினன் என்ற கருத்துந் தலைச்சங்கப்புலவருக்கு இறைவன் தோன்றி யருளின னென்பதுந் தமிழ்நாட்டுக் கொள்கையே. இவற்றாற் புலனாவ தென்னெனின், கடவுள் தக்க தவத்தினர்க்குத்தோன்றி யருள்புரிவனென்ற கொள்கை தமிழகத்திலே மிகப் பழமையான காலத்திலே நிலை பெற்றிருந்த தென்பதே. பண்டை நான் மறையும் அறிவனூலுந் தலைச்சங்கமும் மறைந்தொழிந்தற்குப்பின் நக்கீரர் நூலாகிய திருமுருகாற்றுப்படையில் 'முரணினர் உட்க, முருகாற்றுப் படுத்த உருகெழுவியனகர்' என்ற விடத்து இக்கொள்கை குறிக்கப்பட்ட தெனினும்,

புத்தசமயம் தென்னாட்டிலே கடைச்சங்கத்தார் காலத்திலே பரவிய பின்னர் அது மழுங்கிப்போயிற்று. மீட்டும் இதனை மலையிலக்காக நிலைநாட்டிப் பண்டைத் தமிழரது சிவநெறியின் உண்மையை உலகினருக்குத் தமது பெருவாழ்வினால் விளக்கியருளிய முதற்பெருந்தகையார் சைவத்திருநெறித்தலைவர்கள் நால்வருள் முற்பட்டவராகிய மணிவாசகப் பெருமானாவர். இவர் அறிவனூல் கூறும் முறையிற் செவ்விதின் ஒழுகித் தனிப்பெருந்தவம் நோற்று இறைவன்பால் உலகப் பயன் எதனையும் விழையாது வீடுபேற்றினையே பெரிதும் அவாவி நின்று இறைவன் மனிதப் போர்வை போர்த்துக் குருவாக வந்து ஆட்கொண்டருளப் பெற்ற பேராசிரியராவர்.

இவர் மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதிலேயே நிலவுலகிற் றிகழ்ந்தன ரென்பது உயர்திரு மறைமலையடிகளால் மிக விரிவான ஆராய்ச்சிசெய்து முடிவுகட்டப்பட்டது. அஃது அந்நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவின் மேலைக்கரையிற் குடியேறி வதிந்திருந்த பாதிரிமார்களால் ஏட்டுச்சுவடியில் அப்பெருந்தகையார் சார்பாக எழுதிவைத்த குறிப்புக்களால் ஐயத்திற்கிடமில்லாதபடி வலியுறுதல் காண்க. திருவனந்தபுரத்திலுள்ள கேரள சங்கத்தின் தொன்னூலமைச்சராய் விளங்குந் திருவாளர். T. K. ஜோசப் அவர்கள் மாணிக்கவாசகரைப் பற்றிய மலையாளக் கிறித்துவச் செப்புப்பட்டயங்களைத் தமது நூலொன்றிற் றொகுத்து வெளியிட்டிருக்கின்றார். அவைகள் மலையாள எழுத்தில் இருப்பதால், மாணிக்கவாசகப் பெருமான் சார்பான செப்புப்பட்டயத்திலுள்ள சொற்றொடர்களைத் தமிழெழுத்தில் எழுதித் தெரியாத சொற்களுக்குப் பொருள் விளக்கமுஞ் சேர்த்து இந்நூலெழுதுங்காலத்திலே மிக்க அன்புடன் அனுப்பிய அவர்களது பெரு நன்றிக்கு நாம் என்றுங் கடமைப்பட்டுள்ளோம். அச்செப்புப்பட்டயப் பகுதி இந்நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பட்டயத்தினால் நாம் அறிந்து கொள்வது யாதெனில், " காவிரிப்பூம் பட்டினம் முதலிய

துறை முகங்களிற் றமிழரிற் சிலர் கிறித்து மதக் குருமார் சொற்கேட்டு அச்சமயநெறி நின்றனர். கி. பி. உகூ௩-வது ஆண்டிற்கு முன்னேயே அவ்விடத்தில் சைவக்கிளர்ச்சி ஏற்பட்டது. மணிவாசகப்பெருமானுடைய அடியார்கள் மேலைக்கரைமுதல் கீழைக்கரை வரையிலுள்ள பல இடங்களிலும திருவருளினுற் பலவகை அருஞ்செயல்களை இயற்றிச் சைவத்தை வளர்த்தனர். ஆயகாலை கிறித்து மதத்திலிருந்தும் பலர் ஆவிலேந்தும் உட்கொண்டு ஐந்தெழுத்தோதிச் சிவநெறிக்கு மீண்டனர். மலையாள நாட்டில் மேலைக்கரையிலுள்ள குரக்கணியென்னு மிடத்திற்கு அருகில் சிவநெறிக்கு மீண்டார்க்கும் மீளாதார்க்கும், பிணத்தை அடக்கஞ் செய்யும் முறையைப்பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் முன்னையோர் பின்னையோரினின்றும் விலகி மணிக்கிராமம் என்னும் ஒரு தனி ஊர் ஏற்படுத்தி அதன்கண் வாழ்ந்தனர்,'' என்பதே.

இனி, மணிவாசகனார் காலம் முற்பட்டது என்பதற்குப் பிற சில காரணங்களும் உள.

மாணிக்கவாசகர் காலத்திலே புத்த சமயமே தலையெடுத்து நின்றது. 'புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்' என்ற விடத்துப் புத்தசமயம் திருவாசகத்திற் கூறப்பட்டது போலச், சமண் மதம் திருவாசகத்துட் குறிக்கப்படவில்லை. மணிவாசகப் பெருமான் புத்தரை வாதில் வென்றபோது, புத்த மதத்தினர் பலர் சைவந் தழுவியதை இலங்கையி லுள்ள 'மகாவமிச' மென்ற புத்த சரித்திரநூல் எடுத்தியம்புகின்றது. அது குறிக்குங் காலமும் மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதியோ டொத்திருக்கின்றது.

மூன்றாவது நூற்றாண்டிற்குப் பின் புத்தசமயம் சிறப்பாகத் தமிழ் நாட்டில் நிலைபெறவில்லை. தேவார காலத்தில் அது சமண்சமய நிழலில் தங்கியிருந்தது. ஒன்பதாவது நூற்றாண்டில் சமண் சமய சங்கங்களே தமிழ் நாட்டிற் பல இடங்களிற் றிகழ்ந்தன. ஆதலால் மணி

வாசகப் பெருமான் ஒன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்திருந்தனர் என்று கூறுதல் தவறு. பல்லவ மன்னரைப் பற்றித் தேவாரத்துட் குறிப்புக் காணப்படுகின்றது. ஆனால் திருவாசகத்துள் அன்னோரைப்பற்றி யாதுங் கண்டிலம். பல்லவர் அரசாளத் தொடங்கியது கி. பி. நாலாவது நூற்றாண்டிலே யாதலால் திருவாதவூரடிகள் அதற்கு முன்னேயே திருவாசகம் அருளிச்செய்திருக்கவேண்டும். திருவாசகத்தின் பாவமைப்பும் சொல்லமைப்பும் அது தேவாரத்திற்கு நெடுநாள் முற்பட்டதென்பதை வலியுறுத்துவன. வடசொற் கலப்பும் விருத்தப் பாக்களும் தேவாரத்திற் காணப்படுதல் போலத் திருவாசகத்துள் மிகுதியாய்ப் பயிலாமை காண்க. மணிவாசகப்பெருமானாற் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் ஒன்பதாம் நூற்றாண்டிற் றிகழ்ந்த போர்வீரனாகிய வரகுணனின் வேறானவனென்று உயர்திரு மறை மலையடிகளால் நன்றாக நாட்டப்பட்டது. வரகுணனென்ற சொற்றொடர் வடமொழியாதலின், வடமொழிப் பெயர் மூன்றாம் நூற்றாண்டிற் பாண்டியர்க்கு அமையவில்லை என்ற கருத்துப் பிழைபட்டதாகும். உக்கிரப் பெருவழுதி என்ற சொற்றொடரில் உக்கிரனென்ற சொல் வடமொழி யாதலாலும், உக்கிரப் பெருவழுதியின் காலம் கடைச்சங்கத்தின் இறுதிக்காலமாகிய மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாதலாலும் வடசொல்லானது மூன்றாம் நூற்றாண்டிலேயே பாண்டிய மன்னர் பெயர்களிற் கலந்துள்ள தென்பது தெளிவு. வரகுணன் என்பதை, வரகு உணன் எனப் பிரித்துப் பொருள் கொள்ளின், அது தமிழ்ச் சொற்றொடராதல் காண்க. ஈண்டுச் சுட்டிய ஏதுக்களாலும் பிறவற்றாலும், மணிவாசகப்பெருமான் காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்று தெளியப்படும்.

நமது அடிகளைப்பற்றிய வரலாறு வடமொழியில் ஆலாசிய மான்மியம், ஆதிகைலாச மான்மியம், மணிவாசகபுராண முதலிய நூல்களிலும், தமிழிலே கடம்ப

வன புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், உத்தரகோசமங்கைப் புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்னும் நூல்களி லுங் காணப்படுகின்றன. இவையாவும், அடிகள் காலத் திற்கு நெடுநாட்குப்பின் இயற்றப்பட்டமையால், சிற்சில பகுதிகள், தம்முள் முரண்படுவன. இறுதியில் நின்ற புராணம் கடவுண்மா முனிவரா லியற்றப்பெற்று அடி களது வரலாற்றினைச் செந்தமிழ்ப் பாக்களான் விரிவாகப் பகர்வதாகலின் அதனைப் பெரிதுந்தழுவியே இந்நூல் எழு தப்படுகின்றது. அதனுட் பொருத்த மில்லாதனவும் ஆங் காங்கே சுட்டப்படும். கடவுண்மா முனிவர் ஆசிரியர் சிவஞான முனிவரது முதன் மாணுக்கராகிய கச்சியப் பரோ டுடன்பயின்றன ரென்ப. இவர் வரலாறு தெளி வாகத் தெரியவில்லை.

இனி, திருவாதவூரடிகள் அறுபான் மும்மை நாயன் மாருள் ஒருவராகச் சேர்க்கப்படாமையின், அவர் நம்பி யாரூரர் காலத்திற்குப் பிற்பட்டவராதல் வேண்டுமென்று கோடல் பொருத்தமின்மை காட்டுதும். திருத்தொண் டத்தொகையுள் அடிகள் விதந்தோ தப்படாமைக்குக் காரணம் பலவாறு கூறப்படுகின்றது. ஒரு காரணம் யாதெனின், திருத்தொண்டத்தொகை வல்வினையாற்றி இறையருள் பெற்றபெரியாரையே தனிப்பட விதந்தோ தும். அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவரும், மணி மொழியார் போலச் சிவஞான போதத்துட் கூறியாங்கு மக்கட்போர்வை போர்த்துக் குருவாய் வந்த இறைவனால் ஆட்கொள்ளப்படாமையின், அவ்வகைத்தாய ஆகம முறையாகிய உபதேச நெறிக்குப் புறனடையா யமர்ந்த தமிழ்நாட்டுப் பெரியாரே, அறுபான்மும்மை நாயன் மாராகத் தொகுத்துக் கூறப்பட்டரென் றுய்த்துணர் வார்க்கு, திருவாதவூரடிகள் வரலாறு பெரிய புராணத்திற் காணப்படாமைக் கேது தெள்ளிதிற் புலனுமெனக. இனிப் *'பொய்யடிமை யில்லாத புலவ'ரென்பார் மாணிக்கவாசக

ரென்பாருமுளர். அவர் பிறப்பால் வீரசைவ மதத்தின ரென்றனு மொரு கொள்கை. எவ்வாறு கொள்ளினும், அடிகள் வரலாறு பெரியபுராணத்திற் கூறக்கப்படாமை காலம் பற்றி நேர்ந்த தென்று கோடல் தவறென்பது மேற்கூறிய காரணங்களால் நிலையுறுதல் காண்க. ஒரு சாரார் திருவெம்பாவையுள்,

> "வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
> ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்".

என்றவிடத்து 'ஒரு தோழன் தொண்டருள் உள்ளவன்' என்று பொருள் கொண்டு, தம்பிரான் றோழராகிய சுந்தர மூர்த்திகளை இவ்வடிகள் குறிக்கின்றன வென்பர். அது தக்க பொருளன்று. 'ஒரு தோழன்' என்றது இறை வனையே. தொண்டர் உளன்—என்பதற்குத் தொண்ட ருள்ளத்தி லிருப்பவன் என்பதே பொருள்.

உ. குருவருள் பெற்றது

பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே ஆதிசைவ மர பிலே நமது நாயனர் தோன்றினர். அவரது இயற்பெய ரும், பெற்றோர் பெயரும் விளங்கவில்லை. சுந்தரநாதர் என்னு மாதிசைவர்க்குப் பிறந்ததாக வடமொழி ஆலாசி யங் கூறுகின்றது. காலஞ்சென்ற பெரும் புலவர் மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்க ளியற்றிய பெருந்துறைப் புராணம், இவரது தந்தை பெயர் சம்பு பாதாசிரியர்; தாய் பெயர் சிவஞானவதி என்று கூறும். இவை முன்னூல்களிற் காணப்படாமையாற் பிற்காலத்திற் புனைந்துரைக்கப்பட் டனபோலும். இவர் கயிலையிற் கணநாதராய்த் திகழ்ந்தவ ரொருவரென்று திருவாலவாயுடையார் புராணங் கூறு கின்றது. 'குடமுழ நந்தீசனை வாசகனைக் கொண்டாய்' என்ற அப்பர் தேவார அடிகளும், 'நீக்கி முன்னெனைத் தன்னொடு, நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து' என்ற

திருவாசகப் பகுதியும் இதற்குச் சான்றுமென்ப. 'நந்தி' என்று கணநாதர்க்குப் பெயர். 'வாசகன்' என்பது வாயிற் காவலன் என்று பொருள்படு மென்பாரு முளர். அடிகளது முற்பிறப்பு எங்ஙனமாயினும், அவர் முன்னைப் பெருந்தவத்தினரென்பது கூறாமே விளங்கும். அடிகளது மரபை அமாத்தியர் குலமென்றது, அம்மரபினருள் நின்று அமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டமையா னென்க. அமாத்தியர் என்ற சொல் பக்கமிருக்கு மந்திரியைக் குறிக்கும். கடவுண் மாமுனிவர், திருவாதவூரரென்ற நாமத்தையே அடிகளுடைய பெற்றோர் அவர்க்கிட்டன ரென்கின்றார். ஆரூரர் என்ற சொல் அத்தகைய தாதல் காண்க.

நிலையாத இவ்வுலகின் வாழ்வார் மயக்கமாகிய இருளை யொழித்தற்பொருட்டும், புறச்சமய விண்மீன்களி னொளி மழுங்கவும், சிவனன்பர் உள்ளக் கமலங்கள் மலரவும், அறிவின் கதிரவனாகிய திருவாதவூரர் தோன்றி யருளி னார். அடிகளைக் கடவுண் மாமுனிவர் ஓர் செந்நெற் கதிருக்கும் ஒப்பிட்டுள்ளார்.

"தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்கு ரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண் டாகி
அவமெனுங் களைக ணீங்கி யாக்குவோ னருளா லுண்மைச்
சிவமெனும் விளைவுண் டாக வளர்ந்தது தெய்வச் சாலி."

பயன் கருதாது செய்யுந் தூய நற்றவமாகிய வித்திலே முளைத்துப் பிறவியாகிய சேற்றினைக் கடந்து அருளென் னுங் குருத்துவிட்டுப் பயனில் செயலாய களைகளிற் பிணிப் புறாது, மெய்ப்பொருளாஞ் சிவம் விளையுஞ் செவ்விய நெற்கதிராக வளர்ந் திலங்கினார் திருவாதவூரடிக ளென்ற வாறு. பிறவிப் பசிதீரச் சிவஞானவமுதுண்ணத் தோன் றிய செம்மலார்க்குச் சோறூட்டுதற்குரிய நாளிலே, தேனும் கருப்பஞ்சாறு முக்கனியும் ஆன்பாலுங் கலந்த உணவை யளித்தனர். உரிய பருவங்களிலே, குடுமிவைத் தல், கல்விதொடங்குதல், நூலணிதல் முதலியன நிகழ்ந்

தன். பதினாரும் ஆண்டிற்குள் எல்லாக் கலைகளையும் அடிகள் கற்றுத் தேர்ந்து சிவனடிப் பேரன்பினராய்ப் பெருந் திறமையோடு திகழ்வதைப் பாண்டிய மன்னன் கேட்டு அவரை யழைத்து உரிமைகள் பல நல்கிப் பெரு நட்புப் பாராட்டிச் சின்னாளில் அவரை முதல் அமைச்சராய் நியமித்துத் தென்னவன் பிரமராயனென்னும் பட்டமுங் கொடுத்து, மணிக்கலன்கள், பொன்னுடைகள், மதிக் குடை, சிவிகை, கவரி, யானை முதலியனவு மீந்தனன். எவ்வகைச் செல்வமும் மின்பமும் பெற்று, அரசரது படைத்தலைவர் சூழ அடிகள் அமைச்சு பூண்டிருந்தது, விண்ணின்றிழிந்த மதி விண்மீனடுவணிருந் திலங்கியது போன்றது.

திருவாதவூரர் அறஞ் செய்வோர்க்குப் பெருந்துணையாயும் அல்லாரைத் தக்கவாறு திருத்தும் நடுநிலையராயும் நாட்டின் அகத்தும் புறத்தும் பகையொழித்துப் பாண்டிய மன்னன் ஆட்சியைப் பிறவெல்லா அரசர் ஆட்சியினுஞ் சிறப்புற நடத்திவரு நாளில், கடவுள் உயிர் உலகம் என்னும் இவற்றின் மெய்யியல்பு தெரிக்குஞ் சைவ நூற்பொருளை நன்குணர்ந்து பிறப்பிறப்புப் பிணி மூப்பு என்னும் இடும்பைக்கஞ்சிச் சிவபெருமான்மாட்டு மிகுந்து வளரும் பேரன்புடையராய் அகத்துறவு பூண்டு இறையருள் பதியப்பெற்றுச் சிவஞானச் செல்வம் நல்கும் நல்லாசிரியனை உலகெங்கும் உசாவித் தேடுவாராயினர்.

இவர் இவ்வாறிருக்கும் நாளில் ஒரு நாட் பாண்டிய மன்னன் கொலுவீற் றிருக்கும்பொழுது சில தூதர் அவன் பாற் சென்று வணங்கி ஆரிய வணிகர் கீழைக் கடற்கரையிற் குற்றமில்லாத நற்குதிரைகள் விற்பனைக்குக் கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். உடனே அரசன் அதனைக் கேட்டு மகிழ்ந்து திருவாதவூரடிகளை நல்ல குதிரைகள் வாங்கிக்கொண்டு வரும்படி வேண்டினன். அதற்கவர் இசைந்தவுடன் நிதிச்சாலை சென்று மிகுந்த பொன்னை எடுத்து அவரிடங் கொடுத்தான். அதனைப் பெற்றுக் கொண்டு பரிசனங்கள் பலருடன் திருவாலவாய் அண்ண

லேத் தொழுது விடைபெற்றுக் கூடன்மாநகரைக் கடந்து கீழ்த்திசை நோக்கிச் சென்றனர். திருக்கானப்பேர் என்னுந் திருப்பதியை வணங்கித் திருப்பெருந்துறை என்னும் பதியினை நண்ணியவுடன் அப்பதியின் பாங்கர்ப் புன்னை, செண்பகம், சந்தனம், நரந்தம், செருந்தி, கோங்கு, பாதிரி, கமுகு, தெங்கு, குரவு, மா, முருக்கு, மகிழ் முதலிய மரங்கள் செறிந்து மயிலுங் குருகும் மந்தியும் உலாவித் திரிதற்கிடனாய் வண்டுகள் பண்பாடத் தேனனைய கண்ணீர் ததும்ப இறைவன் முன்னின்றுருகும் அன்பரைப் போன்ற பூம்பொழிலின் கீழ் உயர்ந்து அகன்று கவடுகள் பல போக்கிப் பெரு நிழல் செய்யும் அழகிய ஒரு குருந்த மரத்தின்கீழ் இறைவன் மக்கட் போர்வை போர்த்து எழில் மிக்கதோர் ஆசிரிய வடிவங்கொண்டு தொண்டர் புடை சூழ வீற்றிருந்தருளித் திருவாதவூரர்க்கு (கட்டறுத்து) மலநீக்கிச் சிவமாக்குதற்குரிய பொழுதினை எதிர் பார்த்திருந்தனர். திருவாதவூரடிகளை விட்டகலும் பாசம் போலக் காயாமரங்கள் கரியபூக்களைப் பூத்தன. அவருக்கு இனிப் பிறப்பில்லை என்று கையினாற் காட்டுவபோலக் காந்தட்செடிகள் மலர்ந்தசைந்தன. காமன்கை அம்பாகிப் பிறரை வருத்தும் எமது பாவச்செயலை யொழிப்பதற்கு உம்மினுந் தக்கவரில்லையாதலின் நீர் எமக்கு அருள் செய்க என்று பல்லைக் காட்டி நிற்பவர்போல் மெல்லிய முல்லைக்கொடிகள் மலர்ந்தன. இத்தகைய இயற்கை வனப்பினைக் கண்ணுற்றுத் திருப்பெருந்துறையைத் திருவாதவூரடிகளடைந்தபோது மலர்மரங்கள் மலர்களை உதிர்த்துப் புகழ்கூறி வரவேற்பவை போன்றன. தாழைகள் வருவார்க்கு உணவளிப்பன போலச் சோறேந்தி நின்றன. நீறணிந்து பொய்கைகளிலுள்ள தாமரைகள் தவத்தினர் போல அலர்ந்தன. கரும்பு பிறர்க்குரியாளராய் அகத்தினிமை கொள்ளும் நல்லறிவினர்போல் நெருங்கி வளர்ந்தன. தலைவர் முகங்கண்டு தலைகவிழ்ந்து நிற்கு மாதர் போலச் செந்நெற்கதிர்கள் விளைந்து தலை வணங்கின.

இவைகள் இவ்வாறிருப்பத் திருவாதவூரடிகள் அப்பதியை நண்ணிய அளவில் நெஞ்சொடுக்கமும் அவாவின்

ஒழிவு முணர்ந்து வியப்புற்று அத்திருப்பதியின் பெருமையை நினைந்து அகம் நெக, உரைவேறாக, அன்பு பொங்க, விழியருவிபாய, மயிர்சிலிர்த்து அழல்சேர் மெழுகெனச் சென்னிமேற்குவித்த கையராய் நின்றனர். நின்றபோது அணித்தாக அருள்நூலோதும் ஒலியினைக்கேட்டு ஏவலர் சிலரை யனுப்பி இஃதென்னென் றறிந்தும் சொல்லுங்கள் என்றனர். அவர்கள் சென்று குருந்தமர நிழலிற் பெரியவரொருவர் அடியார் பலருடன் வீற்றிருந்து நூலாய்வதைக் கண்டு வந்து கூற அவர்களைக் காணும் விருப்புடன் சிவிகை நின்றிழிந்து, இறைவனது பேரவைக்குட்சென்று பரமாசிரியனைக் கண்டவுடன் நிலமிசை வீழ்ந்திறைஞ்சிப் பன்முறை பணிந்து நின்றார். இறைவன் முடிமுதல் அடிவரை நோக்கி ஐந்தெழுத்து அருள்நிலை அறிவுறுத்தி அவர் சென்னிமேற் றிருவடி சூட்டிப் பாச நீக்கமுஞ் சிவப்பேறும் உடன்நல்கி ஆட்கொண்டருளினர். அடிகள் நின்ற நிலையைப் பின்வருஞ்செய்யுளாலறிக.

சிரித்த முகமுங் கவின்குழலுந் தீரா வருவிக் கண்மலரும்
விரித்த காமுஞ் செபவடமும் வெண்ணூன் மார்புந் திருநீறும்
தரித்த திருவா சகமொழியுஞ் சாந்த மெய்யுங் குறுவியர்வு
மரித்த மனமும் புளகமுமாய் நின்றார்வாத வூர்முனிவர்

அடிகள் அப்பொழுது சென்னிப்பத்துப் பாடியருளினர். அவருடைய இன்றமிழ்ச செழும் பாடல்களைக் கேட்டு வந்த இறைவன் மாணிக்க வாசகனென்னுந் திருப்பெயர் அளித்தனன். பின்னர்த் திருவாதவூரடிகள் உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவன்பால் ஒப்புவிக்கக் கருதித் தாம் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளனைத்தையும் இறைவன் திருவடியிற் சேர்த்தனர். இறைவனவற்றை நல்லறங்களிற் பயன்படுத்தக் கட்டளையிட்டருளினர். அடிகள் அவ்வாறே திருப்பெருந்துறையிலே திருக்கோயிலமைப்பதற்கும், அடியார்க்கும் அருந்தவர்க்கும் வேண்டுவன செய்தற் பொருட்டும் அந்நிதியினைப் பயன்படுத்தினர்.

ஆராய்ச்சி

சைவத் திருநெறித் தலைவருண் முதற்கண் உலகிற்றோன்றித் திகழ்ந்தவராகிய திருவாதவூரடிகளது இயற்பெயர், அவரது பெற்றோர்பெயர், மரபுமுதலியவற்றைப் பற்றித் திட்பஞ்சிறந்த தெள்ளிய வரலாறு இல்லாமை, தமிழ்மக்கள் தமது பெரியோரைப்பற்றிய வாழ்க்கை வரலாறுகளைச் செவ்விதின் எழுதிவைத்துப் பாதுகாக்கும் நல்வழக்கத்தை இடைவிடாது மேற்கொள்ளத் தவறினரென்பதை நன்கு விளக்கும். அடிகள் ஆதிசைவ மரபினர் என்று வடமொழி ஆலாசியங் கூறியதைச் சுற்றும் உற்று நோக்காது, அவர் அமாத்தியகுலம் என்று தமிழ் நூல்கள் புகன்றமை வியப்பை விளைக்கின்றது. வடநூலினை நேரே கற்று அதனைத் தமிழிலே மொழிபெயர்க்காது, வடமொழிவாணர் கூறுவதைக் கேட்டுத் தமிழ் நூலுடையார் தாங் கூறுங் கதையை எழுதினராதல்வேண்டும். அமாத்தியரென்ற சொல் அமைச்சரைக் குறிக்குமாயின் அமைச்சர் குலமென்ற ஓர் வகுப்பு அந்தணருள் இருந்திருப்பதாய்க் கருத இடமில்லை. ஆளுடைய வடிகள் ஆதிசைவ ரென்று கூறின், ஆதிசைவர் பெருமை பெறுவர்.. அது நல்லதன்று. அவரை அயன்முகத் துதித்த பிராமணனென்று தெளிவாகக் கூறுதல் வரலாற்றிற்கு முரணும். எவ்வாறாயினும், அவர் அந்தணர். அமைச்சராகவுமிருந்தனர். ஆதலின் அவரை அமைச்சர் குல அந்தண ரென்றலாற் படுமிழுக் கியாதுமில்லையென்று கருதிய ஒருவர் கூற்றிற்குச் செவிசாய்த்த தமிழ்வாணர் அடிகள் மரபினை அமாத்தியர் குலமென்றோதி யொழிந்தனர்.

அடிகள் குடும்பம் தெலுங்க நாட்டினின்று இவண் போந்ததென்பர் ஒருசாரார். அந்நாட்டிலே கோதாவரிக் கரையிலே மந்தான காளீச முதலிய ஆதிசைவ மடங்கள் இருந்தனவென்று அசிதாகமங் கூறுகின்றது. தெலுங்கருந் தமிழ்ப் பெருங்குழுவின் ஓர் பகுதியினரே,

'அதெந்துவே', 'எந்து' என்றசொல் தெலுங்கிற் காணப் படுவதாயினும், ஆதியில் தமிழ் நிலவழக்கச்சொல்லா யிருந்திருத்தல் கூடும். 'எந்தா' என்ற சொல், மலை யாளத்திலும் வழங்குவதைக் காணலாம். ஆகமநெறி யைச் சிறப்பித்து, 'ஆகமமாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க', 'மன்னுமாமலை மகேந்திரமதனிற் சொன்ன வாகமந் தோற்றுவித்தருளியும்' என்றினைய பல மொழிந் தருளினமையும், அடிகளது சைவமரபினை வலியுறுத்து மென்க. தமிழ் மக்களுள் ஆதியிற் சமய ஆசிரியராய்ப் பெரும் பயனளித்தவர் ஆதிசைவரே. மருதநில மக் களுள், கடவுள் வழிபாட்டிற் குரியராய்ச் சமயநூல் பேணுங் கடமையை மேற்கொண்ட குழுவினர் ஆதிசைவ ராதலின், அன்னோருட்சைவ முதலாசிரியர் தோன்றித் திருவருள்பெற்றுத் தலைமைபூண்டிலங்குதல் பொருத்த மாவதொன்றே. 'தென்னாடுடைய சிவனேபோற்றி' 'பாண்டிநாடே பழம்பதியாகவும்', 'தென்பாண்டிநாட் டைச் சிவலோகமாக்குவித்த' என்னும் அருண்மொழிக ளானே சிவநெறி பண்டே எழுந்து நிலைத்துத் தழைத் தோங்கிய நாடு தென்றமிழ் நாடென்று அடிகள் குறித் தருளினமையுங் காண்க.

திருவாதவூரடிகள் பதினாறாண்டினுட் கல்விப் பயிற்சி முற்றப்பெற்றார் என்பதனால், அக்காலத்திலே ஐந்தாண்டு முதற் பதினாறாண்டுவரை உள்ள காலமே மக்கள் கல்வி பயில்வதற்கு அமைந்த காலமாய்க் கருதப்பட்டதுபோ லும். பதினாறாண்டிற்குமேற் பொருளீட்டுதற்குரிய முயற் சிகளை மக்கள்மேற்கொண்டனர். திருவாதவூரடிகள் முதலமைச்சராக நியமனம் பெற்றது பதினாறுக்குமேல் முப்பத்திரண்டிற்குள்ளாக இருத்தல் வேண்டுமென்பது திண்ணம். அத்துணை இளமைப் பருவத்திலேயே அரச னுக்கு முதலமைச்சராய் நியமனம் பெறவேண்டுமெனின், அரசியற்றுறையில் நீண்ட பழக்கமுடைய தலைவர்களின் திறமையை நமது அடிகள் அறிவாற்றலாலும் கலைவன்மை யாலும் இளமையிலேயே எய்தினராதல்வேண்டும். பிரம

ராயர் என்றபட்டம் 'பிராமண அதிபதி' என்று பொருள் படும். இச்சொற்றொடர் கி. பி. மூன்றாவது நூற்றாண்டில் வழங்கிற்றென்று கொள்ள இடமில்லை. அது பிற்காலத்தில் முதலமைச்சரைக் குறிப்பதற்கு வழங்கி இவ்வரலாறு எழுதப்பட்ட காலத்தே அதனுள் நுழைந்திருக்கலாம். அக்காலத்தில் அமைச்சர் முதலியோருக்கு வெண்மதிக்கவிகை, சிவிகை, தண்டு, வேழம் முதலிய விருதுகளோடு வேண்டிய பொன்னும் அணிகலனும் தொகுதியாகக் கொடுக்கப்பட்டனவேயன்றி இக்காலத்திற்போல மாதச் சம்பளமாக ஊதியம் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'இந்திரச் செல்வம் போல இயைந்துள இன்பமெய்தி' என்றமையால், பொருள் வளமும் இன்பவளமும் அடிகள் உடையராய்த் திகழ்ந்தனரென்ப. அவர் மணவாழ்க்கை நிகழ்த்தியதாகத் தெளிவாக யாண்டுங் கூறப்படவில்லை. திருவாசகத்துள்

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே
[சூழ்ந்தேனே

என்ற திருப்பாட்டில் ஒருத்தி யென்றது அடிகளது மனைவியாரை என்று சில அறிஞர் கருதுகின்றார்கள். திருவருள்பெற்றபின் தம்மைத் தேடிவந்த தேவியார்க்குக் கடவுள்நிலை உணர்த்துதற்பொருட்டு நிட்டை கலைந்தமையே தமக்குக் கேடு சூழ்ந்ததாகக் கருதினரென்ப. திருவருள் பெறுமுன் மணவாழ்க்கை நடத்தித் திருவருள்பெற்றபின் பேரின்ப வாழ்க்கைத் துணையாகத் தமது தேவியைக் கொண்டிருத்தலாற் போந்த இழுக்கு யாதுமில்லை. இறைவனைக் கண்டு ஞானம் பெறுவதற்குமுன் உலகவாழ்க்கையில் அடிகள் ஈடுபட்டது போன்ற குறிப்புகள் திருவாசகத்தின்கண் உள்ளன. பிறவியறுத்துப் பேரருள் புரியும் பேராசிரியனாகிய இறைவனை நாடிச் செல்லும் ஆர்வமுடைய அருட்சத்தி பதிந்

தார்க்கு வினை வயத்தால் ஐம்புலன்கள் தத்தமக்குரிய பொருள்மேற் செல்லின் அது பேரிடையூறாகத்தோன் றும். அக்காரணத்தால் தம்மை மிகப் பழித்துரைத்தல் பற்றி அவர்களைக் குறைபாடுடையராகக் கருதுதல் தவறு. பெருஞ் செல்வங்களனைத்தையும் நுகர்ந்தும் அரசியற் றுறைகளில் மனஞ்செலுத்திக் கடனியற்றியும் உலகி யல்பில் தலைநின்ற அடிகள், வெளிப்படையாக அமைச்சர் கடமைகளிற் பொழுது போக்கினும் உள்ளத்தினுள்ளே உலக நிலையாமையை நன்குணர்ந்து விடுபேற்றிற்குரிய சிவஞானத்தை நல்கும் அருட்குரவனை இடைவிடாது நாடி நின்றுழன்றனர். 'உறினே பருவமுடல் சிறையென் ருெல்கி யலமாருந் தேடுவனுய்ந்து' என்ற செய்யுள் இவரது மனநிலையைக் குறிக்கும். "நிருத்தனே நிமலா நெற்றிக் கண்ணனே விண்ணுளோர் பிரானே, யொருத்தனே யுன்னையோலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்" என்றதுங் காண்க. அடிகள் தாமரை இலையில் நீர்போல உலகவாழ்க்கையில் நின்று அதனைப் புறத்தே தழுவி அகத்தே துறந்தமையின்,

> "கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகுமாபோ
> லேத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதிநீதி"

என்றனர் கடவுண் மாமுனிவர். திருவருட்சத்தி பதியப் பெற்றவரே அருட்குரவனை வீடுபேற்றின் பொருட்டு நாடிச்செல்வர். உயிர்கட்கு உலகப்பற்று விளைத்தற் கேதுவாகிய அறியாமையின் வலி குறைவுற்று நழுவும் பான்மையுற்ற காலத்திலேதான் திருவருள் உயிரின்கட் பதியும்.

இம்மையிலும் மறுமையிலும் நுகரப்படும் எவ்வுலக இன்பத்தையும் பொருட்படுத்தாது வினையான் வரும் இன்பமுந் துன்பமும் ஒரு நிகரெனக் கருதி இரண்டையும் உவர்க்கும் உள்ள நிலையே இருவினை யொப்பு எனப்படும். இருவினை யொப்பு வந்த விடத்தே அறியாமையாகிய ஆணவமலம் நழுவுந் தகுதியடையும். அதனை மலபரிபாக

மென்பர். இருவினையொப்பும் மலபரிபாகமும் உளதாய காலை உயிரினது அறிவின்கண்ணே திருவருள்பதிதலே சத்திநி பாதமெனப்படும். இவ்வருட்பதிவு நால்வகைப் படுமென்ப. கடவுள் திருவருளை நாடி உலகப்பயன் கருதாது வீடுபேற்றை அவாவிநின்று தஞ்செயலற் றிருத்தல் முதற்படி. இறைவனை அடையும் வழியாதென்று ஆராய்ந்து மேற்செல்லுதல் இரண்டாம்படி. அகத்தால் முற்றும் உலகத்தைத் துறந்து திருவருள்வழி நின்று புறத்தே உலகவாழ்க்கை நடத்துதல் மூன்றாம்படி. அகத்தும் புறத்தும் துறவுநிலையுற்று ஞானாசாரியன் ஒருவனையே தேடிவருந்தித் திரியும் நிலை நான்காம்படி. திருவாதவூரடிகள் நாலாஞ் சத்திநிபாத மெய்தியதாகக் கடவுண்மாமுனிவர் கூறுகின்றார்.

'பரம அஞ்செழுத்தும் ஒன்றும் பராபர முணர்த்தும் ஞானகுருபரன் திருத்தாள் கூட விரும்பினர்' என்றனர். சிவயநம என்னும் ஐந்தெழுத்தில் சிகரம் சிவத்தைக்காட்டும். வகரம் அருட்சத்தியைக் குறிக்கும். நகரம் உயிர்களைப் போகத்திற் செலுத்தும் மறைப்புச் சத்தியை யுணர்த்தும். யகரம் உயிரைச்சுட்டும். மகரம் மலத்தினைக் குறிக்கும். உயிர்கள் நகரவாற்றலாற் பாச வாழ்க்கை யுறும். அருட்சத்தியும் மறைப்புச் சத்தியும் சிவசத்தி ஒன்றேயா மாதலின் வீடுநாடலுறுவார்க்கு மறைப்புச்சத்தி அருட்சத்தியி லொடுங்கி அருட்சத்தியே மேற்பட்டுத்தோன்றும். அதனை நகரம் வகரத்தி லொடுங்குவதென்ப. சிவத்திற் சத்தி ஒடுங்குதலால், சிகரத்தில் வகரம் ஒடுங்குவதாகும். உயிர் அருட்சத்தியின் துணைகொண்டு சிவத்தில் ஒடுங்குவதால் யகரமும் சிகரத்தி லொடுங்குமென்ப. உயிரைப்பற்றிய மலம் வலியற்றடங்குதலால் மகரம் யகரத்தி லொடுங்கும். இம்முறையாக ஐந்தெழுத்தும் சிகரத்தி லொடுங்குதலால் 'பரம அஞ்செழுத்தும் ஒன்றும் பராபரா' என்றது சிவபரம் பொருளையே. சிவத்தைத் தந்தை என்றும் அருளினைத் தாயென்றுங் கூறும் வழக்கமுண்மையால் அருளின்

துணைகொண்டு சிவத்தை யடைவதைத் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடுத லென்ப.

மாயநட் டோரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்றானெழிற்கச்சி யேகம்பனே.

அக்காலத்தில் ஆரியரென்பார் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்குக் குதிரை கொண்டுவந்து வணிகஞ் செய்தனரென்று தெரிகிறது. அரசன் ஏழேழுகோடிப் பொன் குதிரை வாங்கக் கொடுத்தானென்றது மிகுந்த பணம் கொடுத்தானென்று குறித்தவாறும். அக்காலத்தில் வழங்கிய பெருநாணயம் பொன் என்று அழைக்கப்பட்டமையால் அது பொன்னினாலாயது என்று கருதுதல் கூடும். குதிரை வாங்குதற்பொருட்டுப் பாண்டியன் திருவாதவூரடிகளை யனுப்பினமையால், குதிரைகளின் இலக்கணத்தை அடிகள் பிறரினும் நன்கறிந்தவரென்பது தெளிவு. குதிரை வாங்கச் சென்ற அடிகளது பரிசனங்களுள் சீனர் மாளவர் மலாடர் முதலியவ ரிருந்தனரென்பதும் பிறவும் உயர்வு நவிற்சியின்பாற்படும். அடிகள் திருக்கோயிலிற் சென்று காரியம் பலித்தல் வேண்டுமென்று வேண்டியதாகவும், அப்பொழுது ஒரு சைவ வேதியன் திருவெண்ணீறளிப்ப அதனை வாங்கி உவப்புடன் அணிந்து காரியம் பலிக்குமென் றெண்ணின ரெனவுந் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் இயம்புகின்றது. இது மக்களியற்கையொடு பொருந்திய புனைவுரையாகவு மிருத்தல்கூடும்.

திருப்பெருந்துறைப் பெயர்க் காரணத்தைக் கடவுண்மாமுனிவர் ஓர் செய்யுளில் அழகாக விளக்கியுள்ளார்.

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தா
லெம்பர னருட்கரையி லேறுதுறை யாமா
லம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர்.

அடிகள் செல்லும் வழியிலுள்ள மரம் கொடி முதலிய வைகளை மக்கள்போல உணர்ச்சியை யுடையவைகளா கவும், அவை எவ்வாறு அடிகள் அகக்கண்ணிற்குத் தோன்றினவெனவும் புனைந்துரைத்ததுந் தற்குறிப் பேற றத்தின்பாற்படும். இறைவன் அருட்குரவனைத் திருக் கோயிலுள் ஒருபுறம் அமர்ந்திருந்தன ரென்று திரு வாலவாயுடையார்புராணம் கூறுதல் வரலாற்றிற் கொத்த தன்று. அடிகள் திருப்பெருந்துறையில் திருக்கோயி லெடுத்ததற்குமுன் ஆண்டுக் கோயிலிருந்ததாகத் தெரிய வில்லை. அடிகள் திருப்பெருந்துறை யடைந்ததும் நெஞ் சொடுங்கிப் பேரன்பு மூகிழ்க்கப் பெற்றாரென்னுந் திரு வாலவாயுடையார் திருவிளையாடற்புராணப் பகுதியே பொருத்தமுடைத்து. கண்ணப்பநாயனார் திருக்காளத்தி மலையில் ஏறியபோது தம்மேல் இருந்த பாரங் குறையுற்ற தாக உணர்ந்து ஒப்பற்ற அன்புருவமாயினாரென ஆசிரியர் சேக்கிழார் குறித்தமையை உற்றுநோக்குக. 'பேணு தத்துவங்களென்னும் பெருகு சோபானம் ஏறி ஆணை யாம் சிவத்தைச் சாரவருபவர்போல' என்றதுங் காண்க. அருட்குரவன் முன்னர் மந்திரியார் மேன்மையுடன் வந்து நின்றார் என்பதும், குரவன் திருக்கையிற் சிவஞான போதம் இருந்ததென்பதும் அதனைப்பற்றி அடிகள் குரவனை வினவினர் என்பதும் அனைய பிறவும் பிற்காலத் துப் புனைவுரைகளாமென்று தெளிக. ஆசிரியர் மெய் கண்ட தேவனார்முன் அருணந்தி முதல்வர் அருளுப தேசம்பெற நின்ற முறையையே மனத்திற்கொண்டு கடவுண்மாமுனிவர் 'மந்திரியார் மேன்மையுடன் வந்து நின்றார்' என்றனர். சிவஞானபோதமென்பது ஆசிரியர் மெய்கண்டாரால் முதற்கண் இயற்றப்பட்டதாதலின், சிவபெருமான் றிருக்கரத்திற் சிவஞானபோத மிருக்கக் காரணமில்லை. கடவுண்மாமுனிவர், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களில் மிக்க தேர்ச்சியுடையராய், அவற்றுட்போந்த கருத்துக் களையும் அவற்றைப்பற்றிய சரித்திரங்களையுந் தமது புராணநூலுட் கலந்துள்ளன ரென்று தெளிக.

எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் இயல்பை அக்கடவுளே வீடடையுந் தகுதியுடையார்க்கு அறிவுறுத்தியருளினலொழியச் சிற்றுயிர்கள் அதனையறிதல் கூடாது. உயிர்கள் மூவகைப்படுவர். உயிர்களைத் துன்புறுத்துவன், [1]பற்று, வினை, மயக்கம் என்பன. பற்றினன் மாத்திரங் கட்டுண்டவர், பற்றினலும் வினையினலுங் கட்டுண்டவர், பற்று வினைமயக்கமென்னு மூன்றினலும் கட்டுண்டவர் என்னும் மூவகையாருள், [2]முதல் வகுப்பார்க்கு இறைவன் தனதியல்பை உண்ணின் றுணர்த்துவ னென்றும், [3]இரண்டாம் வகுப்பார்க்கு இறைவன் தெய்வத் திருமேனி கொண்டு ஆட்கொள்ளுவா னென்றும், [4]மூன்றும் வகுப்பார்க்கு மனிதவடிவத்தோடு வந்து மெய்யறிவுச் சுடர் கொளுத்துவானென்றுஞ் சைவநூல்கள் கூறும். மாணிக்கவாசகப் பெருமானுக்குச் சிவபெருமான் மக்கட் போர்வை போர்த்தெழுந்தருளித் திருவடிஞானம் நல்கினன். இனி மக்களும் திருவருள்பெற்ற பெரியாரை அதிட்டித்து நின்று இறைவன் குருமொழி வைத்தலுமுண்டென்பது, ஆசிரியர் மெய்கண்டதேவர்க்குப் பரஞ்சோதிமாமுனிவர் சிவஞானமளித்தன ரென்ற வரலாற்றினற் போதரும். இங்ஙனம் இறைவன் அருள்வது அளவற்ற பெருந்தவத்தால் வீடுபேற்றிற்குரிய தகுதியைப் பெற்றவர்க்கேயன்றி யேனையோர்க்கன்று. சைவநூற் கொள்கைப்படி, படைப்புக்கடவுளும், காப்புக்கடவுளும் இறைவனது பேரருளைப் பெற்று வீடடைதற்குரிய பெருமையுற்றிலராதலின், அக்கடவுளரறியா முதலவர் சிவபெருமானென்று மறைகள் முழங்குவனவாயின. ‘திருமாலாம் அவன் விருப்பெய்தவும் அலரவனாசைப் படவும் நின்னலர்ந்த மெய்க்கருணையு நீயும் அவனியிற் புகுந்தெமையாட் கொள்ளவல்லாய்’ என்றும், ‘அன்பாகி மற்றருந்தவ முயல்வார் அயனுமாலுமற் றழலுறு மெழுகாம் என்பராய் நினைவா ரெனைப்பலர் நிற்க, இங்கு

---

1 ஆணவம் கன்மம் மாயை

2 விஞ்ஞானகலர். 3 பிரளயாகலர். 4 சகலர்.

ன்னை யெற்றினுக்காண்டாய்' என்றும் அடிகள் மொழிந்தருளினமை காண்க. இறைவன் பயன் கருதிய அன்பர் நினைந்த வடிவோடு தோன்றி அவ்வவர் விரும்பு வனவற்றை யளித்தருள்வ னெனின், வீட்டிற்குரியார்க் கன்றி யேனையோர்க்குத் தன் மெய்யியல்பினை உணர்த்த மாட்டா னென்று தெளிக. இக்கருத்துப் பற்றியே, அடிகள் இறைவனை 'ஒளிக்குஞ் சோரன்' என்றார், ஆளுடையபிள்ளையாரும், 'உள்ளங் கவர்கள்வன்' என்ற னர். தன்னுணர்ச்சி மிகுந்தார்க்கு மாத்திரம் அவன் ஒளிப்பானல்லன், அவனைத் தனது சூழ்ச்சி யொன்றாற் காணலுறுவார்க்கும், நாலுணர்ச்சியான் மட்டுந் தெரியக் கருதுவார்க்கும், உருவவழிபாட்டு மாத்திரத்தாற் காண லுறுவார்க்கும் யோகநெறியாற் காணலுறுவார்க்கும் பிறர்க்கும் ஒளித்துத், தாழ்வெனுந் தன்மையுடையராய்ச் சார்பு[1], செயல்[2], ஒருமை[3]யென்னு நிலைகளைக்கடந்து திருவருள் பதியப் பெற்ற மேலோர்க்கே இறைவன் தன் மெய்ந்நிலை யுணர்த்துவானென்பார்,

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
ஆனெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வானுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறு மின்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்

என்றருளினர்.

[1] சரியை, [2] கிரியை, [3] யோகம்.

இறைவன் தாங் காண நேரில் வந்தருளியதை அடிகள்

தேவரு மறியாச் சிவனே காண்க
கண்ணு லியானுங் கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க.

என்றமையா லினிது விளக்கியருளினர்.

கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி

என்றமையால் இறைவன் கனவில் வந்திலனென்பது தெளிவு.

பாவனையான கருத்தினில் வந்த பராவமு தாகாதே

என்றதுங் காண்க.

அவன் மானுடச்சட்டை சாத்தி வந்தமை

ஈறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்

என்றவிடத்து விளக்கப்பட்டது.

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து பார்ப்பானென

என்றதுங் காண்க. திருப்பெருந்துறையி லாட்கொண்டமை பலவிடத்துஞ் சுட்டப்பட்டது.

போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறிவாரெம் பிரானு வாரே.

இறைவன் பேராசிரியனாய் வந்தாட்கொண்டதை நயம்பெற ஒரு திருப்பாட்டிற் கூறியுள்ளார். அது வருமாறு,

> கருணையினாற்
> பெரியோ னொருவன் கண்டுகொ ளென்றுன்
> பெய்கழ லடிகாட்டிப்
> பிரியே னென்றென் றருளிய வருளும்
> பொய்யோ வெங்கள் பெருமானே.

இறைவனுக்கே அடிகள் தமது உடல் பொருள் ஆவி மூன்றையு மொப்புவித்த இடத்துப் பாண்டியன் பொருளையு முடனளித்தது எவ்வாறு பொருந்துமெனின், பாண்டியன் பொருளையும் இறைவன் பொருளாகவே அடிகள் கருதினமையா லென்க. தன் கையகத்துப்பட்ட பொருளனைத்தையும் இறைவனதாகவே அடிகள் கருதினர். இறைவன்பால் தன் பொருளின் ஒரு பகுதி ஒப்புவிக்கப்பட்டால், அவ்வளவு பொருட்குரிய பெருநலத்தைப் பாண்டிய மன்ன னெய்துவா னென்பதும் நாயனார் திருவுள்ளக் கிடையாயிருத்தல் கூடும். பொருளின் பயனைத் துய்த்தலுறுவார்க்குத் துணைநிற்பார், அப் பொருள் ஒன்று பலவாய்ப் பெருகி யோங்குதற்குரிய செவ்விய முறையில் அதனைச் சேமித்து வைப்பின், பொருளுடையாரால் அவர் பாராட்டப்படுதலே உலக வழக்கிற் காணப்படும். சேமமுறையின் பெருநலனை யுய்த்துணராதானே அவரை அறியாமைபற்றிக் குறை கூறுவன். அரசனுக்குப் பெருநண்பராய்த் திகழ்ந்த அமைச்சர், அவன் பொருட்டுப் பெருங் கிழமை பற்றிச் செய்த பெருநன்மையின் வன்மையை அவன் முதற்கண் அறியாது சினங்கொண்டாலும், பின்னர் மெய்யுணர்ந்து மேன்மை யுறுவானென்ற திண்ணிய கொள்கைபற்றி, ஆளுடைய அடிகள் அரசனது நிதியையுந் தமது அருட் குரவர்பா லொப்புவித்தன ரென்று கோடல் இழுக்காது. சிவஞானம் பெற்றுச் சித்தஞ் சிவமாகப்பெற்ற வாதவூரடிகட்கு உலகர்விதியும் விலக்கு மொவ்வா. அப்பெருந் தகையார் யாது செய்யினும், அது சிவச்செயலாய தவச் செயலா மென்பது.

> சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
> மத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ

என்னும் அடிகளது திருவாக்காற் றெளிக.

இக்கருத்துப் பற்றியே சிவஞான சித்தியாருடை யாரும்.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினே டாடலிவை பயின்றிடினும் பயில்வார்

என்றார்.

கடவுண் மாமுனிவர் இறைவன் ஞானேபதேசஞ் செய்த முறைமையைப் பிற்காலத்திலே நிருவாண தீக்கை செய்யு முறைமைக்கு ஒத்தவாறு கூறியுள்ளார். திருவாலவாயுடையார் திருவிளையாடலில் இம்முறை கூறப் படவில்லை. திருநோக்கினாலும் நினைவாலும் தொடுதலாலும் மலமறுத்துப் பேரறிவு நலகினன் என்ற அளவே அதனுள் கூறப்பட்டது. சிவபெருமான் வாதவூரடிகளுக்கு அறிவுறுத்தியதாகக் கூறப்படும் கருத்துக்கள் பலவும் நூலாசிரியர் கருத்துக்களே. ஞானம் பெற்றவுடன் இறைவன் வாதவூரடிகளைப் பாடும்படி கட்டளையிட்டதாகவும், அவர் சென்னிப்பத்து அச்சோப்பதிகம் என்பவற்றை அடிகள் பாடியதாகவும், பழைய திருவிளையாடல் பகர்கின்றது. அது மெய்யாயிருத்தற்குரியதே. ஆனல் இப்பதிகங்கள் திருவாசகத்து முதற்கண் வைக்கப் படவில்லை. காலமுறைப்படி திருவாசகப் பதிகங்கள் தொகுக்கப்படவில்லை.

திருவாதவூரர் அளித்த நிதியைத் திருப்பணிக்கும் அருந்தவர்க்கும் அலந்தவர்க்கும் பயன் படுத்தும்படி இறைவன் வற்புறுத்தினர் என்றமையாலே, நல்லறத்திற் குந் தக்கார்க்கும் வறியாருக்குமே ஒருவனது பொருள்

பயன்படற்பாலதென்பது தெளியப்படும். ஏனையோருக்குப் பொருளை வழங்குதல் சிறந்த அறமாகாதென்பது தெளிக.

கதைத் தொடர்பு

இறைவன் திருவாதவூரடிகளுக்கு அருள்புரிந்த பின்பு அடிகளுக்குத் தில்லையிற் பரமுத்தி யருளுவதாக மொழிந்து தமது அடியாரோடு மறைந்தருளினர் என்பது

நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியரை
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்

என்றருளியவாற்றால் தெளியப்படும்.

திருப்பெருந்துறையில் இறைவன் கட்டளைப்படி பொருள்களைப் பயன்படுத்திய பின்னர், அடிகள் ஒப்பற்ற அன்பு வடிவமாய் உலகை மறந்து முத்தர் நிலையுற்றனர். அவர் நிலையை உணர்த்தும் ஓர் செய்யுள் வருமாறு,

'அன்புட னுக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வ
ரின்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணார் ஞானநல் லறிவே கொண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர்தங் கொள்கை யானார்.'

நின் கோயில் வாயிற் பிச்ச னாக்கினாய்

என்றும்,

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும் வந்(து) என்மனத்தே

என்றும் அருளிச்செய்தமையும் இதனை வற்புறுத்தும். தம்மைப் பித்தனென்று உலகர் கூறுவதற்குக் காரணம் அடிகளே விதந்துள்ளார்:

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர்
காரணமிது கேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு
முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
அத்த னண்டுதன் னடியாரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

திருவாதவூரடிகள் சிவபோகக் கொழுந் தேறல் வாய்மடுத்துப் பிறிதொன்றையுங் கருதாதிருந்த வளவிலே அவருடன் குதிரைவாங்கச் சென்றவர்கள் அவரை நோக்கிக் குதிரை வாங்கக் காலந் தாழ்த்ததைப்பற்றி அரசன் முனிதல் கூடுமென்று தெரிவித்து அவரைக் குதிரை வாங்குதற் கழைத்தபோது அடிகள் 'நீங்கள் யாதும் என்னிடங் கூறவேண்டாம் போங்கள்' என்று கழறினர். உடனே அவர்கள் செய்வதறியாது தென்னவன்பாற் சென்று திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் ஓர் பூங்காவில் அடியார் புடைசூழ விருந்த பெரியார் ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு அவர் கட்டளைப்படியே பொருளெல்லாவற்றையுஞ் செலவழித்துவிட்டுத் திருநீறுங் கோவணமுமே தரித்துக்கொண்டு ஒருவரோடும் பேசாது பித்தராயினரென் றுரைத்தனர். இதனைக் கேட்ட மன்னன் பெருஞ்சினங் கொண்டு கடு நடைத் தூதரிடம் அடிகட்கு ஓலையனுப்பி அவரைக் கையோடழைத்து வரும்படி ஏவினன். ஏவலாளர் திருப்பெருந்துறைக்குப்போய் அடிகளைக் கண்டு வணங்கி அரசர் திருமுகத்தைக் காட்டினர். இறைவன் திருமுகத்தை யன்றிப் பிறிதொரு முகத்தையுங் காண விருப்பமில்லாத ம்பரன்பர் ஓலையை வாசிக்கும்படி கட்டளையிட்டனர். ஓலையில் எழுதியிருந்தது யாதெனில் 'பரிவாங்கக்கொண்டுபோய்ப் பொன்னைப் பிறிதொரு வழியிற் செலவழித்துவிட்டுப் பரிகொள்ளாது கோவணங் கொண்டிருப்பது அரசரது கருமஞ் செய்வார்க்கு அழகா? வேந்தனைப் பிழைத்துச் செய்யும் செயல் யாது பலிக்கும்? அரசரொடு பயிலுதல்

பாம்பொடு பழகுவதைப் போலுமென்று நீர் தெரிந்திருப்பீராயின், இவ்வோலை கொண்டுவருந் தூதரோடு உடனே மதுரைக்கு வருக' என்பதே. இதனைக்கேட்டு அடிகள் இறைவனும் இறைவனடியாருமே எம்மை அடிமை கொள்ள வல்லாரன்றி மன்னன் எம்மை இவ்வாறு கொள்ளுதல் பொருந்துமோ? கூற்றுவனும் எம்பால் ஓலைவிட அஞ்சுவன். இறைவன் தமராவார் அரசர்க் கஞ்சுவரோ என்று கூறிவிட்டுத் தமது அகக் கண்ணுக் குத் தோன்ற இறைவனிடம் இச்செய்தியை அறிவிப்ப, இறைவனும் அடிகளைக் கடைக்கணித்து 'நீ வருந்தாதே, மன்னவன்பால் தூதரொடு சென்று ஆவணித் திங்கள் மூலநாளன்று நல்ல குதிரைகளெல்லாம் வந்து சேரும், தூதர் ஓலை கொணர்ந்தமையால் நான் விரைந்து முன்னே வந்தேன் என்று நீ அரசனுக்கு மொழிக' என்றருள் செய்தனர். அடிகளும் அமைச்சர் வேடம்பூண்டு இறைவனைத் தொழுது தூதரோடு புறப்பட்டு மதுரைப்பதி வந்தடைந்தனர்.

மன்னவன்முன் னேகி வணக்கத்துடன் இறைவன் தமக்குக் கொடுத்த ஒரு மாணிக்கத்தைக் கையுறையாகக் கொடுத்து அவன் கட்டளைக் கிணங்கித் தமதிருக்கையி லிருந்தனர். அரசன் செய்தி வினவியபோது 'நின்னுடைய நிதி கொண்டு வாங்கிய நல்லிலக்கண மமைந்த குதிரைகள் மதுரைக்கு வருதற்குரிய நல்லநாள் ஆவணி மூலமென்று தெரிந்து இடைவழியில் திருப்பெருந்துறையில் தங்கினேன். சூழ்ச்சிமிக்க உள்ளத்தினர் சிலர் சொல்லக்கேட்டு நீ விடுத்த ஓலை ஏதுவாக நான் இப்பொழுது வந்தேன்' என்றனர். அரசனும் மனமுவந்து ஓலைவிடுத்தது பிழை என்றுணர்ந்து அடிகளோடு பழைய நண்பு பாராட்டி அவருக்கு வேண்டுவன நல்கி அவரை மனையிலடைச் சென்றிருக்கும்படி பணித்தான். அவ்வாறே அடிகளும் தமதில்லம் புகுந்து வீற்றிருக்குநாளில் குதிரை வரக் குறித்தநாளிற்கு இரண்டுநாள் முன்னர் அமைச்சர்களுள் ஒருவன் அரசனிடஞ் சென்று திருவாதவூரர்

பெருந்துறையில் நின் பொருளனைத்தையுஞ் செலவழித்து விட்டு இங்குவந்து உன்னுடைய சிற்றத்திற்குத் தப்பி உய்யக்கருதிப் பொய் கூறினர் என்றனன். அரசன் ஐய முற்றவனாய்ப் பெருந்துறைக்கு அருந்தூதர்களை யனுப்பி அங்கே குதிரைகள் உளவா என்று பார்த்துவரும்படி சொன்னான். அவர்கள் போய்ப் பெருந்துறையிலும் அதன் பக்கத்திலுள்ள பிறபதிகளிலும் பரித்திரள் காணாது மீண்டு, வாதவூரர் மொழிந்தது பொய்யென் பதை உறுதிப்படுத்தினர். அதனைக்கேட்ட அரசன் வெகுண்டு தண்டலாளரை ஏவி அடிகளை வருத்திப் பொருள் முழுவதையும் வாங்கும்படி கட்டளையிட்டான். தண்டலாளர் அடிகள்பாற் சென்று அரசன் கருத்தைத் தெரிவிக்க அவர் வாளா விருந்தமையால், அவரைப் பிடித்துச் சிறைச்சாலையிலிட்டனர். அப்போது அப் பெருந்தகையாரது வருத்தத்தைக் காணப் பொறுக்காத வன்போலக் கதிரவன் மேலைக்கடலில் ஆழ்ந்தனன். அர சன்மேற் சினங்கொண்டு அவனை விழுங்கும்பொருட்டு வெண்பிறையாகிய வளைபல்தோன்ற வாய்திறந்த பேயின் கொள்ளிவாய்போலச் செவ்வானம் விளங்கிற்று.

நல்லவர்க்குற்ற தீங்கைக்கண்டு நகையாடுஞ் சிறி யர்போல முல்லைகள் மலர்ந்தன. அதனைக் கண்டுவருந்தும் நல்லவர் உள்ளம்போலக் கமலங்கள் குவிந்தன. தெய்வத் தன்மை வாய்ந்த திருவாதவூரடிகளது துயரத்தைப் பிறர் கண்டு வருந்தலாகாதென்று இரவாகிய நங்கை தனது இருட்கரத்தால் மக்கள் கண்களை மறைத்தனள். மந்திரித் தலைவருக்கும் இவ்வாறு மன்னன் பகைவிளைத்தல் கூடுமோவென்று வருந்திக் காதலரை அகன்றுறையும் மடவார்போல, நன்மக்கள் பலர் துயிலொழிந்தனர். அவ் விரவு கழிந்து விடியற்காலம் வருங்காலை அடிகள் இடரும் நிலையை ஆறுமுகக் கடவுளுக்கு உரைப்பதுபோலக் கோழிகள் கூவின. திருக்கோயில்களில் இறைவன்பால் முறையிடுவதுபோலச் சங்குகள் முழங்கின. மறுநாளும் அரசன் பொருளை மீண்டளிக்காமையால் அடிகளைக் காவ

லாளர் வெய்யிலில் நிறுத்தினார்கள். அப்போது அவர் இறைவனை நோக்கி வாழாப்பத்து அருட்பத்து என்னுந் திருப்பதிகங்களைப் பாடினாரென்று திருவிளையாடற் புராணங் கூறுகின்றது.

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

அடைக்கலப்பத்தும் குழைந்தபத்தும் அக்காலத்திலேயே அருளிச்செய்யப்பட்டன என்ப. திருவாதவூரடிகளது முறையீட்டினைக் கேட்ட இறைவன் நரிகள் பலவற்றை நற்குதிரைகளாக மாற்றி இமையவர் பலரையுங் குதிரைத் தலைவராகக்கொண்டு தாம் ஆரியவணிக வேடம்பூண்டு திருப்பெருந்துறையி னின்று புறப்பட்டுத் திருவாதவூர் வழியாகவந்து அடிகட்குப் பாதச் சிலம்பொலி காட்டி விட்டு இவுளித் திரள்களைக் கூடன்மா நகரத்திற்குச் செலுத்தி வந்தனர். குதிரையின்றிரள் வருவதைக் கண்டவர்கள் அரசனுக்கு அதனைத் தெரிவிப்ப அரசன் மகிழ்ச்சி மிக்கவனாய் அடிகளை அச் சிறை நீக்கிக் குதிரைகாண வரும்படி அழைத்துக் குதிரைப்படை உலாவுதற்குரிய செண்டுவெளி என்னும் நிலப்பரப்பின்பாங்கர் ஓர் முத்துப் பந்தரின் கீழ்ப் படைசூழ அரசன் வீற்றிருந்தான். அப்போது பரித்திரளானது எங்கணுந் துகளெழுந்து பரவ, எக்காளம் முழவம் முதலியன ஒலிப்ப, கடல் பொங்கி வருவதுபோல் ஆவணிமூலத்தன்று மதுரையில் வந்து நிறைந்தது. அக்குதிரைப் பெருஞ்சாத்தின் தலைவராகிய சிவபெருமான் அரைக்கச்சில் உடைவாளை ஆர்த்துப் பச்சைநீலம் முதலிய பன்னிறமணிக் கோவைகளணிந்து

பட்டுஞ் சட்டையுந் தொப்பியுமணிந்து கையிற்கொண்ட செண்டொடு ஒருவெண் குதிரையிலேறித் திருவடியிற் கட்டியமணியும் அரைக்கச்சையிற் கட்டியமணியுங் குதிரையின் இருபக்கங்களிலுந் தொங்கவிட்ட மணிகளும் இன்னிசை ஒலிப்பச் சென்னிமேற் கவித்த செழுங்குடை வயங்க, ஆரிய மன்னன் வருவதுபோல் வந்தருளினர். மன்னவன் இறைவர் திருக்கோலங்கண்டு பெருவியப் புற்றனன். மணிவாசகப் பெருமான் இறைவன் திருவருளை வியந்தனர். மன்னன் முனிவரை அழைத்து; ஆரியத்தலைவரை, கொண்டுவந்த குதிரைகளின் வகைகளையும் அவற்றின் வன்மைகளையும் ஒரு வீதியின்கண் குதிரை ஏற்றஞ் செய்துகாட்டும் வண்ணங் கேட்டருள்க என்றனன். அடிகளும் இறைவனுக்கு வேலை கொடுப்பதைப்பற்றி நினைந்து வருந்தினுலுந் தமது வருத்தத்தை வெளிக்குக் காட்டாது அரசன் கருத்தினை இறைவருக்குத் தெரிவித்தனர். அதற்கு வணிகத்தலைவர் இசைந்து பல்வகைப்பட்ட குதிரை ஏற்றங்களை எல்லாம் இனிதாக ஏறிக் காட்டித தாளத்திற் கேற்றபடி நடனஞ் செய்யுங் குதிரை ஒன்றின்மீதேறி அரசனுக்கு எதிர்வந்து நின்றார்.

அரசன் விலைமதித்தற்கு அரியதொரு பொன்னுடையைக் குதிரைத் தலைவருக்குக் கொடுக்க, அவர் அதைத் தமது சவுக்கின்மீது ஏற்றுப் புன்னகைசெய்தனர். அவர் குதிரையினிழிந்து வந்து பணிவொடுவாங்கித் தலையிற் கட்டிக்கொள்ள வில்லை யென்று அரசன் வெகுண்டபோது அங்ஙனம் பரிசினை ஏற்றுக்கொள்ளுதல் ஆரியநாட்டு வழக்கமென்றுகூறி அடிகள் அரசனின் சினந்தணிவித்தார். பின்னர்க் குதிரைநூல் வல்லாரை அழைத்து, வந்த குதிரைகளின் இலக்கணத்தை அரசன் ஆயத் தொடங்கினன். குதிரைநூல் வல்லவர்கள் கெடுதியைக் காட்டும் எண்வகைச் சுழிகளுங் கொம்புபோல நீண்ட செவிகளும் முறுகிய செவிகளும் ஒருகாற் கறுப்பும் முக்கால் வெளுப்பும் நீலகண்டமும் வித்தின்மையும் முகம் வால் கால் இவைகளிற் சுழியின்மையும் ஆகிய குற்றங்க

வின்றி, தலையில் இரண்டு நல்ல சுழிகளும் கொப்புளில் நான்கு சுழிகளும் மார்பில் இரண்டு சுழிகளும் நெற்றியில் ஒழி சுழியும் உதட்டில் ஒரு சுழியும் உடையனவாய், நரி கரி கருங்காகம் நாய் பன்றி முதலிய குரல் இல்லாதன வாய்க் கடல் முகில் சங்கு காளே முழவு இவற்றின் ஒலிகளை யுடையனவாய், புலி கரடி கழுதை செந்நாய் முதலிய வற்றின் நிறம்பொருந்தாது, முத்து திங்கள் நீலமணி தாமரைத்தாது பொன் காயாம்பூ செவ்வரத்தமலர் பசுங் கிளி முதலியவற்றின் நிறத்தையுடையனவாய், அகன்ற நெற்றியும் உயர்ந்த மேலுதடும் ஒத்து விளங்கும் வெண் பற்களும் நறுமணமுங் காற்றினுங் கடிய வேகமும் உடை யனவாய், உள்வளைந்து முக்கோணம்போல விளங்கும் முகத்தையுடையனவாய், உடம்பின்கண் தசைப்பற்று மிகுதியுமில்லாதனவாய், ஒரே நிறமான தலைமயிரும் பிடரிமயிரும் உடையனவாய், குவிந்து உட்சுழிந்த குளம்புகள் உடையனவாய், நெளித்த முதுகும் திரண்ட தொடைகளும் நீண்டவாலும் நெய்த்த உடம்பும் உடை யனவாய், உயர்ந்த எழுவகைக் குலத்தினவாய், பஞ்ச கல்யாணி, மங்கானன், சாரங்கன் முதலிய பதினைந்து வகுப்பினுட்பட்டனவாய் ஆரியத்தலைவர் கொணர்ந்த குதிரைகள் திகழ்கின்றனவென்று கூறிய பின்னர், அவற் றின் விலையை மதித்து அவை தாங்கொடுத்த பொருளினும் எண்மடங்கு விலை மதிப்புடையன என்று தெரிந்து மன்னன் மிகுந்த மகிழ்ச்சியடைந்து குதிரைத் தலைவரைக் கயிறுமாறிக் கொடுக்கும்படிகேட்டனன். கயிறு மாறிக் கொடுத்தவுடன் குதிரைகளெல்லாம் பாண்டியனது குதிரைப்பந்தியிற் சேர்க்கபபட்டன. குதிரைத் தலைவரும் இனியாதுங் குறைகூறுதல் கூடாதெனப் பாண்டியனிடம் மொழிந்துவிட்டுக் கீழ்த்திசை நோக்கிச் சென்றனர். அரசனும் வாதவூரடிகளைப் போற்றி மனைக்கேகும்படி விடைகொடுத்துத் தானும் அரண்மனை சேர்ந்தனன்.

இரவு வந்தபின் குதிரைகளெல்லாம் பெருங் கூச்ச லுடைய நரிகளாய் மாறி மதுரைப் பதியிலுள்ளார்க்குத்

தூக்கத்தைக் கெடுத்து இருந்த பழைய குதிரைகளையுங் கொன்று மண்டபங்கள் கோபுரங்கள் அரசவீதி கடை வீதி முதலிய இடங்களெல்லாந் திரிந்து கூக்குரல் எழுப்பின. நரிக்கூட்டம் வந்த குதிரைக் கூட்டத்திலும் அதிகமாகப் பெருகிற்று. அரசனது படைவீரர் தக்க ஆயுதங்களுடன் நரிகளை எதிர்த்தபோது அவைகள் சிங்கம் போலப் போர் செய்யத் தொடங்கின. மதுரையூரிலுள்ளாரெல்லாரும் நரிகளை ஓட்டுவாரும், அவற்றிற்காகப் பயந்து ஒளிப்பாரும், ஒளிக்குமிடந் தேடுவாரும், வீட்டுக் கதவுகளைத் தாழிட்டு அடைத்துத் தம்மைக் காத்துக் கொள்வாரும் ஆயினர். இங்ஙனம் பரிநரியாயதற் கேது நாட்டில் தவக்குறைவு ஏற்பட்டதனாலோ, மன்னவன் செங்கோல் மாறியதாலோ என்று மக்களெல்லாரும் பேசத் தொடங்கினர். குதிரைத் தொழிலாளர் வாயிலாக அரசன் பரி நரியான செய்தி கேட்டனன். குடிகளது ஆரவாரமும் குறு நரிகளின் ஓசையும் அரசன் செவிகளிற் காய்ச்சிய வேல்போல நுழைந்து துன்புறுத்தின. அரசன் அளவற்ற சீற்றமுற்றான். ஆலவாய்ப் பெருமான் கட்டளையால் நரிப்படைகள் ஊரைவிட் டோடின. அரசன் தனக்குக் கண்போன்ற தண்டலாளரை அழைத்து அடிகளை உடனே தன்முன் கொணரும்படி ஏவினன். அடிகள்பாற் சென்று அவரை அவர்கள் அழைத்தகாலை, அவர் புன்முறுவல் செய்து திருநீறணிந்து புறப்பட்டு அரசன் முன்வந்து நின்றார். அரசன் அவரைக் கண்டு பொங்கிய சினமுடையவனாய் ஏனை அமைச்சரைப் பார்த்து 'நம்முடைய பொருள்களை எல்லாம் இவர் இரவலர்க்குக் கொடுத்துவிட்டுக் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிக் காட்டின மாயத்தைக் கண்டீரா' என்றனன். பின்னர்த் தண்டலாளரைநோக்கி 'இவரைக் கொண்டு நல்ல வெயிலிலே ஒரு வளைப்பினுள் நிறுத்தி இவர் கவர்ந்த பொருள்களை யெல்லாம் வாங்குங்கள்' என்றான். அங்ஙனமே அவர்கள் வைகை ஆற்று மணலிலே அடிகளை நிறுத்தித் துன்புறுத்தினார்கள். அப்போது அவர் எண்ணப்பதிகம் பாடியருளினர். இறைவன்

மிகக் கருணைகூர்ந்து வைகையாற்றிற் பெருவெள்ளம் வரும்படி செய்தனன். வைகையாறானது இருகரையும் பெருக்கெடுத்துக் கடல்போலப் பெருகியோடிற்று. வெண்முத்தென்னும் பற்களைக் காட்டி, வெண்புனலாகிய ஆடையணிந்து, செங்காந்தளாகிய கைகளை வீசி, தெங்கின் குரும்பைகளாகிய தனங்களை இடை இடையே காட்டி, மாந்தளிராகிய கால்களின்மீது திரைகளாகிய சிலம்புகளொலிக்கப் பெருமித நடைகொள்ளும் பொதுமகளிரை யொத்தது. பெரிய கொம்புகள்போன்ற அலைகளினாலே இருகரைகளையுங் குத்திச் செறிந்துநின்ற மரங்களை முறித்து, வயல்களிலுள்ள நெல்லையெல்லாம் அழித்து, நுரைத்திரள் சிந்திக்கொண்டு வண்டுகள் மொய்க்க வருதலால், வைகை நதியானது மதயானையை நிகர்த்தது. வைகையாறானது வரம்புகடந்து மதுரை மூதூரின் மதில்களைத் தாக்கி அந்நகரை யழிப்பது போன்று பெருகி வந்ததை யாவருங் கண்டு கவலைகொண்டார்கள். அப்போது அரசனும் அச்சுற்று அமைச்சரை நோக்கி 'இப்பெருக்கிற் கேது நீதிக்குறைவோ'வென்று வினவியகாலை 'அரனடிப்பேரன்பராகிய வாதவூரடிகளை வருத்திய குற்றமே இதற்குக் காரணம்போலும்' என்றார்கள். அவனும் அவ்வாறே நினைந்து வாதவூரடிகளை அழைப்பித்து 'நீர் செய்த பேரறத்தின்பயன் என்னைச் சாரும் என்றுணராது உம்மை யொறுத்தது எனது பெருந்தவறே; அதனை நீர் பொறுத்துக்கொண்டு வைகையானது நம்மூரை யழிக்காதவண்ணம் நீரே அதனை அடக்கவேண்டு'மென்று குறையிரந்தான். அவர் பரிமேல்வந்த பெருமானார் திருவடிகளை நினைந்தவுடன் வைகைப் பெருக்கானது குறைந்து அடங்கிச் சென்றது. வைகைக் கரையிற்சென்று அடிகள் நின்றவுடன் அரசனது அமைச்சர் பலர் அவரை வணங்கி இனி யாது செய்யவேண்டு மென்றார்கள். அப்போது அடிகள் உடைந்த கரையை விரைவில் நகரமாந்தர் எல்லாருங் கூடிச் செம்மைப்படுத்த வேண்டுமென்றனர். உடனே அவர்கள் நகரெங்கும் பறையறைவித்தனர். நகரத்தில்

வதிவார் மண்வெட்டியுங் கூடையுங்கொண்டு விரைவில் வைகைக்கரைக்கு ஓடினர். ஒவ்வொருவரும் அடைக்க வேண்டிய பகுதியைப் பிரித்துக் கொடுத்துக் கரையினை அடைப்பித்தபோது, பிட்டு விற்றுப் பிழைக்குஞ் செம்மனச் செல்வி என்னும் நரைமூதாட்டி அடைக்க வேண்டியபகுதி அடைபடாதிருந்தமை கண்டு காவலாளர் அவள்பாற்சென்று அவளைத் துன்புறுத்தினர். பிட்டினைக் கூலியாக வாங்கிக்கொண்டு அவளுக்காகக் கரை அடைப்பாரில்லாமையால், அவள் திருவாலவாய் அண்ணலைத்தொழுது தனது வறுமையையுந் துணைசெய்வாரின்மையையும் எடுத்துரைத்துக் குறையிரந்தனள்.

"தாயமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதென திலம்பாடன் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளா தொழியினுயிர் நீப்பேன்மற் றென்செய்வேன்."

என்றவுடன் அவள்பாற் கருணை கூர்ந்த இறைவன் அவளது வேண்டுகோட் கிணங்கிக் கந்தையுடுத்துத் தோள்மேல் மண்வெட்டி தொங்கவிட்டு மண்கூடையைத் தலைமேற் கொண்டு, பெரும் பசியுடைய வேலையாளர்போல வடிவுகொண்டு பிட்டு வாணிச்சி கண்முன் வந்து, 'என்னை ஏவல்கொள்வாருண்டோ' என்று உசாவினர். அப்போது பிட்டு வாணிச்சி கவலைதீர்ந்து அவரை நோக்கி 'மகனே நீ எனக்குக் கூலியாளாய் வரக்கடவை' என்றனள். அதற்கு அவர் 'முற்கூலி தருவாயாயின் வருவேன்' என்றனர். அப்போது அவள் 'நீ உண்ணும்படி இனிய பிட்டைக் கூலியாகத் தருவேன்; அது வேண்டாமென்றால் இப்பிட்டைவிற்று மாலைப்பொழுதில் உனக்குக் கூலிதருவேன்' என்றனள். அதற்கவர், 'மிகுந்த பசியுடையேனாதலால் இப்பொழுது பிட்டையளிப்பாயாகில் உன் பகுதியை நன்றாக அடைப்பேன்' என்றவுடன் பிட்டு மூடிய கருந்துணியில் உதிர்ந்ததை யள்ளி இதோ இதனை வாங்கிக்கொள்வாய் என்றனள். அவர் அதனை வாங்கி உண்டு பசி தீர்ந்ததாகக் கூறி, 'இது நன்று, இன்னும்

வேண்டு'மென்று கேட்டுத் தனது துணி நிறையப்பிட்டு வாங்கிக்கொண்டு அம்மையுடன் வைகைக் கரைக்குச் சென்று, அவள் தன் பகுதியைக் காட்டக் கண்டு அதனை அடைக்கத் தொடங்கினர். வேலை செய்வதற் கிடையிடையே உடம்பிளைத்தவர்போலப் பிட்டினைச் சிறிது சிறிது எடுத்துச் சுவைபார்த்துப் பிட்டு நன்று நன்றென்றுகூறிக் கூடையைச் சென்னி மேற்கொண்டு கூத்தாடிக் காலங்கழிப்பதைக் கண்ட செம்மனச் செல்வி, அரசன் தூதர் இதனைக் கண்டால் துன்புறுத்துவரே என்று நினைந்தாள். அப்போது அவர் அவளைப் பார்த்து, அன்னையே, "இக்கரையை இப்பொழுதே விரைவி லடைப்பேன்; இதைப்பற்றி நீ வருந்தாதே; வீட்டிற்குப்போ' என்னவும், அவளும் அவ்வாறே வீட்டிற்குச் சென்றனள். அவள் சென்றபின் மண்கூடையைத் தலையணையாக வைத்துக்கொன்றை மரநிழலில் நிறைந்த மணலின்மேல் வேலை செய்திளைத்தவர் போல வள்ளலார் பள்ளி கொண்டார். அப்போது அரசன, குடிகள் கரை அடைத்ததைக் கண்டறிவதற்காக அமைச்சரோடு கரை வழியாகச் சென்றகாலை, பிட்டு வாணிச்சிக்கென வகுத்த பகுதி நன்கடைபடாதிருப்பது கண்டு இது யார் பங்கென்று அரசன் வினவ, அங்குள்ளார் அவனை நோக்கிப் 'பிட்டு வாணிச்சி யொருத்திக்காக வந்த கூலியாளனொருவன் ஒழுங்காக வேலை பாராது மண்ணை வெட்டிக்கூடையிலிட்டு எப்படித் தனித்தெடுப்பதென்று மனம் வருந்திச் சிறிது வாளா நிற்பன்; பின்பு தலைமீது கூடை எடுத்து வைத்துக் கொட்டப்படும் இடத்தில் அதனைக் கொட்டாமல் வேறிடத்திற் சிந்துவன்; இஃதென்ன! திசை மயக்கமாயிற்றென்று சொரிந்துவிட்டு மிக இளைத்தவன்போல நெடுநேரம் நிற்பான்; ஓடுவான்; ஓடி மீண்டுவந்து ஒரு கைமண் கரையில் போடுவான்; போவென்றால் வருவான்; வாவென்றால் போவான்; பிட்டினைத் தின்றுவிட்டு அது மிக நன்றென்று கையைக் கொட்டுவான்; தோற்றத்தால் அரசிளங் குமரனைப்பான்; அவன் அந்தக் கொன்றை மரநிழலில் தூங்குகின்றான்;

யார் சொல்லையுங் கேளான்; அவனைப் பாருங்கள்' என்றனர்.

அரசன் அவனை இங்கே கொணர்மின் என வேலையாளரை ஏவினன். அவன் போய்ப் பெருமானை எழுப்பிய வளவில், அவர் திடீரெனெ விழித்தெழுந்து அச்சங் கொண்டு நின்றதும், காவலாளனொருவன் அவரை வலிந்து பிடித்திழுத்து அரசன்முன் கொண்டுவந்து நிறுத்தினன். அரசன் அவரைப் பிரம்பாலடித்தனன். அங்ஙனமடித்த போது அவ்வடி படைக்கப்பட்ட யாவர்மேலும் பட்டது.

" தார்மேனின் றிலங்குபுய வழுதி மேலுந்
தன்மனைமங் கையர்மேலு மமைச்சர் மேலும்
ஆர்மேலுஞ் சென்றுபெருஞ் சேனை மேலும்
அயன்மேலு மரிமேலு மறவோர் மேலுந்
தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ்
சிறந்துளவிந் திரன்மேலுந் தேவர்மேலும்
பார்மேலுங் கடன்மேலு மரங்கண் மேலும்
பட்டதான் மெய்யிலடி பட்ட போதில்.''

உடனே யாவரும் வியப்புற்று வருந்தும் எல்லையில், கொத்தாளாய் வந்த இறைவன் மறைந்தருளினன்.

இறைவனே, இங்ஙனந் திருமேனி கொண்டு வந்தா னென்று நினைந்து மிக நொந்தனர். இறைவன் அடியவர்க்கு எளிவந்து அருள் செய்யும் பெருங்கருணையை வியந்து அரசன் அச்சமும் வருத்தமும் நாணமும் உற்று, கடவுளின் பெருங்கருணையை வியந்து நின்றனன். மன்னவன் அடிகளை வணங்கி, 'இறைவன் பெருமையும் பேரன்பர் பெருமையு முணராது சிறுமையேன் கொடுமை செய்தேன். தமியேனது எவ்வகைப் பிழையையும் நீர் பொறுத்தருளல் வேண்டும். நான் உமக்குப் பணிவிடை செய்தொழுக நீரே இந்நாட்டினை ஆட்சிசெய் தருளல் வேண்டும்' என்று வேண்டினன். திருவாதவூரடிகள் அதற்கிசையாது, அரசனை நோக்கிப் பெருந்துறைக்குச் செல்லும்படி என்னை விடுப்பதே எனக்கு இவ்வுலகை

அளிப்பதாகும் என்றனர். தென்னவன் அரனன்பர்க்கு அரசவாழ்வில் அவாவிராதென்றுணர்ந்து அடிகளது பூங்கழல்களை வணங்கி, 'ஐயா, நீவிர் திருவுள்ளங் கருதியவாறு செய்க' என்று பணிந்து விடைபெற்றுத் தனது அரண்மனைக் கேகினன். அடிகள் அமைச்சர் வேடந்துறந்து நற்றவக் கோலங்கொண்டு ஆலவா யண்ணலை இறைஞ்சிக் கூடலம்பதியை நீங்கித் திருப்பெருந்துறைக்கு விரைந்து சென்றனர்.

இறைவன் திருவருள் புரிந்து மறைந்தவுடன் பிரிவாற்றாமையினால் அடிகள் வருந்தினராதலின், அவர் பரமுத்தி விருப்பால் அழுதிருத்தல் கூடும். உடனே தமது உடம்பை மாய்த்துக் கொள்ளலாமெனினும் அதுவும் இறைவன் உடைமையாதலால், அதனை அழிப்பதற்குத் தமக்கு உரிமை இல்லை என்று அடிகள் கருதியதாகப் பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடலிற் கூறிப் போந்தனர்.

"வஞ்சவினைக் கொள்கலனு முடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே
னதனை யதுவுநின துடைமை யென்றே
அஞ்சினேன் றனேயு மழியா தாவி
யையனே நினைப்பிரிந்து மாற்ற கில்லேன்
என்செய்கோ வெந்தாயோ வெந்தா யோவென்
றிரங்கினர் புரண்டழுதா ரினைய சொல்வார்"

"சிவமாநகர் குறுகப் போன ரடியார்
யானும் பொய்யும் புறமே போந்தோமே."

"அழுதா லுன்னைப் பெறலாமே"

"அழுமதுவே யன்றிமற் றென்செய்கேன்"

"அழுகேனின்பா லன்பா மனமாய்"

"தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்"

"நெருப்புமுண்டு யானுமுண்டு"

"செடிசே ருடலமிது நீக்க மாட்டேன்"

முதலிய திருவாக்குக்கள் மேற்கூறிய கருத்தை வற்புறுத்துவன. இறைவனது ஒப்பற்ற பெருமையையுஞ் சிறுமையையும் நினைந்து இறைவன் எளிவந்தருளிய பெருங் கருணைத்திறத்தினை உணருங்கால் நன்றியறிவின் மிகுதியாற் கண்ணீர் வருதல் இயல்பு என்பது,

"என்னையாண் டாய்க்கு
உள்ளந்தா னின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதால் உடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதால்"

என்று குறிந்தருளினமையா லினிது விளங்கும்.

'உன் விரையார் கழற்கென்
கைதான றலைவைத்துக் கண்ணீர் ததும்பி'

என்றதுமது. பேரானந்தங் காரணமாகக் கண்ணீர் ததும்புமென்பது "கண்களிகூர நுண்துளியரும்ப" என்ற வாக்காற் புலனும். அழுவது போலச் சிரிப்பதும் சிவஞானிகளியல்பென்பது.

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்"

என்றவிடத்துக் கூறப்பட்டது. பேரன்பர் சிரிப்பதற்கும் அழுவதற்குங் காரணத்தைப் பிறர் அறிய மாட்டாராதலின், பிறர்க்கு அவர் பித்தர் பாலர் பிசாசர்போலத் தோன்றுவர். அவர்கள் இறைவன்பால் பித்துடையராயுங் களங்கமற்றவர்களாயும் நிலையாப்பொருள்களில் விருப்பிலராயுமிருப்பராகலின் அவரைப் பித்தர் பாலர் பிசாசருக்கு ஒப்பாவரென்பர். இறைவனைச் சிவஞானிகள் சுட்டற உணர்ந்து இன்புறுவாராகலின் சுட்டுணர்வுக் கேதுவாகிய கால எல்லை அவரது கருத்திற் படாதென்பார், 'நண்பகல் கங்குல் காணார்' என்றனர்.

"இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்"

என்றது மது. சிவமாந்தன்மை யெய்திய அன்பர் தன்னுணர்வினை இழந்தாராகலின், தமது பரிசனங்கள் குதிரை வாங்குதலைப்பற்றிக் கூறிய எதற்கும் அவர் செவிசாய்த்திலர். ஆதலின், அவர் பித்தராயின ரென்று அன்னோர் கருதினர். அவர் பித்தராயினரென்று கேட்ட மன்னன் அவரது மெய்ந்நிலையை ஆயக் கருதுமதுகையின்றிப் போர்புரிதற்குக் குதிரை வாங்குந் தன் னோக்கத்தையே பெரிதாகக் கருதி, அதற்கு அடிகள் இடையூறு இழைத்தனர் என்று வருந்தினன். இடம் பொருள் ஏவலுடையராய் வாழ் வெனு மையலிற் பட்டு உலகநெறி செல்வார்க்குக் கடவுள் நிலையின் தன்மை ஒரு சிறிதும் புலப்படாது. 'பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்' என்றபடி உலக பாசமானது மெய்ப்பரம் பொருளையும் மெய்யன்பர் பெருமையையும் மறைத்துவிடும் என்பது அரசன் செய்கையாற் றெளியப்படும். முதலமைச்சர் அரசனது நிதியைத் தமக் கெடுத்துக்கொள்ளவில்லை. அவர் அமைச்சர் வேடத்தையும் அதிகாரத்தையும் அறவே விட்டுச் சிவனன்பின் தனி வடிவாய்ப் பித்தர் போலாயினர் என்று கேள்விப்படினும் பெருந்துறையிற் புகும்வரை யாதொரு குற்றமுமின்றிச் செவ்விதிற் கடமை யாற்றிய அடிகளின் நிலையை அரசன் வியப்புற்று ஆராய்ச்சி செய்யாமை, அவனது கழி பெரும் பொருட்பற்றினையே வற்புறுத்துவதாகும்.

அத்தகைய மன்னனைச் சிவபத்தியிற் சிறந்த வரகுணன் என்று கூறுதல் தவறென்பது தெளிவு. அடிகளை அமைச்சராகப் பெற்ற பாண்டியன் வெகுட்சியுற்றதற்கு அவனது நல்வினையே காரண மென்றலும் ஒன்று. அவன் எவ்வாற்றானுங் குதிரை வேண்டுமென்று வற்புறுத்தியது இறைவன் நரிபரியாக்கிய திருவிளையாடல் நிகழ்த்துவதற்கு இடமாயிற்று. திருவாதவூரடிகளை வருத்தினமையினாலேயே இறைவன் மண்சுமத்தல் முதலிய திருவிளையாடல்களியற்றித் திருவாதவூரடிகள் பெருமையைப் பாண்டிய மன்னருக்கும் பிறருக்கும் விளக்கியருளினன். கதிரவன்

உதிக்குமுன்னுள்ள குமரி யிருட்டுப்போலப் பாண்டிய மன்னன் நல்லறிவு விளங்குவதற்குமுன் அறியாமை வயப் பட்டன னெனினும், அவன் ஆட்கொள்ளப்பட்டா னென் பது.

'மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே'

'ஈண்டிய மாயா விருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லனல்லன்'

என்றமையாற் றெளிக. உலக நலத்தின்பொருட்டு இறை வன் பரிமேற் கொண்டானென்பது 'பாரின்ப வெள்ளங் கொளப் பரிமேற் கொண்ட பாண்டியனார்' என்றதின் வைத்துணர்க.

மன்னன் அனுப்பிய ஓலையை அடிகள் தாம் பார்த் திலராயினும், அதனைக் கேட்க முயன்றதும் திருவருள் வழி நின்று ஊழ்வினைப் பயன் நுகர்தற்பொருட்டே என்க. அடிகள் ஞானநிட்டையி லிருந்தகாலை அவருடன் கூடவந்த பரிசனங்கள் அவரை நெருங்கினமையால் அவர் களை அறவே அகற்றினரென்றும், இடையீடுள்ள காலத்தே அரசன் தூதுவர் சென்றாராதலின் அரசன் ஓலைக்கு அடிகள் செவிசாய்க்க நேர்ந்ததென்றுங் கூறுப. இறை வனது திருவிளையாடல்கள் அடிகள் வாயிலாக உலகில் நிகழ்தற்குரிய பான்மை இருந்தமையால், இறைவன் திரு ஞானம் நல்கியவுடன் தம்மோடு அடிகளை அழைத்துச் செல்லவில்லை என்பது பரஞ்சோதி முனிவரால் விளக்கப் பட்டுள்ளது.

'தித்திக்கு மணிவார்த்தை யின்னஞ் சின்னாட்
டிருச்செவியி லருத்தவுங்கைச் செம்பொ னெல்லாம்
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
முடிந்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி
எத்தித்தொண் டரைக்கருமஞ் சிறிதுண் டிங்கே
யிருத்தியென வுருக்கரந்தா னடியரோடும்.'

திருவாதவூரடிகளின் நிலையறியாது மன்னவன் எழுதிய ஓலையைக் கண்டு தமக்கும் மன்னவனுக்கும் தொடர்பொழிந்தமையை அடிகள் தூதருக்கு உணர்வித்தார். ஈசன் தமராயினபின் இவ்வுலகத் தொடர்பு விடுபட்டொழிதலின், அப்பமூர்த்திகளும் இவ்வாறு உணர்ந்துரைப்பாராயினர். முன் அரசனோடுற்ற தொடர்பின் பொருட்டு அவனுக்கு மறுமொழி கூறக் கருதிய அடிகள் அம்மறுமொழி விடுக்குங் கடமையையும் இறைவன் பாலேயே ஒப்புவித்தார். அரசன் ஓலை அனுப்பிய காலம் ஆடித் திங்களாக இருக்கலாம். ஆதலினாற்றான் சோதிட நூற்படி நல்லநாளாகிய ஆவணி மூலத்திலே குதிரைகளைக் கூடற் பதிக்குக் கொண்டுவருவதாகச் சொல்வதற்கு இயைபு ஏற்பட்டது. மணிவாசகப்பெருமான் காலத்திலேயே நன்னாள், நன்னிமித்தம் முதலியவற்றைக் கருதும் வழக்கம் இருந்ததென்பது புலனாகின்றது. அடிகள் அரசனிடம் குதிரை வருமென்று இறைவன் கூறிய வண்ணமே செப்பியது மெய்யான செய்தியே. ஆரியர்பாற் குதிரை வாங்குவதற்கிடாகத் தமது ஆசிரியனாகிய அருட்குருவிடம் அரசன் பொருளைக் கொடுத்துக் குதிரை கொள்வாராயினர். இறைவன்பால் தாம் திருவருள் பெற்ற செய்தியை அரசனுக்கு அடிகள் அறிவுறுத்தாமைக்குக் காரணம் அரசன் அதனை அத் தருணத்திற் பெரிதாகக் கருதானென்றுணர்ந்தமையேயாகும். அருளைப் பொருட்படுத்தாது பொருளையே மன்னன் பாராட்டி நின்றானென்பது. திருப்பெருந்துறையில் அடிகள் எய்திய நிலையை முன்னர்க் கேட்டவிடத்து அதனைப்பற்றி யாதும் உசாவாது, பொருள் இழப்பையே நினைந்து வருந்திச் சினங் கொண்டமையாற் றெளியப்படும். ஆதலால் அடிகள் தமது திருவருட் பேற்றினை அரசனுக்கு உரையாமை ஒரு குற்றமாகாதென்றுணர்க.

ஆவணிமூல நாட்குச் சற்று முன்பே அமைச்சர்களிலொருவன் அரசனிடம் அடிகளைப் பற்றிப் புறங்கூறினமை அவனது இழிவைக் குறிக்குமாயினும் அரசன்

அடிகளை வருத்துதற்குரிய ஊழ்வினை இருந்ததென்பதை விளக்கும். அரசனும் அடிகளை அழைத்துக் காரணங் கேளாது துன்புறுத்தினமை அவனது ஆராய்ச்சிக் குறைவைக் காட்டும். இறைவன் தனக்கு உறுதி கூறியதை அடிகளும் அரசனுக்குத் தன்னைத் துன்புறுத்தத் தொடங்குங் காலத்தும் கூறாமை எதனாலெனில், அவன் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இல்லாதவனாயிருந்தமை கருதியே. தமக்கு வருந் தீங்கு ஒன்றினையும் சிவஞானிகள் பொருட்படுத்தாராதலின், 'சற்றுமுட்டளர்விலாத தன்மையின் வாதவூரர்' என்றார். இறைவனது திருவருட் பெருமையைப் பாண்டியனும் பிறரும் அறிந்துய்ய வேண்டுமென்னுங் கருத்துப்பற்றியே அடிகள் இறைவனைக் குதிரை கொணரும்படி வேண்டினர். அங்ஙனம் வேண்டுதல் தன்னுணர்ச்சி வயப்படுங் குற்றமாமென்று அடிகள் கருதினரென்பது குழைத்தபத்தின்கணுள்ள திருவருட் பாடல்களாற் றெளியப்படும்.

'அன்றே யென்ற னாவியு
முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்டோண் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே'

'ஆயக் கடவே னானேதா னென்ன
தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே'

என்றது காண்க.

புராணத்துட் கூறிய வண்ணம், அடிகள் இறைவனை நோக்கி, 'நவின்ற சொற் பொய்மையாமோ' 'நின் புகழ்க்கு ஏற்றமாமோ; 'நான் இடும்பையுற்றால் யார் உனக்கு அடிமையாவார்' 'என நாமொருவன் சொல்வ

தேறுமோ' என்று இன்னோரன்னபற்றி இயம்பினு ரெனின, அவை இறைவன் மாட்டுத் தோழமை பாராட் டினமையே குறிக்கும். குதிரைகள் வரும் நேரத்தைக் கருதியிருந்தனராதலின், காவற்சாலையிலுள்ள அவருக்கு இறைவன் பாதச் சிலம்பொலி காட்டினர் போலும்!

குதிரைப்படைகளை வகுத்து நிறுத்திப் பரிசோதனை செய்தற்குரிய நிலப்பரப்பானது செண்டுவெளி எனப் பட்டது. ஆண்டுள்ள வெப்பந் தோன்றாதவாறு அரசன் முத்துப்பந்தரின்கீழ் வீற்றிருந்தனன்போலும்!

அன்பர் வேண்டிய வடிவத்தோடு இறைவன் தோன்றி அருள்புரிவனாதலின், இறைவனே குதிரைச் சாத்தின் தலைவனாக எழுந்தருளினன் என்க.

'சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தாளியும்'

'ஆட லமர்ந்த பரிமாவேறி ஐயன்பெருந்துறை யாதியந்நாள்
வேடர் களையெங்கும் ஆண்டுகொண்ட இயல்பறி வார்'

'பரிமேற் கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி யுருவறி யாதென்ற னுள்ளமதே'

இறைவன் திருவுருக்கொண்டருளுதலால் அவனுக்கு யாதொரு குறையுமில்லை.

'எந்தைதா னின்னனென்று மின்னதா மின்னதாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே'

'நிறுத்திடு நினைந்தமேனி நின்மல னருளினாலே'

என்றுங் கூறியவற்றால் இதனுண்மை தெளியப்படும்.

இறைவன் தானே உருவெடுத்து வருவனெனவும், மும்மூர்த்திகளில் தலைநின்ற உருத்திர மூர்த்தியை அதிட் டித்து வருவனெனவும் இருகொள்கைகள் உள்ளன. இறைவன்தானே உருவெடுத்துச் சிவஞானிக்கு அருள் செய்வனென்று சிவஞானசித்தியாருட் கூறப்படுதலின், அடிகள் விரும்பியவண்ணம் அவனே குதிரைத் தலைவனு

கத் திருமேனிகொண் டெழுந்தருளினனென்று கோடலே பொருத்தமுடைத்து. 'குறித்ததொன் றாகமாட்டாக் குறைவிலன்' என்றது மது. மறைத்தல் அழித்தலென்னும் இருதொழிலையும் இறைவனே யாண்டும் இயற்றுகின்றா னென்னுஞ் சித்தாந்தக் கொள்கைக்கு இணங்க, இவ்வுலகத்தும் அடியார்களை ஆட்கொள்ளுதற்பொருட்டு இறைவனே நேரில் தோன்றினனென்று கருதுதல் தவறாகாது. 'தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்ல வல்லனல்ல' னென்றபடி குதிரைமேல் வெளிப்பட்ட கடவுளைப் பாண்டியன் தனது அறியாமையால் உணர்ந்திலன். உணராமையின் தானளித்த ஒண்கலையை மதிப்பாகக் குதிரைத்தலைவன் வாங்கவில்லை என்று முனிவு கொண்டான். முனிவுகொண்டு மயங்கிய அரசனுக்கு ஏற்ற வண்ணம் அடிகள் விடையளித்தாரே யன்றிக் கடவுளின் தன்மையை அவனுக்கு உணர்த்தவில்லை. என்னை, உணர்த்தினும் ஊனக்கண்ணுடைய மன்னன் உண்மை யுணரானென்பது திண்ணமாதலி னென்க. இதனால் உயிர்களின் 'பக்குவங்கண் டுணர்த்தும்' பான்மையன் என்பது தெளியப்படும். கடவுளின் இயல்பறிந்து அவன்பால் மெய்யன்புசெய்து அவனைக் காணவேண்டுமென்னும் பேரவாவுடையார்க்கு அவன் தோன்றி அருளுதல் கூடுமேயன்றிப் பிறருக்கு அவன் தோன்றுவதாற் பயனில்லை என்பது அறிஞர் கருத்து. கடவுள் நாட்டமில்லாத மக்கட்கு மக்கள் வடிவமாக அவன் தோன்றின் மக்களுள் ஒருவனாக அவனை மதிப்பரே யன்றி அவனைக் கடவுளென்று தேறார். தாமே தேறமாட்டாதார் பிறர் சொல்லினுந் தேறமாட்டார். அங்ஙனந் தேறினுந் தாமே யறிந்தவராக மாட்டார் ஆதலின்.

> "ஒளித்துல கெங்கு நிற்போ னுருபவ மொழித்து ஞான
> மளித்திடி னன்றி யாவ ரவன்றிற மறிய வல்லார்?"

குதிரைகளின் வகைகளையும் இலக்கணங்களையுந் தமிழ்நாட்டினர் நன்குணர்ந்திருந்தா ரென்பது இவ்வரலாற்றினால் நன்கு புலப்படுகின்றது. உடம்பெடுத்த உயிர்

வகைகள் ஒவ்வொன்றின் நல்லியல்பையுந் தீய இயல்பையும் உணர்த்துதற்கு அவ்வவற்றின் உடம்புகளின்மீது அடையாளங்கள் உள்ளன என்பது உடற்றோற்ற ஆராய்ச்சி நூலாரது கொள்கை. குதிரை மாடு முதலிய விலங்குகளிற்போல மக்களுள்ளும் இவ்வடையாளங்கள் காணப்படுமென்ற கொள்கை பண்டைக்காலத்திலேயுந் தமிழ் நாட்டில் வழங்கியதென்பது சிலப்பதிகாரக்கதையால் இனிது விளங்கும். சிலப்பதிகாரத்திற் கோவலனைக் கள்வனென்று ஒரு பொற்கொல்லன் குறைகூறியபொழுது அவன் மீது கள்ளனுக்குரிய அடையாளங்களில்லை என்று பிறர் புகன்றது காண்க. இக்கொள்கையைச்சென்ற நூற்றாண்டினிறுதியில் இத்தாலிய நாட்டில் 'லம்புரோசோ' என்னும் பெரியவர் சிறைச்சாலைகளிலுள்ள பல குற்றவாளிகளைப் பரிசோதித்து இக்கொள்கையை நிலைநாட்ட முயன்றனர்.

இதுநிற்க, நரியைப் பரியாக்கினாரென்பது திருவாசகத்துள் 'நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப் பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய்' என்று பல இடங்களினுங் கூறப்பட்டது.

'நரிகளெல்லாம் பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன்
பேரருளே'

'நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்'

என்றும் வருவன காண்க. பரி நரியானதைப்பற்றி யாதுந் திருவாசகத்திற் காணப்படவில்லை யெனின், பரிகள் நரியாகமாறிய பின்னரே பரிகளாய் வந்தவை நரிகளென்று கருதப்பட்டன ஆதலானும், நரிகளைப் பரிகளாக்கினமையே வியப்பிற்கிடனாகிய கருணைச்செயலாதலானும் நரி பரியானதையே கூறினா ரெனினும், பரிநரியானதும் ஆண்டே குறிப்பானுணர்த்தப்பட்டதென்றுணர்க 'மதுரை எல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய்' என்ற விடத்துப் பரிநரியானது குறிப்பா னுணர்த்தப்பட்டது

பிற விலங்குகளைப் பரியாக்காது நரிகளை அவ்வாறு செய்தது தந்திரக் குறிப்பை யுணர்த்துவதாகும். நரியே விலங்குகளுள் மிக்க சூழ்ச்சியுடையது. பாண்டிய மன்னனை இறைவன் கள்ளமாகவே ஆட்கொள்ள எழுந் தருளினன். ஊர்தியாதற்குச் சிறிதும் பயன்படாத நரிபோன்ற சூழ்ச்சிமிக்க மக்களை, ஊர்தியாகவும் பிற வாற்றானும் பெரிதும் பயன்படுங் குதிரைபோல இறை வனது திருவடி சூட்டுதற்குரிய பெரு நலமிக்க நன்மக்க ளாக மாற்றும் ஆற்றல் சான்றவன் இறைவனென்பதை இவ்வியத்தகுசெயலால் அறிவுறுத்தியவாறுமாம்.

பரி நரியாயினபின்பும் அதனை ஓர் தெய்வச் செயல் என்று கருதித் திருவாதவூரடிகளிடம் உண்மையை அறிய முயலாது அரசன் மீட்டும் அவரைத் துன்புறுத்தக் கருதி யது அவனது அறியாமையை வற்புறுத்தும். எல்லாவற் றையும் இறைவன் திருவிளையாடலாகவே அடிகள் கருதி னமையால் அரசன் முனிந்து ஆளனுப்பியகாலையும் அடி கள் தம்முட் சிரித்துமகிழ்ந்தாரென்பார் 'முறுவல்செய்து' என்றார். அடிகளை ஆற்றுமணலில் ஒரு வளைவினுள் நிறுத் தித் துயருறுததகாலை அவர் இறைவனை நினைந்திருத்தல் கூடும். இறைவன் திருவிளையாடல் நிகழ்த்தியபின்னுந் தமது நிதியினை அடிகளிடமிருந்து மீளப்பெறவேண்டுமென் னுங் கருத்தினையே பற்றிநின்ற அரசனது இரங்கத்தக்க மனப்பான்மையை இறைவன் இன்னுமாற்றிலனே என்று அடிகள் கருதியிருத்தல் கூடும். ஆவணித்திங்களில் வைகை யிற் பெருவெள்ளம் இயற்கையில் வருதற்கு இடமில்லை. ஆதலின் பெருவெள்ளம வந்தவுடனே அஃது அடிகட் குத் தண்டஞ்செய்தலைத் தடுப்பதற்கு வந்ததாக அரசனுக் குத் தோன்றிற்று. பிற அமைச்சரும் அவன் எண்ணத்தை உறுதிப்படுத்தினர். வெள்ளம் மிகுதியாகப் பெருகி ஊரை அழிப்பதுபோல் வந்தமையானுந் தெய்வத்தை வேண்டியும் அவ்வெள்ளம் குறைவுபடாமையானும் அர சன் அஞ்சுவனாயினன். செல்வச்செருக்கும் அதிகாரச் செருக்கும் அடங்கியொழிய, அச்சம் மேற்பட்ட காலத்தி

லேதான் கடவுட்பெருமையையும் அடியார் பெருமையை யும் அரசன் நினைப்பானாயினன். நினைத்தபின்னரே திரு வாதவூரடிகளை அழைத்துத் தன் குற்றத்தைப் பொருத் தருளவேண்டும் என்றிரந்தான்.

"ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகும்"

என்ற வண்ணம் சிவனடிப்பேரன்பர் உள்ளங்கலங்கிய விடத்து நாட்டிற்கு அழிவு வருதல் திண்ணமே. ஆயின் ஈண்டுத் திருவாதவூரடிகள் மனங்கலங்காது அரசன் நல் லறிவு பெறல் வேண்டுமென்று திருவுள்ளங் கொண்டமை யால், வந்த வெள்ளமானது ஊரை அழிவுசெய்யாது அழிப்பதுபோலத் தோன்றிற்று என்று உணர்க.

'பேரன்பர் விரும்பியவண்ணம் பூதங்களுந் தந்தொழி லியற்றும்' என்பதற் கிணங்க வைகைநீர் வற்றவேண்டு மென்று அடிகள் நினைந்தவுடன் வெள்ளங்குறைவுபட்டது. அரசன் தம்மைத் துன்புறுத்தியபோதும் மகிழ்வித்த போதும் அடிகள் ஒரே தன்மையராய்த் திகழ்ந்தனர். இதுவே உயர்ந்த பேரறிவாளரது பொறுமை நிலையாம். இந்நிலைக்குக் காரணம் விருப்பு வெறுப்பற்ற நடுநிலைத்தன் மையும், பயன் கருதாது இறைவன்பால் வைத்த பேரன்பு மாம். இக்கருத்தைக் கடவுண்மாமுனிவர்

அருட்பெரு வழுதி யிவ்வா றன்புரை பகர்ந்த போதும்
தரிப்பரி தென்ன முன்னந் தழலென வெகுண்ட போதும்
விருப்பொடு வெறுப்பிலாத மெய்ம்மையார் தம்மை யாண்ட
திருப்பத நினைந்தார் வைகைச் செழும்புன லூர்கொ ளாமல்

என்றினிது விளக்கினர். ஆளுடைய அடிகள் தம்முடைய நினைவாற்றலினாலேயே வைகைநீர் முற்றும் வடிவிக்கக் கருதினரெனின், அற்புதம் நிகழ்த்த அவர் விரும்பியவ ராவர். மக்களாலியல்வதை மக்கள் செய்வதே கடமை யாதலின் கரைகட்டுந் தொழிலினை ஊராரால் செய்விக்

கும்படி கட்டளையிட்டனர். இறைவன் திருவருள்வழியே அடிகள் சொல்லும் நிகழ்வதாதலின், மண்சுமக்குந் திருவிளையாடலை நிகழ்த்தக் கருதிய கடவுள் அவ்வாறு கட்டளை பிறப்பித்தனன் என்றலு மொன்று. அக்காலத்தில் ஊர்ப்பொதுவேலைகளைக் குடிகளே தம்முட் பங்கு வைத்துச் செய்துமுடிக்க வேண்டுமென்னும் நியம மிருந்ததாகத் தெரிகிறது. குடிகள் தாமே வேலைசெய்யாது ஆள் வாயிலாகவும் வேலையைச் செய்வித்துக்கொள்ளும் வழக்கமும் அக்காலத்திலிருந்தது. வேலையாள் கிடையாமையால் வருந்திய பிட்டுவாணிச்சியை அரசன் ஏவலாளர் உதவியற்ற அவள் நிலையை அரசர்க்குணர்த்தாது, துன்புறுத்தினரெனவும், அவள் அரசன்பாற் சென்று தன் குறையைத் தெரிவித்தற்கு இடமில்லா திருந்ததெனவும் அறிகிறோம்.

'செம்மனச்செல்வி' என்ற பெயர்க்கேற்ப அப்பிட்டு வாணிச்சி செம்பொருளாகிய ஆலவாய் அண்ணல்பால் உள்ளன்பு செலுத்தும் பெருந்தவம் வாய்ந்தவளாய் இருந்தமை பாராட்டத்தக்கது. அன்பு செய்தார்க்கு இறைவன் எவ்வகையிலும் உதவிபுரிவனென்பது இச்சரித்திரத்தால் இனிது விளங்கும். கல்லாதவனும் உயிருக்குயிராயுள்ள கடவுளை உணர்ந்து மெய்யன்புடையனாயின் இறைவன் திருவருளுக்கு உரியனாவனென்பதும், அவன் கற்றவனுங் காணாத பேரின்பத்தைக் காண்பன் என்பதுஞ் செம்மனச் செல்விக்கு இறைவன் விரைவி லருள் செய்தமையானும் பாண்டியனுக்கு அவ்வாறு விரைவி லருள் செய்யாமையானுந் தெளியப்படும்.

> கல்லா தவருங் கருத்தறி காட்சியை
> வல்லா ரெனிலருட் கண்ணான் மதித்துளோர்
> கல்லாதா ருண்மைபற் றுநிற்பர் கற்றோருங்
> கல்லாதார் பேரின்பங் காணுகி லாரே.

செம்மனச்செல்விக்குக் கொத்தாளாய் வந்த கடவுள் விளையாடி வேலைசெய்து பிட்டினைச் சுவைபார்த்துக் கொண்டு பித்தன்போலத் திரிந்தமையால் அடிகள்,

'பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப்பெரும் பித்தனே'
'மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளி'
'ஆங்கது தன்னில் அடியவட்க காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்'

என்றருளிச்செய்தனர்.

மண்சுமந்தவரை அடித்தவன் பாண்டியன் என்பது,

'மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்'

என்றதாற் பெறப்படும்.

எவ்வுயிரினுங் கலந்திருப்பதால் அவனை அடித்த அடி யாவர்மேலும் பட்டதெனினும், பாண்டியனும் அவனைச் சேர்ந்தோருமே அடியால் விளைந்த துன்பினை உணர்ந்திருத்தல் கூடும். இறைவனும் வாதவூரடிகளும் இருவினைத் தொடக் கற்றவராதலின், அத்தகைய துன்பினை உணர்ந்திரார். வைகைவெள்ளப் பெருக்கினாலே மனந்தெளிவுற்றுத் தாழ்மையுற்ற பாண்டியனை அடிபட்ட காலத்தே தமது இறைமைத் தன்மையையும் அடிகளின் பெருமையையும் விளக்கி இறைவன் ஆட்கொண்டனன்.

'தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட'

என்றது மது. அடிகள் வாயிலாகவே அவனை உய்யக் கொண்டமையால், அடிகளே அவனுக்குப் பரமாசாரியர் ஆவர் ஆதலின், அவன் அவர் திருவடியில் வீழ்ந்து தன்னுவியையும் ஆக்கையையும் பொருண் முழுவதையும் ஒப்புவிக்கலாயினன். அடிகள் திருப்பிக் கொடுத்த அரசினையே அவன் ஆட்சிபுரிவானாயினன். அரசன் தொடர்பு விட்டதுமுதல் அடிகள் பராமுத்தியை நாடியே அரன்கழற்கண் மறவாது அன்புடையராயினர்.

---

௩. தில்லைக்கு ஏகுதல்

திருவாதவூரடிகள் திருப்பெருந் துறைக்குச் சென்ற பின் தமது அருட்குரவனை நினைந்துருகி அவன் தம்மைத் தன்பால் அழைத்துக்கொள்ளுமாறு மிகவும் பரிவுடன் வேண்டித் திருச்சதகம் பாடினர். அக்காலத்தில் அடிகளுக்குத் துணையாகப் பல பேரன்பர்கள் உடனிருந்தனர். ஒருநாள் அடிகளுக்கும் அடியார்களுக்கும் இறைவன் தோன்றி அங்கிருந்த பொய்கையிற் றோன்றுந் தழற் பிழம்பில் அடியார்கள் ஒவ்வொருவராய்ப் புகுந்து தம்மை யடையவேண்டு மென்றும், அடிகள்மாத்திரம் உத்தர கோசமங்கை, திருக்கழுக்குன்றம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் தில்லைக்கு வரவேண்டு மென்றுங் கட்டளையிட்டு மறைந்தருளினர். அவ்வாறே ஒருநாள் திருப்பெருந்துறையின்கண் ணுள்ள 'மொய்யார் தடம் பொய்கை'யிற் பேரொளிப் பிழம்பு தோன்றிற்று. அதன்கண் அடியாரெல்லாரும் வீழ்ந்து மறைந்தனர். அடிகள் இறைவர் கட்டளைக்கஞ்சி அதன்கட் புகுந்திலர். திருக்குருந்தமர நீழலையடைந்திருந்து தமது பரமாசாரியரது திருவடியையே நினைந்துருகு நாளிற் சிவபுராணம் பாடினர். அதிசயப்பத்தும் திருப்பெருந்துறையின்கண் பாடப்பெற்றது. அதனுள், 'அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே' என்றதனாலும், அற்புதப்பத்துள், 'ஆசைதீர்த்து அடியார் அடிக்கூட்டிய வற்புதமறியேனே' என்றமையாலும் அவையிரண்டும் அடியார் அவரினின்றும் பிரிவதற்கு முன்னே பாடப்பெற்றன வென்று கருத இடமுண்டு. ஆசைப்பத்தும் பெருந்துறையிலேயே அருளிச் செய்யப்பட்டது. அதனுள் சிவபுரநகர்புக்கு 'உன்பழவடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்' என்றமையால், அடியார் அடிகளைப் பிரிந்தபின்னர் அது பாடப்பட்டிருக்கலாம். அடைக்கலப்பத்தும், வாழாப்பத்தும் முன்னமே செய்யப்பட்டன போலும். செத்திலாப்பத்தும், புணர்ச்சிப்பத்தும் அடியாரைப் பிரிந்தபின் இறைவனை அடையவேண்டு

மென்னும் பெரு விருப்பினாலே திருவாய்மலர்ந்தருளப் பட்டன. திருவார்த்தை என்னும் திருப்பதிகத்துள் ஐயன் பரிமா ஏறிவந்த அருஞ்செயல் குறிக்கப்பட்டிருப்பதால் அவ்வருஞ் செயற்குப்பின் அது திருப்பெருந் துறையில் பாடப்பட்டதாகும். திருவெண்பா என்னுந் தலைப்பின்கீ ழுள்ள பதினொருபாட்டும், திருப்பள்ளி யெழுச்சியும், ஆனந்தமாலையும், உயிருண்ணிப்பத்தும், பிரார்த்தனைப்பத்தும், திருப்பாண்டிப் பதிகமும் ஆண்டே இயற்றப்பட்டன என்ப. பாண்டிப்பதிகத்துள்ளும், பிரார்த்தனைப்பத்துள்ளுந் திருப்பெருந்துறை தெளிவாகக் குறிக்கப்படவில்லை. 'மொய்யார்தடம்பொய்கை' என்பது திருப்பெருந்துறையிலிருப்பதால் திருவெம்பாவை திருப்பெருந்துறையிற் பாடப்பட்டதென்பாரும் உளர்.

திருப்பெருந்துறையிற் சிலநாள் தங்கிய பின்னர் அடிகள் திருவுத்தரகோசமங்கைக்கு எழுந்தருளி இறைவனைக் காணும் பெருவிருப்பால் 'நீத்தல் விண்ணப்பம்' பாடியருளினர். அங்கே திருப்பெருந்துறையில் அவருக்குக்காட்டிய பேரொளி வடிவினைத் தோற்றுவித்தருளினர். அது,

'தெங்குலவு சோலைத் திருவுத்தரகோச மங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி'

என்றமையாற் றெளியப்படும். திருப்பொன்னூசலும் அன்னைப்பத்தும் திருத் தசாங்கமும் இத்திருப்பதியிலேயே பாடப்பெற்றன. திருத் தசாங்கத்தைத் திருப்பெருந் துறையிற் பாடினரென்று கொள்ளவும் இடமுண்டு. அதன் ஒவ்வொரு பாட்டிலுந் திருப்பெருந்துறை குறிக் கப்படுதலின், பின்னர் அடிகள் திருவாரூருக்குச் சென்றனர். அங்கே திருப்புலம்பலின் முதற்பாட்டுப் பாடப்பட்டதாகத் தெரிகிறது. அதன்கண்ணுள்ள மற்றை இரண்டு பாட்டும் முறையே திருப்பெருந்துறையையுந் திருக்குற்றாலத்தையுங் குறிக்கின்றன. திருத்தெள்ளேணத்தில் முதற் பத்துப்பாட்டுத் திருவாரூரைப்பற்றியதாகவும் பிந்திய

பத்துப்பாட்டுத் தில்லையிலருளிச் செய்யப்பட்டதாகவுங் கருத இடமுண்டு.

திருவாரூரினின்றும் அடிகள் திருவிடைமருதூர்க்குச் சென்று இறைவனை வணங்கித் திருவேசறவு பாடியருளினர். சீர்காழிக்கு அடிகள் சென்று பிடித்தபத்து அருளிச்செய்ததாகக் கடவுண்மாமுனிவர் கூறுகின்றார். பிடித்தபத்தினுள் ஒரு திருப்பதியுங் கூறப்படவில்லை. ஆனால் 'கழுமலமதனிற் காட்சி கொடுத்தும்' என்றமையால் அடிகள் சீர்காழி சென்றமை கருதற்பாலதே. பின்னர் அடிகள் திருவண்ணமலையைச் சேருவதற்குமுன், திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய இடங்களுக்குச் சென்றதாகத் திருவாதவூரடிகள் புராணங் கூறுகின்றது. அடிகள் திருவண்ணமலையில் மார்கழித் திங்களில் திருவெம்பாவை அருளிச்செய்ததாகத் தெரிகின்றது. திருவம்மானையும் ஆண்டே அவர் திருவாய் மலர்ந்தருளினர். அவணின்றும் போந்து திருக்காஞ்சி நகரெய்தி இறைவனை வணங்கித் திருவுந்தியார் பாடியதாகத் தெரிகின்றது. திருக்காஞ்சியினின்றும் மீளும் வழியில் திருக்கழுக்குன்றினை யடைந்து இறைவன் தமது குருவடிவங் கண்டு தொழுது பெருமகிழ்வுற்றுத் தில்லைக்குப்புறப்பட்டார்.

திருவாதவூரடிகள் தில்லைக்குச் செல்லும் வழியிலே பொன்னொளி திகழுங் கொன்றை மலர்கள் இருபக்கத்திலும் மலர்ந்திருந்தன. ஆதலால் அவர் சென்ற பொழில் விண்ணுலகம்போன்றிருந்தது. சிவநாமங்கலந்த தமிழ் போல வண்டுகள் இசைபாடச், செங்காந்தண் மலர்கள் அபிநயங்காட்டும் நாடக மகளிரது கைகள்போன்றிலங்கின. சிவஞானமில்லார் தவவேடத்தை மேற்கொண்டாற்போல முருக்கமரங்கள் மணமற்ற செவ்வொளி மலர்களைத் தாங்கிநின்றன. காயா மலர்கள் கீழ்மக்களது மனம்போலக் கறுத்திருந்தன. புன்னை மரங்களிலே தேன் கூடும் மலர்களும் பொருந்தியிருந்தமை வானில் மதியும் உடுக்களும் கூடி விளங்கினாற்போன்றன. வழியில் இரு,

மருங்குமுள்ள கமுக மரங்கள் பூம்பாளைகளாகிய சாமரங்களை வீசி அடிகட்கு வழி நடை வருத்தந்தீர்த்தன. மாமரங்களில் வதியுங் குயில்கள் தம் அலகுகளாகிய சின்னங்களை ஊதின. அடிகளது திருவடிகளிலே விண்ணவர் பொன்மலர் சொரிந்தாற்போலச் செண்பகமரங்கள் தம் பொன்மலர்களைச் சிதறின. மாமரம், நாரத்தை, பாதிரி, தெங்கு, கோங்கு, பலா, மகிழ், மந்தாரம் முதலிய மரங்கள் நெருங்கிய சோலைகளைக் கடந்து தில்லை யெல்லையைத் திருவாதவூர் முனிவர் அடைந்தார். தில்லைமாநகரின் வானளாவிய மதில்களையுஞ் சிற்பத்தொழில் நயம் விளக்குந் திருக்கோபுர வரிசைகளையும் பொற்குடங்களமைத்த மாடங்கள் பலவற்றையுங் கண்டு மகிழ்ந்தனர். மந்திர ஒலியும், இன்னிசை ஒலியும், முழவின் ஒலியும், சிவாகம ஒலியுஞ் செந்தமிழ்த் திருப்பாடலொலியும் கடலொலிபோலத் தில்லையின்கண் முழங்கின. திருவாதவூரடிகள் வீதிகளைக் கடந்து திருக்கோபுரத்தை வணங்கித் திருக்கோயிலுக்குட் புகுந்து பொன்னம்பலத்தை யடைந்து கூத்தப்பெருமானைக் கும்பிட்டு அளவற்ற பேரன்போடு கண்டபத்து அருளிச்செய்தார். அதனுள் ஒருபாட்டு வருமாறு :

'இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.'

இத்திருவாசகம் பாடி இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் உயர்பெரு நிலையுற்று நெடுநேரம் அசைவற்றிருந்து பின் நினைவுற்றுப் புறம்போந்து ஓரிடத்திற் றங்கித் திருப்பதிகங்கள் பல இசைத்தனர். குலாப்பத்து, கோயிற்றிருப்பதிகம், கோயின் மூத்ததிருப்பதிகம் முதலியனவும், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் என்பனவுந் தில்லையிற் பாடப்பட்டன. திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருத்தெள்ளேணத்தின் பிற்பகுதி என்பன

வுந் தில்லையிலே மகளிர்க்குரிய பல்வகை விளையாட்டுக் களிற் பாடத்தக்க விதமாய் அருளிசசெய்யப்பட்டன. குயிற்பத்து என்பது உத்தரகோசமங்கையில் அல்லது திருப்பெருந்துறையிற் செய்யப்பட்டிருப்பதாகத்தோன்று கிறது. அதன்கட் டில்லையைப்பற்றி யாதுங் கூறப்பட வில்லை. அச்சப்பத்து தில்லையில் அருளிச் செய்யப்பட் டதே. சிவபெருமானைக் கடவுளென்று வணங்காதாரைத் தாம் எவற்றினும் மிக அஞ்சுவதாக அடிகள் இவற்றினுட் குறித்தனர். இவர் தில்லையி லருளிச்செய்த 'திருவாசகச் செழும்பாடல்களை ஆண்டுள்ள அடியாரெல்லாருங் கற்றுப் பெருவியப்பும் பெருமகிழ்வு மெய்தினர்.

திருவாதவூரடிகள் திருவாலவாயினின்றும் மீண்டு திருப்பெருந்துறைக்குச் சென்று குருந்த மரநிழலில் வைகியகாலை, அவரோடிருந்த அடியார்கள் அருட்குரவ ரோடு வந்து அவர் மறைந்தபோது அடிகட்குச் சிறிது காலம் துணையாக வைகும்படி விடுக்கப்பட்டவர்களோ வேறு பிறரோ என்று துணியக்கூடவில்லை. திருவாத வூரடிகள் மதுரையி னின்று மீளும்வரை இறைவன் குருந்தமர நிழலில் தங்கவில்லை என்பது திண்ணம்.

'காணுமாறு காணேன் உன்னை அந்நாட்கண்டேனும்'

என்றமையால் அது தெளியப்படும். 'அன்பரு நீயுமங்கு எழுந்தருளி இங்கு எனை யிருத்தினாய்' என்ற திருச்சதகப் பகுதி தம்முடனிருந்த அடியார்களும் மறைந்த பின்னர் அடிகளாற் பாடப்பெற்றிருக்கலாம். 'அடியாரானரெல் லாரும் வந்துன்றாள் சேர்ந்தார்' என்பதும அதனை வற் புறுத்தும். அடியார்களைத் திருவாதவூரடிகளோடு இருத் தியதற்குக் காரணம் அன்பர் துணையின்றி அடிகள் துயர் கூர்வர் என்பதுபற்றியே என்க. அது,

'சித்தமயர்ந்தே துயர்கூருஞ் செய்தியனுமென் பதுதேரா
வித்தலமீதே சின்னாளிங் கெம்முடன்வாரா திருமென்றோம்.'

என்றமையாற் காண்க.

நிலவுலகத்தில் தங்கிய அடியாரைத் தழற்பிழம்பின் மூழ்கச் செய்தற்குக் காரணம், நிலவுலகிற் சின்னாள் தங்கினும் மலவாதனை ஏற்படுமாதலின், அதனைத் தீர்த்தற் பொருட்டு ஞான அனலின்கண் அவர்களைத் தூய்மை செய்வதேயா மென்க.

'மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே
பலமலர் சமழும் தடமீதிற் பரவரி ஞானத் தழல்சேர்வித்
'திலதென நீடுஞ் சடம்வேவித் திவ்வுட லீந்தோ மிந்நாளில்'

என்றது காண்க.

அடிகளோடு திருப்பெருந்துறையில் வைகிய அடியார்கள் இறைவனோடு வராத பிற அடியார்களாயின், அவர்கள் அப்போது பரமுத்தியோ, அபரமுத்தியோ எய்துதற்குரியராயிருந்த காரணம்பற்றி அன்னோரை அங்ஙனஞ் சோதியுட்புகுவித்து ஆட்கொண்டனர் என்க. அடிகள் நிலவுலகத்திற் சின்னாளிருந்து தில்லையிற் புத்தரை வாதில் வென்று கூத்தப்பெருமானது திருவடிக்கீழ் இரண்டறக் கலக்கும் பான்மை பெற்றிருந்தமையால், அடியாரோடு அவர் அழைத்துக்கொள்ளப்படவில்லை. ஞாலத்திலிருப்பது நுகரவேண்டிய ஊழ்வினைப்பொருட்டே யாதலின், அடிகள் 'முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியா' னென்றருளினர். சிவபுராணமென்ற சொல் உயிர் பந்த நீங்கி வீடெய்தும் இயற்கை வரலாற்றினைக் குறிப்பதேயொழிய, முன் நடந்த கதை எதனையுங் குறிப்பதில்லை. அதிசயப்பத்து அற்புதப்பத்து, ஆசைப் பத்து, அடைக்கலப்பத்து, வாழாப்பத்து, புணர்ச்சிப்பத்து என்பன அவற்றிற்போந்த பாடல்களின் முடிவுச் சொற்களால் அப்பெயர் பெற்றன. செத்திலாப்பத்து என்பதில் முடிவுச் சொல் முதல் மூன்று பாட்டிலேதான் வந்துள்ளன. திருவார்த்தை என்பது 'எம்பிரானாவாரே' என்று முடியும் பத்துப்பாடல்களை யுடைமையால், அச்சொல்லே திருவார்த்தையாகக் கருதப்பட்டதுபோலும்.

திருவெண்பா எண்பதின்கண்ணுந் தசாங்க மென்பதின் கண்ணுந் திருப்பாடல்கள், வெண்பா யாப்பா லியற்றப் பட்டுள்ளன; தசாங்கத்திற்கு அப்பெயருண்மையால் திருவெண்பா என்னும் பதிகம் யாப்பினாற் பெயர்பெற்ற தென்க. திருப்பள்ளி யெழுச்சிப் பெயர்க்காரணம் தெளிவு. ஆனந்தமாலை என்பது சிவானந்த விருப்பத்தை உணர்த்தும் பதிகமாயிருத்தலால் அப்பொருள்பற்றி வந்த பெயராகும். அச்சொற்றொடரில், மாலை என்பது விருப்பத்தை யுணர்த்துவது என்று பொருள்படும். உயி ருண்ணிப்பத்து என்பதும் தற்போதத்தை இறைவன் ஒழித்தமையையே கூறுவதால், அதுவும் பொருள்பற்றி வந்த பெயரேயாகும். பிரார்த்தனைப்பத்துள் ஒவ்வொரு செய்யுளும் அருளாய் என்னும் முடிவுச் சொல்லுடைமை யால் அஃது அப்பெயர் பெற்றதுபோலும்! திருப்பாண் டிப்பதிகத்துட் பாண்டியமன்னன் ஒவ்வொரு செய்யு ளிலுங் குறித்தோதப்படுவதால் அது சொல்லும் பொரு ளும்பற்றி வந்த பெயராகும். திருவெம்பாவை என்பது முடிவுச்சொல்லாற் பெயர் பெற்றதென்பது தெளிவு. நீத்தல்விண்ணப்பத்திலுள்ள ஒவ்வொரு பாட்டிலும் 'விடுதிகண்டாய்' என்ற சொற்றொடர் வருவதால், அஃது அப்பெயர்பெற்றதென்க. அதன் முதலிருபது பாட்டிலேமட்டும் உத்தரகோசமங்கை கூறப்படுகிறது. ஏனையவற்றுள் அது கூறப்படாமைக்குக் காரணம் விளங்கவில்லை. திருப்பொன்னூசலின் ஒவ்வொரு பாட்டி லும் உத்தரகோசமங்கை என்ற சொற்றொடர் வந்திருப்ப வும், அதனுட் டில்லையைப்பற்றிய குறிப்பு யாதுமில்லா திருப்பவும் அது தில்லையி லருளிச்செய்யப்பட்டதென்று கூறுதல் தவறாகுமன்றோ? அன்னைப்பத்தினுள்ளும் 'பெருந்துறை அத்தர் உத்தரமங்கையர்' என்ற சொற் றொடர்களே வந்துள்ளன. திருத் தசாங்கத்துள்ளும் அவ் வாறே காண்க. திருப்புலம்பலென்பது பல தலங்களைப் பற்றிப் பாடிய திருப்பாடல்களுள் மூன்றே கொண்டு திகழ்கின்றது. திருத்தெள்ளேணத்தில் இரண்டாம் பாட் டில் திருவாரூரைப்பற்றியும், பதினாறு இருபது என்னும்

எண்ணுள்ள பாட்டுக்களில் தில்லையைப்பற்றியுங் காணப் படினும் ஒவ்வொரு திருப்பதிக்கும் பப்பத்துப்பாட்டும் முறையின் வைத்து அதன் முற்பகுதி திருவாரூரிலும் பிற்பகுதி தில்லையிலும் பாடப்பட்டதாகக் கருதலாம். திருவேசறவு என்பதனுள்

"இடைமருதே
அருளெனக்கிங் கிடங்கொண்ட வம்மானே"

என்றமையால், அது திருவிடைமருதூரிற் பாடப்பட்ட தாகக் கருத இடமுண்டு. அதனுள் 'தென்பாலைத் திருப் பெருந்துறை' என்றதாலும், 'இங்கு இடைமருதே' என்றதாலும் அது பாடப்பெற்ற இடம் திருப்பெருந் துறையன்று என்பது தெளிவு. பிடித்த பத்தினுள் ஒரு திருப்பதியுங் குறிக்கப்படவில்லையெனினுந் தில்லையிற் சென்று கூத்தப்பெருமான் குரைகழல் வணங்கி இரண் டறக்கலந்த உணர்ச்சி திட்பமடையப்பெற்ற பின், இஃது அருளிச்செய்யப்பட் டிருக்கலாம். திருவண்ணாமலையில் அடிகள் மார்கழித்திங்களிலே திருவெம்பாவை பாடின ராதலின் ஆவணித்திங்களில் மதுரையில் இருந்து அதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்கள் கழித்துத் திரு வண்ணாமலைக்கு அவர் வந்தனரென்று கருதலாம். நரிபரி யாக்கிய திருவிளையாடல் நிகழ்ந்த ஆண்டிலேயோ பிறி தொரு ஆண்டிலேயோ அடிகள் திருவெம்பாவை பாடி யிருத்தல்வேண்டும். இரண்டும் ஒரே ஆண்டிலேயே பாடப்பெற்றிருக்கலாம். திருவெம்பாவையை ஒன்பான் சத்திகளின் திருவிளையாடலென்று கருதுவாருமுளர். திருஅம்மானையிற் திருப்பெருந்துறையைப்பற்றிய குறிப்பு பல திருப்பாடல்களில் வந்துள்ளன. 'அண்ணாமலை யானைப் பாடுதுங்கா ணம்மானாய்' என்ற ஒரு அடியின் மாத்திரமே அண்ணாமலை குறிக்கப்பட்டது. 'ஐயாறமர்ந் தானைப் பாடுதுங்கா ணம்மானை' என்றதுங் காண்க. ஒரு திருப்பதியிற் பாடிய திருப்பதிகத்துள் பிற திருப்பதி களை விதந்தோதுதலு மியல்பே. திருவம்மானை திருப் பெருந்துறையிற் பாடப்பட்டிருத்தலுங் கூடும்.

திருவுந்தியார் காஞ்சியிற் பாடப்பட்டதென்று கருதுதற்குக் காரணம் அதன் இரண்டாவது திருப்பாட்டில் 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்' என்றமையேயாமென்க. திருக்கழுக்குன்றில் பெருந்துறைப்பெருமானைக் குறித்துப் பாடி இறைவன் தமது திருக்கோலத்தையுந் திருவடிகளையுங் காட்டினதாகப் புகன்றமையால், ஆண்டு அடிகள் இறைவனது திருவடிவங் கண்டாரென்று கருத இடமுண்டு.

'கணக்கிலாத் திருக்கோல நீவந்து
காட்டினாய்கழுக் குன்றிலே'
'இலங்குகின்ற நின்சேவடிக ளிரண்டும்
காட்டினாய்கழுக் குன்றிலே'

என்றும் வருவன காண்க.

திருக்கழுக்குன்றத்தினின்று தில்லைக்குப்போகும் வழியில் முல்லை நிலமும் இருப்பதால் அவ்விரண்டிற்குமுரிய கருப்பொருள்களைக் கடவுண்மாமுனிவர் எடுத்துவிதந்தனர். கொன்றை காயா முதலியன முல்லை நிலத்திற்குரியன. மா, தெங்கு முதலிய மருதநிலத்திற்குரியன. பிறவு மன்ன. தில்லையுள் தலைவன் தலைவியர் மாட்டு நிகழ்வதொப்ப அம்பலவாணருக்கும் அடிகட்கும் உழுவலன்பின் பெருங்காட்சி நிகழ்ந்தமையால், இயற்கைப் புணர்ச்சி போன்ற இரண்டற்ற கலப்பு நேர்பட்டது. திருக்கூத்தக் காட்சியைச் சிறப்பித்துக் கண்டபதது பாடப்பட்டது. தில்லையிலேயே மிகுந்த திருப்பதிகங்கள் அருளிச்செய்யப்பட்டனவென்று தெரிவதால் அங்கே ஓராண்டளவாதல் அடிகள் இருந்திருத்தல் கூடும்.

ச. புத்தரை வாதில்வென்றது

திருவாதவூரடிகள் தில்லையில் தங்கியிருந்த காலத்தே புத்தரைவாதில் வெல்ல நேர்ந்தமைக்குக் காரணத்தை ஈண்டு ஆராய்வாம். சிவபெருமானது திருவடிகளை மறவாத ஒரு பேரன்பர் பன்னாட்டு வளங்களையுங் காண விரும்பிச் சோழநாட்டு வளங்களைத் தெரிந்து தில்லையம்பலவரைத் தொழுதபின் ஈழநாட்டு வளங்களைக் கண்டறியுங் கருத்துடன் அவண் சென்று அந்நாட்டு அரசரது நகரையடைந்து தாம்போய் இருக்குமிடங்களிலெல்லாம் 'பொன்னம்பலம்' என்று சொல்லத் தொடங்கினர். அப்போது அங்குள்ள புத்தமதத்தினர் அரசனிடஞ் சென்று, 'திருநீறு, கண்மணி முதலியன அணிந்த சைவனொருவன் நாடோறும் ஐயமெடுத்துண்பவன் "பொன்னம்பலம் நீடூழி வாழ்க" என்று நிற்கும்போதும் இருக்கும்போதும் சொல்லுகின்றான்' என்று கூறியவுடன் அவனை அரசன் இங்கே கொணர்மின் என, அவர்கள் சென்று அவரை அழைப்ப, அவர் ஐயமெடுத்துண்பவனுக்கும் அரசனுக்கும் என்ன தொடர்பு உளது என்றார். யாவரையும் பாதுகாப்பது அரசன் கடமையாதலால் அரசனைப் போய்ப் பார்த்தல் உமது கடனென்றார்கள். உடனே அவருந் தூதர்களுடன் அரசனவைக்குச் சென்றார். தனது புத்த குருவோடு தனது பரிவாரங்கள் புடைசூழ அரசன் அவையின்கண் வீற்றிருந்தான். பெரியவர் வெண்கோவணமுடுத்து ஐயம எடுக்கும் பையைத் தோளில் தாங்கிக்கொண்டு நெற்றியில் திருவெண்ணீறுங், கையிற் பிரம்புந், தலையிற் சடையுங், காதிற் சுந்தரவேடமும், இதழில் முறுவலு முடையவராய்ப் புத்த அரசன் மருங்கு சென்று பொன்னம்பலம் என்று சொல்லிக்கொண்டு கீழிருந்தனர். பொன்னம்பலமென்று கூறுவதற்குக் காரணம் யாதென்று அரசன் வினவ, 'அவர் சோழநாட்டிலே தில்லை என்றொரு திருப்பதியுண்டு. அஃது எத்தலத்துக்கும் முதற்றலமாய் ஞாலத்திற்கு நடுவாய் விளங்குவது. அங்குள்ள அம்பலத்தில் இறைவன் அம்மைகாணத்

திருநடம்புரிந்தருளுவன்; அத்திருக்கூத்தினைக் கண்டோர் பிறவாநெறி எய்துவர். கொடுந்தன்மையுடையாரும் பொன்னம்பலமென்று ஒருகாற் புகன்றால் திருவைந்தெழுத்தை இருபத்தோராயிரத்து அறுநூறு முறை உரைத்ததற்கு ஒப்பாகு' மென்றார். இதனைக் கேட்ட புத்தகுரு, 'பிடகநூற்றலைவனாகிய புத்தனினும் பெரிய கடவுள் வேறில்லை என்பதைத் தில்லை சென்று மூன்று நாளில் நிலைநாட்டித் திருமன்றினைப் புத்தர் பள்ளியாக்குவேன்' என்று மொழிந்து தில்லைக்கு உடனே புறப்பட்டான்.

இலங்கை மன்னனுந் தன் அருமை மகளுக்குள்ள ஊமைத்தன்மை சிதம்பரத்திற்குப் போனால் நீங்குமென்று கேள்விப்பட்டுத் தன்னுடைய சேனை சூழச் சிவிகை ஏறி மகளுடன் புறப்பட்டுத் தில்லையெல்லையடைந்தான். இவர் முன் சென்ற புத்தகுரு தில்லைத் திருக்கோயிலின்கண் ஒரு மண்டபத்திலே போய்த் தங்கியிருந்தான். அரசன் அவண் சென்று புத்தகுருவைக் கண்டு மகிழ்ந்திருந்தபோது கோயிலிலுள்ள தொண்டரெல்லாரும் ஒருங்கு சேர்ந்து புத்தகுருவைப் பார்த்து 'நீ இங்கிருத்தல்கூடாது; இவ்வூர் எல்லையைக்கடந்து ஓடிப்போய்விடு' என்றார்கள். அப்போது அவன் 'சோழமன்னன் முன்பு சைவசமயம் தக்க நெறி அன்றென்றும் புத்தனே உயர்ந்த தெய்வமென்றும் நிலைநிறுத்தாமல் நான் போவதில்லை' என்றான். இதனை ஊரார் யாவருக்குங் கோயிலார் தெரிவித்தனர். அவர்களெல்லாரும் புத்தகுருவினிடஞ் சென்று அஞ்சாது 'நீ இங்குவந்திருந்து மதியாது பேசுவதன் காரணமென்ன' வென்று வினவ, அப்போது புத்தகுரு அவர்களைப்பார்த்து 'உங்கள் கடவுளே கடவுளென்பீராயின் எங்கள் கடவுளே மெய்க்கடவுளென்று நான் கூறுவேன். நீங்கள் மறுக்க முடியுமாயின் மறுக்கலாம்' என்றான். அதுகேட்ட அங்குள்ள பெரியோர்கள் இவன் கூறுவதை மறுக்காமல் இவனைத் துரத்தினால் தில்லையிலுள்ளார் புத்த மதத்தை மறுக்கமுடியாது புத்

தனைத் துரத்திவிட்டார்களென்று பிறர் குறைகூறுதல் கூடுமாதலின், இவனோடு தக்க அறிஞர்முன் வாதுசெய்து இவனை வெல்லுவதே நன்முறை என்று கருதி அரசனுக்கும் பிறபெரியார்க்குந் தில்லைக்கு வரும்படி ஓலை யனுப்பினார்கள். அப்போது மாலைக்காலம் வரக் கதிரவன் மறைந்து மதி தோன்றினன். வான்மாதின் திலகம் போலவும், கங்குல் என்னும் நங்கை முகம்பார்க்குங் கண்ணாடிபோலவும், சிவபெருமானுக்குக் கவித்த முத்துவெண்குடை போல்வுந் திங்கள் மண்டிலம் இலங்கிற்று. தில்லையோர் இரவில் உணவுண்டு தூங்குங்கால அம்பலவாணன் அவர்கட்குக் கனவிற்றோன்றி இவ்வூர் எல்லையில் திருவாதவூரன் எம்மிடம் அன்பு செலுத்திக் கொண்டிருக்கின்றான். அவன்பாற் சென்று இதனை நீங்கள் கூறினல் உடனே வந்து புத்தரை வாதில் வெல்லுவான் என்று அருளிச்செய்து மறைந்தான். அக்கனவு கண்டோர் அனைவரும் விழித்தெழுந்து கோயில் மண்டபத்தே வந்து கூடி ஒருவர்க்கொருவர் கண்ட கனவைத் தெரிவித்து அம்பலவர் திருவருளை வியந்து மகிழ்ந்து திருவாதவூரடிகள் வீற்றிருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றனர். அவர் நிட்டை நீங்கியவுடன் அவரைக்கண்டு வணங்கிக் கனவினை உரைத்தனர். உடனே அடிகள் வந்தவர்களுடன் திருமன்றிற்கு ஏகி இறைவனை வணங்கிக்கொண்டு புத்தகவிமண்டபத்திற்குப் போய் ஓரிருக்கையில் இருந்தருளினர். அப்போது சோழமன்னனும் அம்பலவரை வழிபட்டு வாதுமண்டபத்திற்குச் சென்று அடிகளை வணங்கி அவருக்கருகோ ரிருக்கையி லிருந்தனன். ஈழமன்னனுஞ் சோழமன்னனை வணங்கி அவரால் இருக்கை பெற்றனன். வாதுக்கு நடுநிலையாக நின்று சான்று புகல்வோருந் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்டனர். வாதினைப் பார்க்க வந்தவர்களும் பலர் அங்கிருந்தனர். அரசன் வாதவூரரை வாது நிகழ்த்தும்படி வேண்டினன். புத்தகுரு இவ்விடம் வந்த காரணம் யாதென்று அடிகள் வினவ, அவன் 'என் சமயத்தை நிலைநாட்டிப் பொன்னம்பலத்தைப் புத்தர் கோயிலாக ஆக்கவந்தேன்' என்றனன்.

இப்போது ‘அடிகள் உன்னுடைய கடவுளின் தன்மையை யும் அவனடியிற் சேரும் முறைமையையுங் கூறுக’ என்றார். உடனே புத்தகுரு புகன்றதாவது, ‘எம் இறைவன் அறங்களை விரித்துரைக்கும் பிடக நூலினை இயம்பியதோடு எவ்வுயிர்க்கும் அன்புடையனாய்ப் பல் பிறப்பெடுத்து உயிர்களுக்கு நன்மைசெய்து கொல்லாமை முதலிய அறநிலை நின்று அரசமர நீழலில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருப்பன். கருவிலே சேரும் உருவம் வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய ஐந்து கந்தங்களுங்கூடி உடம்பு தோன்றுகிறது. அதன்கண் எழும் பலதிறப்பட்ட அறிவுகளே உயிராகும். எல்லாப் பொருள்களுங் கணந்தோறுந் தோன்றி யழியும். கந்தங்களின் கூட்டம் அழிவுறுவதே பிறவித்துன்பம் அறுதலாம். ஐங்கந்தமும் முற்றும் அற்றுப்போதலே முத்தி’ என்பது. அப்போது அடிகள் புத்தகுருவை நோக்கி ‘உன் தலைவன் பிடகநூல் உரைத்தான் என்றனை. அறிவு கணந்தோறும் அழியுமாயின் சொல்லையும் பொருளையும் நாடி நூல்செய்வதின் முன்னமே அவற்றை அறிந்த அறிவு பங்கமுறுமானால் நூலினை எவ்வாறு இயம்ப முடியும்? ஆதலால் அறநூல் கூறப்பட்டதென்பது பொருந்தாது. உன் கடவுள் பிறந்தனன் என்றால், பிறவியானது மயக்கத்திற்குக் காரண மாதலால் உன் கடவுள் மயக்கத்தி லாழ்ந்தவனாவான். பிறர் மயக்கத்தைத் தீர்க்க வந்தவன் தானே மயக்குற்றால் பிறர் மயக்கை அவன் எவ்வாறு தீர்க்க முடியும்? முடியாதாகலின் உன் கடவுட்கொள்கை பிழைபட்டதே. உன் கடவுள் ‘கொல்வது கருதான்’ என்றாய். புலி, நரி முதலிய விலங்குகளாகப் பிறந்தகாலை, பசி மிகுந்தபோது ஊன் தின்னாதிருத்தல் இயல்பாமோ? பஞ்ச கந்தக்கூட்டம் அழிவதானால் உன் கடவுளுக்கு உருவம் எது? உன் தலைவனாய புத்தன் பிறக்கும்பொழுது தாயின் வயிற்றைப் பீறிக்கொண்டு வெளிவந்தமையால் தன் தாய்க்கே தீங்கிழைத்தவனாவான். பூதநான்கின் கலப்பாலே அறிவு உண்டாவதென்றால் அவ்வறிவு அப்பூதப்பிண்டத்தின் குணமாக

வேண்டும். ஒருவன் தூங்குங்காலை அவன் மேலேறிச் செல்லும் பாம்பினை அறியமாட்டான். பூதச்சேர்க்கையாகிய உடம்பு பாம்பின் செலவை அறிய முடியுமோ? ஆதலால் அறிவு பூதக்கூட்டத்தில் எழுவதென்று கொள்ளுதல் தவறு. ஐங்கந்தமாகிய உடம்பு அழியாதுகிடப்ப, உயிர்நீங்கியகாலை அஃது அறிவொழிந்து போதலும் இதனை வற்புறுத்தும். நாற்பூதமே யெப்பொருளுமென்று கூறும் நீ, அவை கலப்பதற்குரிய இடத்தை யாதென்று கூறுவாய். 'இடம், திசை என்பனவற்றை இல்பொருள் என்பையாயின் நீயே வடதிசை நோக்கிப் புத்தரை வணங்குதல் எப்படி? மரம் முதலிய ஓரறிவு உயிர்களை உயிரில் பொருளென்பாய்? அவை அங்ஙனமாயின் உணவுண்டகாலை வளர்தலும் அஃதில்லாதகாலை தேய்தலும் அவற்றிற்கு எவ்வாறு இயலும்? தீவினைப்பயனை நுகர மக்கள் அவையாய்ப் பிறத்தல் யாங்ஙனம்? கொல்லுவது குற்றம்; பிறர் கொன்றதைத் தின்னுதல் குற்றமில்லை என்பது உன் கொள்கை. ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனை உனக்குக் கொடுத்தவன் கொலைப்பாவமெய்துவது உன் மனத்திற்கொத்ததுதானோ? ஐவகைக் கந்தங்கெடவே உயிர்கெடும். 'உயிர் கெடுமாயின் முத்திபெற்றது யாது?' என்று இவ்வாறு மொழிந்து புத்தர் கொள்கைகளை அடிகள் மறுத்தனர்.

புத்தகுரு வெகுண்டு அடிகளை நோக்கி உம்முடைய கடவுளின் இயல்பு யாது? முத்தி என்பதின் இலக்கணமென்ன? என்று வினவினன். அப்போது அடிகள் அருளிச்செய்வதாவது 'எங்கள் கடவுள் உலகம் உய்தற்பொருட்டு ஆல நீழலிலிருந்து நால்வர்க்கு அறம் உரைத்தார். உலகத்தை ஐந்தொழிற்படுத்தும் இறைவர் தமது திருவுருவினை உலகர் அறிந்து கும்பிடுதற்பொருட்டுப் பொன்னம்பலத்தில் திருநடனம் புரிகின்றார். அவர் உமையொருபாகர்; நீறணி மேனியர்; அவர் பெருமை சொல்லவொண்ணாது' என்று மொழிந்த அளவில், புத்தகுரு அவரை யாதும் மேற்சொல்லாவண்ணம் தடுத்துச்

சில கேள்விகள் கேட்டான். ‘ஆலநீழலில் உமது கடவுள் செபமாலையோடிருக்கிறாரெனின், எக்கடவுளை நினைந்து அவர் தியானத்திலிருக்கின்றார். தில்லையில் அவர் நடிப்பாரெனின் நல்லறிவுடையோர்கள் யாராவது தாமாக ஆடிக்கொண்டிருப்பார்களா? திருநீற்றினைச் செவ்வொளி தங்குந் தமது திருமேனியில் எதன்பொருட்டு அணிந்தார்? புனிதமென்று அணிந்தாரா? உம்முடைய இறைவன் மங்கையொருபங்கனெனில் உடம்பிற் பாதி பெண்வடிவுடையார் யாராவதுண்டா? அவர் பெண்ணோடிருப்பின் அவரை வணங்கும் நீர் துறவியாவானேன்?’ இவைகளைப் புத்தன் புகன்றகாலை அடிகள் பின்வருமாறு மறுமொழி செப்பினர். ‘எங்களிறைவன் செபமாலை வைத்திருத்தல் தம்பொருட்டன்று. உலகத்தாருக்குத் தவங் கற்பித்தற் பொருட்டு; அது படைக்கலத்தொழில் பயிற்றுவோர் பிறர் பொருட்டுத் தங்கையிற் படைகலமேந்தியதனை ஒக்கும். உயிர்களுக்கு உயிராய் எல்லாவற்றையும் ஆட்டுவிக்குமியல்பைக் காட்டுவதற்காக மன்றினுள் நடிக்கின்றாரேயொழியத், தம்பொருட்டு நடிக்கவில்லை. நீற்றினை இறைவனணிந்தது உலகினரது இடரையொழித்தற் பொருட்டு. முடிவுகாலத்தில் எல்லாவற்றையும் ஒடுக்கித் தாமே தனி நிற்பரென்பதை அது குறிக்கும். போகத்தை உலகத்தார்க்குக் கொடுத்தற் பொருட்டு மாதொருபாகராயும், முத்தி கொடுத்தற் பொருட்டு யோகியாயும் இறைவர் இருப்பதை நீ அறியாய்’ என்றனர். புத்தகுருவும் பிறரும் ஒழுங்காக வாது செய்யாமற் பொருந்தா வழக்குகளையும் இழிவான சொற்களையும் புகன்றது கேட்டு அவர்கள் நாவினின்றுங் கலைமகளை ஏகிவிடும்படி பணிந்தார்.

‘முக்கணனருளில்லையென்றிடு மூகர்நாவை யகன்றுநீ
நக்கனார் திரு வாணையேயென நன்மடந்தையு மஞ்சினாள்.’

புத்தகுரு முதலாயினோர் ஊமையானதை யாவருங் கண்டு வியந்தனர். அப்போது ஈழமன்னன் அடிகள் திருவடிக் கமலங்களில் வீழ்ந்து, ‘பேசுந்தன்மையுடை

யாரை ஊமை யாக்கினீர். ஊமையாயிருக்கும் என் புதல்வியைப் பேசும்படி செய்தருள வேண்டும். நான் உமக்கு அடிமை' என்றனன். அடிகள் அதற்கிசைந்து அவளை இங்கு அழைத்துவாருமென்று கட்டளையிட்டார். அரசன் தன்புதல்வியை அடிகள் முன் நிறுத்தினன். அவள் அடிகளை வணங்கி நின்றபோது அடிகள் அக்கன்னியைப் பார்த்துப் 'புத்தருரைத்த வினாக்களுக்கு விடை பகர்க' என்று விளம்பினார். அங்குள்ள புத்தர் கேட்ட இருபது வினாவிற்கும் அவள் வாய்திறந்து தக்கவிடை பகர்ந்தனள். அவற்றை அடிகள் திருச்சாழல் என்னும் திருவாசகமாகப் பாடியருளினர். அப்போது ஈழமன்னனுந் திருநீறணிந்து திருவைந்தெழுத்தினை ஓதி வளவனோடுந் தில்லைவாழ் மக்கள் எல்லாரோடும் ஒருங்கு சேர்ந்து அம்பலவரை வணங்கி அடிகளின் பெருஞ்சீர் பரவினன். பின்னர்ப் புத்தர்களெல்லாம் ஊமை தீரப் பெறவேண்டுமென்று அடிகளிடம் வணக்கத்துடன் ஈழ நாட்டு மன்னன் தெரிவித்தான். அடிகள் அவர்கள்மீது திருவருள் நோக்கம் பாலித்தவுடன் அவர்கள் யாவரும் வாய்திறந்து பேசினர். அவர்கள் புத்தவேடத்தை யொழித்துத் திருவெண்ணீறணிந்து சைவராயினர். பின்னர் யாவருங் கூத்தப் பெருமானைத் தொழுது அவரவர் இடங்கட்குச் சென்றனர். திருவாதவூரடிகளைத் தில்லையிலே இருக்கும்படி அவ்வூர் வாசிகள் வேண்டினர். திருவாதவூரடிகள் தாம் முன்னிருந்த இடத்திற்குச் சென்று நிட்டையில் வதிந்தனர். அடிகள் அங்கிருக்கு நாளிலே திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, யாத்திரைப் பத்து முதலிய திருவாசகப் பதிகங்களைப் பாடியருளினர்.

அம்பலவாணர் ஓர் அந்தணர் வடிவங்கொண்டு, திருவாதவூரடிகள் முன்சென்றகாலை, அடிகள் அவரை நீர் எவ்விடத்தீ ரென்று வினவினர். அதற்கவர் "நான் பாண்டிமண்டலத்திலே யுள்ளவன்; நீர் இறைவனைப் பரிமேல் வரும்படி செய்தருளினமையால் பாண்டிநாடு பெருமை யடைந்தது. நீர் திருப்பெருந்துறையில் ஐயன்

திருவடிசேவை செய்து திருக்கழுக்குன்றிற்குச் சென்று இறைவனது திருக்கோலங்கண்டு தில்லை யெய்திப் புத்தரை வாதில் வென்ற செய்தி யெல்லாங் கேட்டு அங்குள்ள நாட்டார் யாவரும் மகிழ்ச்சிகொண்டார். நீர் அருளிச் செய்த திருப்பாடல்களை ஓதக் கருதி அவற்றை எழுது வான் ஈண்டுவந்தனன். நீவிர் அவற்றை இயம்பவேண்டு" மென்று வற்புறுத்தினர். அப்போது அடிகள் அவற்றை மொழிய, ஐயர் ஒரு ஏட்டினில் அனைத்தையும் வரைந்து கொண்டபின்னர், அம்பலவர்மீது ஒரு கோவை பாட வேண்டுமென்று அடிகளைக் கேட்டனர். அவரும் அங் ஙனமே பாடியருள அதனையும் எழுதி முடித்து ஐயர் மறைந்து போயினர். இதனைக் கண்ட அடிகள் அந்தண ராய்வந்த முதல்வரைத்தேடி அயர்ச்சியுற்றார்.

'எழுந்தன ரெங்கு மோடி நாடின ரென்கொ லென்னு
வழிந்தனர் மன்று ளாடு மாதியென் றறிந்த பின்னர்ப்
பொழிந்தனர் கண்ணீ ரெங்கே போயினை யென்று மண்மேல்
விழுந்தனர் பரமானந்த வேலைவெள் ளத்து ளானர்.'

இறைவன் தானெழுதிய ஏட்டின் முடிவில் வாத வூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது என்று வரைந்து அழகிய திருச்சிற்றம்பல முடையார் என்ற கையெழுத்தும் அமைத்துப் பொன்னம்பலத்தின் திருவாயிற் படியிற் றிரு வேட்டினை இட்டனர். அதனைப் பூசனை புரியவரும் அந்த ணர் கண்டு வியப்புற்று அப்புதுமையை யாவர்க்குந் தெரி வித்தார். எல்லாரும் ஓடிப்போய்ப் படிமேல் இருந்த புத்தகத்தைக் கண்டார்கள். யாவருங்கூடி இஃது இன்ன தென்று பார்ப்பதே தக்கதென்று தீர்மானித்தபோது, ஒருவன் மலர்தூவி வணங்கி அதனை எடுத்து முழுதும் படித்துக்காட்டி முடிவி லெழுதியுள்ள அம்பலவர் திரு வுள்ளக் கருத்தையும் எல்லாருக்குந் தெரிவித்தான். எல் லாருங் கேட்டுக் குறுவியர்ப்பும் மயிர்ப்புளகமுங் கொண் டவராய் வீட்டு நெறிக்கு இனிச் சிவநூல் வேறுளதோ வென்றார்கள். அறிஞரும், அந்தணரும் இந்நூலின் பொரு ளினை அறியக்கருதித் திருவாதவூரடிக ளிருக்கு மிடத்

திற்குச் சென்று நிகழ்ந்தவற்றை யுரைத்தனர். அவர் கடவுள் தமக்களித்த பெரும்பேற்றினை நினைந்து அளவற்ற அன்போடு திருவருளை வியந்தனர். இறைவன் தம்பால் ஏடெழுதிக் கொண்ட சூழ்ச்சியையும் அவர்களுக் கெடுத் துரைத்தார். இவ்வரிய தமிழ்மாலைகளின் நுண்பொருளை எங்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று அடிகளை வேண்டிக்கொண்டகாலைச் சிற்றம்பலவர் திருமுன்பு நுண் பொருள் புகல்வதாகச் செப்பிப் பொன்னம்பலத்திற் கேகினர். எல்லாரும் அவர் பின்னே அவண் சென்றனர். அடிகள் இத்தமிழ்மாலைப் பொருள் இவரென் றுரைசெய்து திருமன்றினுள் விரைந்தேகி யாவருங்காண மறைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தனர். யாவருங் கண்டு கசிந்து நெக்கு நெக்குருகிக் கண்ணீர் மழை பொழிந்து பரவசப்பட்டனர். விண்ணவர் பூமாரி பொழிந்தனர். வானில் மந்திர ஒலிகள் முழங்கின. பூதங்கள் ஆனந்தக் கூத்தாடின. கணநாதர் இறைவனைப் புகழ்ந்து பாடினர். யாவருந் திருவாசக வின்பம் நுகர்ந்தனர்.

'திருவாத வூரடிகள் சரிதையே சிவசரிதை
திருவாத வூரடிகள் ஞானமே சிவஞானம்
திருவாத வூரடிகள் திருவாக்கே சிவவாக்கு
திருவாத வூரடிகள் சிவமஃதென் சிந்திதமே'.

மாணிக்கவாசகப் பெருமான் காலத்தில் இலங்கை யில் புத்தமதம் பரவியிருந்ததென்றும், இந்நாட்டிலுள் ளார் அந்நாட்டுக்குச் சென்று தலயாத்திரை செய்வது வழக்கமாயிருந்ததென்றும் இச்சரித்திரத்தினாலே யறி கின்றோம். வடக்கே மோரியர் தலைவனாய் கி மு உஎஉ- முதல் உகூஉ-வரை மகத நாட்டில் அரசாண்ட அசோக மன்னன் தன் உடன் பிறந்தானாகிய மாகேந்திரன் என்பவ னையும், உடன் பிறந்தாளாகிய சங்கமித்திரை என்பவளை யும் இலங்கையிற் புத்தமதத்தைப் போதித்தற் பொருட்டு அனுப்பினான். அவர்கள் திச்சன் என்னும் இலங்கை அரச

ஞல் விருப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். மாகேந்திரனென்பான் இலங்கையிலேயே வாழ்நாள் முழுவதும் கழித்தொழிந்தான். ஆதலால் கி. மு. மூன்ருவது நூற்ருண்டு முதற்கொண்டே இலங்கையிற் புத்தமதம் பரவியிருந்தது. திருவாதவூரடிகள் காலத்தே அஃது ஆங்குத் தழைத்தோங்கி யிருந்தது. ஆதலாற்ருன் தென்ஞட்டுப் பெரியவர் பொன்னம்பலம் என்று பன்முறை கூறியதைக் குற்றமென்று சிலர் கருதி அரசனிடஞ் சென்று குறை கூறுவாராயினர். ஆண்டுச் சென்ற பெரியவர் உறுதியான பேரன்புடையாராதலின் யாவர்க்கும் அஞ்சாது பொன்னம்பலத்தின் பெருமையை எடுத்து அரசனுக்கு உரைப்பாராயினர். புத்தமதத்தில் மூழ்கியிருந்த நாட்டினைச் சிவநெறிப் படுத்துவதற்கு இப்பெரியவரின் உறுதிப்பாடே முதற்காரணமாயிற்று. பொன்னம்பலம் என்று ஒருகாற் சொன்ஞல் அஃது ஒருநாள் முழுவதும் ஐந்தெழுத்தைக் கூறியதனே டொக்குமென்பார், இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் அதனை உரைப்பதற்கொப்பாகு மென்ருர். ஒருநாள் முழுவதும் விடும் மூச்சு இருபத்தோராயிரத்து அறுநூருதலின் அவ்வாறு கூறினர். பொன்னம்பலமென்று கூறியதற்காகப் பெரியவரை வருத்தாமற் புத்தமதத்தைத் தில்லைசென்று நிலைநாட்டுவேன் என்று புத்தகுருப் போந்தது தக்கதொரு நல்ல முறையே. சமயப் பகைவரைத் துன்புறுத்துஞ் செயலைப் புத்தர் அக்காலத்தில் அந்நாட்டில் மேற்கொள்ளாதிருந்தமை பெரிதும் பாராட்டத் தக்கதே. தில்லையிலுள்ளாரும் புத்தகுருவோடு வாதஞ்செய்ய முயன்ருர்களே யொழிய அவனை அடித்துத் துரத்திற்றிலர். அஃது அக்காலத்துச் சமயப் பொறுமையை எடுத்துக் காட்டுவதொன்றே.

இலங்கைமன்னனும் புத்தசமயத்திலே மிகுந்த உறுதிப்பாடுடையவனகத் தெரியவில்லை. சைவநூல்கள் விதித்ததை ஒருவாறு நம்பித் தில்லைக்குத் தன் மகளையும் அழைத்துச் சென்றனன் என்று தெரிகின்றது. இக்காலத்திலும் ஒரு சமயத்திலுள்ள பொது மக்கள் மற்ருெரு

சமயத்துக் கோயில்களுக்கு யாதாவதொரு பயன் கருதிச் செல்லுதல் ஓர் வழக்கமாக நிலவுகின்றது. அயற்சமயத்தாரைத் திருக்கோயிலினின்று அகற்ற முயலுதல் பொது மக்களியல்பேயாதல்பற்றிக் கோயிலிற் றொழில் செய்வோர் புத்தகுருவையும் அவனைச் சார்ந்தாரையும் கோயில் மண்டபத்தினின்றுந் துரத்தத் தொடங்கினர். அறிஞர்கள் அவரோடு வாது செய்வதனையே மேற்கொண்டனர். இறைவன் அறிஞருக்குக் கனவிற்றோன்றித் திருவருள் செய்தமையால், திருவாத வூரடிகளைப் பற்றி அவ்வூரார் யாது மறியாதிருந்தனர் என்று தெரிகிறது. அடிகள் தாழ்மைமிக்க தூய மனமுடையாராதலின் தம்பெருமையைப் பிறர் அறியாவண்ணம் தில்லையிற்சென்று இறைவனை வணங்கித் தில்லைக்கு மேற்பாலொரு தனியிடத்தில் ஞானத்தில் ஞானமாகிய இறைநினைவிற் றலைநின்றார். அரன்நாமம் உலகமெங்கும் பரவவேண்டுமென்ற ஒரு பெருங்கொள்கையினைத் திருவுள்ளத்திற் கொண்டமையினாலேதான் அவர் புத்தரோடு வாது நிகழ்த்தற்கு விரைந்தனரென்க. கடவுண் மாமுனிவர் புராணத்தின்படி அடிகள் காலத்துச் சோழ மன்னனுக்கு ஈழநாட்டுஅரசன் (கப்பம்) திறை செலுத்துதற் குரியவனாயிருந்தானென்று தெரிகிறது. சோழ அரசன் தோல்வியடைந்த புத்த மதவாதிகளை உயிர் செகுப்பக் கருதினன் என்ற புராணக் கூற்று கடவுண் மாமுனிவர் கருத்தினையே உணர்த்துமன்றி மெய்வரலாற்றினை உணர்த்துவதன்று. கடவுண் மாமுனிவரும் பரஞ்சோதி முனிவரும் மிகப் பிற்காலத்தவர்கள். அடிகள் காலத்து மக்கள் மனநிலையை உணராதவர்கள். சமணர் கழுவேறிய செய்தியின் தவறிய முறையை மனத்திற் கொண்டு, அடிகள் காலத்திலும் தோல்வியுற்றுச் சைவத்திற்கு வாராத புத்தர் கொடிய தண்டனைக்கு உள்ளாயினரென்று பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடலிற் கூறிப் போந்தனர். புத்தர் தோல்வியுற்றால் தம்மைச் செக்கிலிட்டு அரைப்பதற் கிணங்கினரெனவும், அங்ஙனமே சோழ அரசன் அவர்களைத் தண்டித்தான் எனவும், மனம்போனவாறு திருவிளையாடற்காரர் கூறினமை

பெரியதோர் இழுக்கே. இக்காலத்துச் சமயப் பற்றில்லாத சிலர் ஆராய்ச்சியின்றிச் சைவ சமயத்தைக் குறைகூறு வதற்கு அத்தகைய கூற்றுக்கள் இடந்தருகின்றன. சைவ அறிஞர் எக்காலத்திலும் பிறநெறியாளர்க்குக் காரண மின்றிக் கொடுமை செய்யக் கருதவில்லை. கடைச் சங்கத் தார் காலத்திலே பல சமயத்தாரும் தத்தம் கொள்கைகளை எடுத்து மொழிய இடம்பெற்றா ரென்பது கி. பி. இரண் டாவது நூற்றாண்டில் எழுந்த இரு பெருங்காப்பியங் களில் ஒன்றாகிய மணிமேகலையினால் நன்கு விளங்கும். கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதியே அடிகள் காலமாதலின், அக்காலத்தும் சமயப் பொறாமை இந் நாட்டிற் நிகழ்ந்ததென்பது மேலே கூறப்பட்டது. ஐந் தாவது ஆறாவது நூற்றாண்டுகளிலே சமணர்கள் மிகுந்து மூர்த்தி நாயனார் முதலிய சைவர்களுக்கு இடையூறு விளைத்தனர். ஏழாவது நூற்றாண்டிலே சமணர்கள் சிவனடியார் மடத்திலே தீ வைத்தமையானும், தாமே கழுவேறுவதாகக் கூறினமையானும் பிறரால் தடுக்கப் படாமல் அவர்கள் கழுவேற நேர்ந்தது. இராமானுசர் காலத்திலே சோழ மன்னன் வைணவர் சிலரைத் தண்டித் தற்கு ஏது, வாது செய்த வைணவர் சிலர் தவறாய மொழி களைச் சோழன் அவைக்களத்தே கூறினமையும், சிவ புராணம் முதலிய சில வடநூல்களில் சிவநிந்தனை புரி வார்க்குக் கடுந் தண்டனை விதிக்க வேண்டுமென்ற விதி யினைச் சோழ மன்னருக்குச் சிலர் எடுத்துரைத்து வற் புறுத்தினமையுமே யாமென்க. பன்னிரண்டாவது நூற்றாண்டிற்குப் பின் மக்களுள் ஒடுங்கிய நோக்கம் நில்லியதெனினும் சமய வாதிகள் சொற்போர்தொடுத் தனரே யன்றிக் கொடுஞ்செயல் புரிந்திற்றிலர்.

புத்த சமயமானது கௌதம புத்தருடைய மாணாக் கர் கருத்தின்படி உருவெடுத்ததாகும். கி. மு. ஆறாவது நூற்றாண்டி னிறுதியில், கௌதம புத்தர் அருளொழுக் கத்தை உலகிற் பரப்புதலே தலையாய கடமை யென்று கருதி அதனை யாவர்க்கும் எடுத்துரைப்பாராயினர்.

அவர் கடவுளைப் பற்றி யாதுங் கூறவில்லை. கடவுள் இல்லை என்றும் அவர் கூறவில்லை. வாசட்ட னென்னும் பார்ப்பன மாணவன் ஒருவனுக்குப் புத்தர் கூறிய அறிவுரையை நோக்கும்போது புத்தரை நாத்திகரென்று கூற இடமில்லை. அருளொழுக்கமுந் தூயவுள்ளமும் உடையவன் இறந்தபின் பிரமத்தோடு கலத்தற்குரியனு யிருப்பானென்று கௌதம புத்தர் கூறிப் போந்தது காண்க. கி. மு. ௪அ௭-ல் அவருடைய ஐந்நூறு மாணவர்கள் அவருடைய போதனைகளையும் மொழிகளையுந் தொகுத்து மூன்றுநூ லியற்றினர். அவைகளே திரிபிடக நூல்களாகும். பிடகமென்ற சொல் பெட்டி அல்லது கூடை என்று பொருள் படும். முதல் நூலுள் புத்தர் கூற்றுக்களும், இரண்டாவதில் ஒழுக்க விதிகளும், மூன்றுவதில் சமயக் கொள்கையுந் தொடுக்கப்பட்டன.

புனித வாழ்க்கை யியற்றும் ஆடவரும் பெண்டிருந் தனித்தனி மடங்களிற் றங்கினர். அசோகன் காலத்திற்கு முன்னமேயே புத்த சமயம் பிளவுபடத் தொடங்கிற்று. அசோகன் காலத்திற் கூடிய புத்த சங்கத்தில் பெரும்பாலார் தென்னுட்டினரே. புத்தர் சமயக் கொள்கை யொன்றும் வெளியிடாதிருந்தும் அவருடைய மாணுக்கர்கள் அவர் சொன்ன சில மொழிகளை அடிப்படையாக வைத்துப் புத்த சமயக் கொள்கையைத் தங்கருத்திற் கேற்ப அமைத்தனர். புத்தர் சூத்திரங்களை அதற்கு அடிப்படையாகக் கொண்டமையால், அவர் சௌத்திராந்திகர் எனப் பெயர் பெற்றனர். இவர்களது சிறந்த சமயக் கொள்கை கணபங்கவாதமாகும். இக்கொள்கை தொடக்கத்தில் எங்கும் பரவிற்று. தென்னுட்டுப் பௌத்தர் சௌத்திராந்திக மதத்தைத் தழுவினவரே. இவர்கள் கொள்கையே வடநாட்டினரால் ஈனயானம் எனப்பட்டது. இக்கொள்கை அசோகன் காலத்தில் வலியுற்றது. கி. பி. ௧௪௦-ல் காசுமீர மன்னராகிய கனிட்கர் என்பவராற் கூட்டப்பட்ட புத்த மகா சங்கத்தில் வடநாட்டிலிருந்த மகாயான வகுப்பினர் ஒருங்கு கூடினர். அவர்கள்

கொள்கை சாத்தேய மத சமயக் கொள்கைகளோடு பெரிதுங் கலப்புற்றது. மகாயானம் என்பது பெரு நெறி என்று பொருள்படும். ஈனயானம் என்பது சிறு நெறி என்று பொருள்படும். முன்னையதின் நூல்கள் பெரும்பான்மை வடமொழியில் உள்ளன. பின்னையதின் நூல்கள் பாலி முதலிய பேச்சுமொழிகளில் உள்ளன. பாலியிலேதான் பிடக நூல்கள் ஆதியில் ஏற்பட்டன. மகாயானத்தின் ஒரு பிரிவாகிய மாத்தியமிக மதம் நாகார்ச்சுனர் என்பவரால், கி. பி. முதல் நூற்றுண்டில் உண்டாக்கப்பட்டது; அதன் மற்றொரு பிரிவாகிய யோகாசார மதம் அசங்கர் என்பவராற் கி. பி. நான்கா வது நூற்றுண்டில் வகுக்கப்பட்டது; சௌத்திராந்திகத்தி னின்று சிறிது வேறுபட்டவை. வைபாடிகமதம் மிகவும் பிற்காலத்து எழுந்ததே. இவையொழிந்த வேறு பல பிரிவுகளும் புத்த மதத்திற் பிற்காலத்தி லேற்பட்டன. சௌத்திராந்திகம் யோகாசாரம் மாத்தியமிகம் வைபாடி கம் என்னும் நான்குமே சிவஞானசித்தியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களில் மறுப்புக்கு எடுத்துக்கொள் ளப்பட்டன.

அடிகள் காலத்தில் சௌத்திராந்திக மதமே தென் னுட்டில் வழங்கியிருத்தல் கூடும். அடிகட்கும் இலங் கைப் புத்தருக்கும் நிகழ்ந்த வாதத்தை நன்கறியப் போதிய நூல்கள் கிடைக்கவில்லை. சிவஞான சித்தி யாரிற் கூறிய சௌத்திராந்திக மத மறுதலையைத் தழு வியே கடவுண்மாமுனிவர் வாதின் வரலாற்றை இயம் பினர். புத்த சமயக் கதைகள் அசோகன் காலத்தே தொகுக்கப்பட்டன. புத்த சமயச் சரித்திரம் இலங்கைப் புத்த மடத்தில் உள்ள மகாவமிசம், தீபவமிசம் என்று இரண்டு நூல்களிற் காணப்படுகின்றது. அந்நூல்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்றருவன.

புராணங்களுள் திருமால் புத்தராகத் தோன்றித் திரிபுரத் தசுரர்கள்பாற் சென்று அவர்களுக்குப் புத்த

மதத்தைப் போதித்துச் சிவசிந்தனை யில்லாது செய்தனர் என்ற கதை காணப்படுகின்றது.

இக்கருத்துப் பற்றியே பரஞ்சோதிமா முனிவர் தமது திருவிளையாடலில்,

'மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்'

என்றனர்.

புத்தர்கள் யாவருக்கும் பொதுவான கொள்கை கணபங்க வாதம் என்னப்படும். கணமென்பது தாமரை இதழ்கள் எட்டினை ஒன்று சேர்த்து அவற்றை ஊசியினால் ஊடறுப்பதற்கு வேண்டிய கால அளவாகும். பங்கம் என்பதின் பொருள் சிதைவு. அறிவும், அறியப்படும் பொருளுங் கணந்தோறும் தோன்றி யழிகின்றன வென்ற கொள்கையே கணபங்க வாதம் எனப்படும். முற்கணத்தில் அழிவெய்திய அறிவின் வாசனை பிற்கணத்திற் றோன்றும் அறிவோடு தொடர்புறுதலின், அறிவு நீரோட்டம் போலச் செல்கின்றது என்ப. நீரோட்டம்போலுந் தொடர்ச்சி தாராசந்தானம் எனப்படும். விளக்கின் சுடர்போற் றொடர்வுற்றழிவது தீபசந்தானமென்றும், வாயுவைப்போலுள்ள தொடர்ச்சி வாயுசந்தானமென்றும், எறும்பின் கூட்டம் போன்ற தொடர்ச்சி பிபீலிகா சந்தானமென்றுங் கூறப்படும். இந்நால்வகையுள் ஒவ்வொன்றினை ஒவ்வொரு வகையார் தமது கொள்கையென்பர். மாத்தியமிகர் புறப்பொருளைச் சூனியமென்றும், யோகாசாரர் அதனைக் காட்சிப் பொருளன்று, கருதலளவையா லறியப் படுவதென்றுங் கூறுவர். சௌத்திராந்திகர் கொள்கை வருமாறு:—பொருள்கள் அகச்சமுதாயம், புறச்சமுதாய மென்னு மிருவகைப்படும். அவற்றுட் பின்னையது நிலவணு, நீரணு, தீயணு, வளியணு வென்னு நான்கின் தொகுதியே. முன்னையது சித்தத்திலெழும் ஐவகைக் கந்தங்களாம். கந்தமென்பது கூட்டம். ஐவகையாவன: உருவம், வேதனை, ஞானம், குறி,

மணம் என்பனவாம். சித்தத்திற் றோன்றும் வடிவப் பொருள்களனைத்தும் உருவக்கந்தமாம். அவ்வுருவக்கந்தத்தை யுணருமுணர்வு ஞானக்கந்தம். இவ்வுணர்வாற் றோன்றும் இன்ப துன்ப முதலியவை வேதனைக்கந்தம். பொருள்களை யறிந்துரைத்தற் கேதுவாய பெயர்கள், குறிக்கந்தமெனப்படும். அவற்றின் நினைவு மணக்கந்தமெனப்படும். ஐங்கந்தங்களின் தொகுப்பே அகச்சமுதாயமெனப்படும். அகச்சமுதாயத்தின் வாசனை கெடுதலே முத்தியென்றும், அகச்சமுதாய முற்றுமொழிதலே சிறந்த முத்தியென்றுங் கூறுவர்.

ஈண்டுக் குறித்த சௌத்திராந்திக மதக் கொள்கையே திருவாதவூரடிகளால் மறுக்கப்பட்டதென்று அவர் வரலாற்றினால் விளங்கும்.

திருவாசகத்திலே 'புத்தன் முதலாய புல்லறிவிற் பல் சமயம்' என்ற அடி காணப்படுகின்றது. இங்கே சமயம் என்ற சொல் சமயத்தாரைக் குறித்து நின்றது.

'புத்தன் புரந்தராதி யயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான்'

என்றவிடத்துப் 'புத்தன்' என்றசொல் யாரைக் குறிப்பதென்று ஆராயற்பாலது. அச்சொல் கௌதம புத்தரைக் குறிக்குமெனின், கௌதமபுத்தர் புரந்தரன் அயன் முதலியோர் போலச் சிவபெருமானை வழிபட்டனர் என்று கருத நேரும். அவர் அங்ஙனம் வழிபட்டதாகக் குறிப்பதற்கு அவர் வரலாறு கூறவில்லை. ஒருவேளை அவர் சிவபெருமானை அகத்தால் வழிபட்டிருக்கலாம். சிவநெறிக்கு எதிரிடையாக அவர் யாதுங் கூறவில்லை. சுவேதாசுவரம் முதலிய பழைய உபநிடதங்களிலே சிவ வழிபாடு கூறப்படுதலின் வடநாட்டிலும் புத்தர் காலத்திலே சிவநெறி பயின்றிருத்தல் கூடும். கௌதம புத்தரைச் சிவவழிபாட்டினராகக் கருதுவதினும் புத்தன் என்ற சொல்லிற்கு வேறு பொருள் கொள்ளுதலே பொருத்தமாமென்பர் நம்மவரிற் பலர். அச்சொல் புதியவனென்றும் பொருள்படும்.

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'

என்றபடி எப்பொருட்கும் (பழமை) ஆதியாயிருத்தலின் எவற்றிற்கும் பழமையானவனும், என்றும் வாடாத சீர்மை வாய்ந்தவனாதலின் எவற்றிற்கும் புதுமையனும் இறைவன் திகழ்கின்றான். ஆதலின் என்றும் புதியனு யிருக்கும் அவனது தனிப் பெருந்தன்மையை விளக்கு வார் அவனைப் புத்தனென்றார். 'உணர்ந்தார்க் குணர்வரி யோன்' என்றவாறே அவனை அறியலுற்றார்க்கும் முற்றி லும் அவனையறிதல் கூடாதாகலின், என்றைக்கும் அவர்கட்கும் அவன் புதுமையனேயாதல்பற்றி அடிகள் அவனைப் புத்தன் என்றார். புத்தனென்று தொடங்குஞ் செய்யுளின் முதலடியில் இறைவனைப் புத்தன் என்ற வாறே இரண்டாமடியிற் பித்தன் என்றும் மூன்றாமடியில் அத்தன் என்றும் மொழிந்தது காண்க.

புத்தகுருவின் கொள்கைகளை மறுத்த பின்பு புத்த குரு கேட்ட வினுக்களுக்குத் தக்க விடையளிக்கு முகத் தாற் சிவபெருமானது பேராற்றலையும் பேரருட் டிறமை யையும் இனிது விளக்கியருளினர். ஆல நிழலில் உலக முய்யும் பொருட்டு இறைவன் தவவேடங்காட்டி அற முரைத்தா னென்றது அருந்தவத்தாற் றகுதி வாய்ந்த உயிர்கட்கு இறைவன் (அறிவனாய்) ஞான குருவாய் வந்து மெய்யறிவுறுத்தும் முறைமை கூறியவாறும். இறைவன் உடலுயிரனைத்திலுங் கலந்து எல்லாவற்றையு மறிவித்தும் ஆட்டுவித்தும் ஐந்தொழிலியற்றுவதனையே திருநடமென்று தெரிவித்தார். திருநீற்றினை இறைவ னணிந்திருப்பது எல்லாவற்றையும் ஒடுக்கவல்லவனென் பதையும், ஒடுங்கிய காலத்துப் பேரன்பர்க்கருளும் திருவருட் பேரொளியொடு திகழ்வனென்பதையுங் குறித்தற் பொருட்டென்று அடிகள் குறித்தனர்; ஒடுக் கத்தினல் உயிர்கட்கு இளைப்பாறுதலும் பேரன்பர்க்கு வீடடைதலும் உளவாமாதலின்.

"நீற்றினை யணிந்ததுவெ னின்னிறைவ னென்றே
சாற்றினை யுயிர்க்கிடர் தணிக்கவென வெண்ணுய்"

என்றூர் புராணவாசாரியர்.

இறைவன் உமையம்மையோடு விளங்குதல் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்ப் பிறந்து போகந் துய்த்தற் பொருட்டு ஆதலின்,

"பாகமதி லுத்தமியை வைத்தல்பழு தென்றூய்
போகமுல குக்கருள் புரிந்தருள வென்றே
மாகமுகி லொத்தகுழன் மங்கையொ டிருந்தான்
யோகமுயிர் கட்குதவ யோகவுரு வானுன்"

என்றூர். பிற வினுக்களுக்கு விடை திருச்சாழலுட் காண்க.

தோல்வி யடைந்த புத்தகுருவும் அவனைச் சார்ந்தோரும் வெகுண்டு தமக்கு வேண்டியவாறு கூறுதல் நடுநிலைக்கு மாருமாதலாலும், வழக்கீட்டினுல் மெய்ம்மை யுணர்த்தியும் அன்னோர் உணர்ந்திலராகலின் அடிகள் அவர்கட்குக் காட்சியளவையான் மெய்ம்மை யுணர்த்தக் கருதினுராகலானும், அன்னோரை ஊமையாகப் பணித்தார் என்க.

அடிகள் நிறைமொழி மாந்தர்தந் தலைவராதலின் அவர் உரைத்தமொழி கருதிய பயனைப் பயந்துவிட்டது. அழிக்கவும் ஆக்கவும் வல்லாராதலின் ஊமையாயிருந்த ஈழ மன்னன் மகள் பேசுந்திறமை பெற்றதோடு, புத்தர்கள் வினுவுக்கு விடையளிக்கவும் ஆற்றலுடையவளானுள். அன்பர்கள் விரும்பிய வண்ணம் இறைவன் திருவருள் புரிவானுதலின் அடிகள் கருதிய வண்ணம் இவ்வருஞ் செயல்களைத் திருவருள் முன்னின்று முடித்ததென் றுணர்க. இக்காலத்தில் நிகழும் மெஸ்மெரிசம் (Mesmerism) முதலியவைகளால் உயிரின் ஆற்றலை விரிவு செய்தல் கூடுமாயின், அடிகளின் அருள்மொழியால் ஈழ மன்னுன் மகள் எல்லா மறிந்தமை இயல்பாயதொன்றே யெனத்தெளிக. பெரியாரது எச்செய்கையும் அருள் நலம் பயப்பதேயா மாதலின், அடிகளது அருஞ்செயல்

ஈழ மன்னனும் வாதுசெய்த புத்தரும் திருநீறணிந்து சைவத்துட் புகுந்துய்தற்குக் காரணமாயிற்று.

அடிகள் இலங்கைப் புத்தமன்னனை ஆட்கொண்ட காலந்தொட்டே இலங்கையிற் சிவநெறி நன்கு நிலைபெறுவதாயிற்று.

திருவாதவூரடிகள் திருவருட் பாடல்களின் தொகுதியாகிய திருவாசகத்தினையுந் திருக்கோவையாரையும் இறைவன் அந்தண வடிவங்கொண்டு எழுதி உலகுக்கு வெளியிட்டனனென்பதைச் சிலர் நம்பாதிருக்கலாம். இறைவன் அடியவர்க்கு எளிவந் தருள்செய்யுங் கருணையை உற்றுநோக்குமிடத்து அது நிகழாத தொன்றாகத் தெரியவில்லை. அடியவர்களுக்காக இறைவன் பொதிசோறு கொணர்ந்து கொடுத்தும், தூதுபோகியும், அனையபிற செயல்கள் நிகழ்த்தியும் அவர்களை உய்யக் கொண்டானெனில் திருவாசக ஏட்டினை அவன் எழுதியது அவன் பெருமைக்கு ஒரு குறைவாகாது. திருவாசகத்திற் பதிகங்க ளமைக்கப்பட்டிருந்த முறை, இறைவன் அவற்றை எழுதிய முறையோ வென்ற ஐயப்பாடு பலர்க்கு நிகழ்கின்றது. பாடிய முறையில் அவைகள் அமைக்கப்படவில்லை என்பது தெளிவு.

நூலெழுதிய கதை எவ்வாறாயினும், அடிகள் தில்லையில் பொன்னம்பலவரோடு இரண்டறக் கலந்தருளிரென்பது அவருடைய திருவாக்கினாலேயே அறியக் கிடக்கின்றது. திருப்பெருந்துறையில் இறைவன் அருட்பெருஞ் சோதியாய்த் தோன்றிப் பிற அடியார்களைத் தம்மோடு சேர்த்துக்கொண்ட விடத்து அடிகளைத் தில்லைக்கு வரும்படி பணித்தருளினர். அது

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்"

என்றமையால் தெள்ளிதிற் புலனாதல் காண்க.

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்'

என்றபடி அடிகளது திருவருட்பாடலின் பொருளுணர் வார்க்குப் பயன் பல்லோரு மேத்திப்பணியச் சிவபுரத் துறைதலாமெனின், அத்தகைய பாடல்களை மொழிந் தமைக்கு அடிகள் சிவபெருமானோடு இரண்டறக் கலத்த லாகிய பெருமபயனெய்துதற்குரியா ரென்பது திண்ணம். தமது அமுதச் செழும்பாடல்களின் பொருள் சிவானு பவத்தாலேயே முற்று முணர்தற் குரியதாகலானும் அவ் வனுபவத்திற்கு உள்ளீடா யிருப்பவன் இறைவனாத லானும் கூத்தப் பெருமானையே அவற்றின் பொரு ளென்று அடிகள் சுட்டியருளின ரென்க. அங்ஙனஞ் சுட்டியவுடன் மூண்ட பேருணர்ச்சியின் பேராற்றல் அடி களது ஆருயிரை இறைவனோடு இரண்டறக் கலப்பித்தது. அடிகள் அருவச் சித்திபெற்ற திருமேனியுடையவராத லின் அவர் திருமேனியிற் கலந்த ஐம்பூதமும் அருவாய்ப் பிரிவுற்று ஐம்பூதத் தொகுதியிற் கலந்தன. 'எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை யெய்துவதாகாதே' என்றது காண்க. திருமேனி உலகத்தில் நிலவாது அருவாய்ப் பூதத்தொடு கலக்கும் பேறுற்றமையாலே, அடிகள் முத்தி பெற்ற முறையை ஒப்பற்றதென்ப. சோதியிற் கலந்து பரமுத்தி எய்தினோரை அருவுருவச்சித்தி பெற்றோ ரென்ப. உருவச்சித்தி பெற்றோர் கூட்டோடு கைலை செல் வார்.

திருவுருவம் சிவசத்தி வடிவாகிய பேரொளியிற் கலக்கத் தாம் இறைவனோடு கலக்கும் பெருமுத்தியைத் திருஞான சம்பந்தர் பெற்றனர். அப்பமூர்த்திகளும் நண்ணரிய சிவானந்த ஞான வடிவாய் அண்ணலார் சேவடிக்கீ ழமர்ந்தனர். அவரை அருவச்சித்தி யுடையா ரென்ப. இம்மூவரும் வெவ்வேறு முறையாகப் பரசைவ சித்தாந்தக் கொள்கைப்படி ஞானத்தின் ஞானத்துப் பயின்றவரென் றுணர்க.

சுந்தரமூர்த்தி ஊனுடல் வேறு செய்யப் பெற்றுச் சிவபோக முதிர்ச்சியுடையராய்த் திருக்கயிலை சென்றமையின் ஞானத்தின் ஞானத்தைப் பயின்று உரிய காலத்திற் பரமுத்தி யெய்துதற்குரியராய்ச் சிவபுரத்தமர்ந்தனர். ஆதலின் நால்வரும் சைவ சித்தாந்தத் திருநெறிப் பெருந்தலைவரென்பது ஒரு தலையாய முடிவாகும்.

திருவாசக ஆராய்ச்சி

திருவாதவூரடிகள் வரலாற்றிற்கேற்பத் திருவாசகத் திருப்பதிகங்களை ஒருவாறு வரிசைப் படுத்தின் அஃது இப்பொழுதுள்ள பதிகவரிசையின் வேறாகும். அச் சோப்பத்து, சென்னிப்பத்து, அதிசயப்பத்து, அற்புதப் பத்து, உயிருண்ணிப்பத்து என்பன திருப்பெருந்துறையில் அடிகள் மதுரைக்குப் போவதற்கு முன் அருளிச் செய்யப்பட்டன என்ப. அவற்றுள் நரிபரியாக்கிய செய்தியுந் தம்மோடிருந்த அடியார்கள் தம்மைப் பிரிந்தமையுங் கூறப்படவில்லை. கோயிற்றிருப்பதிகம் என்னுந் திருவாசகம் திருப்பெருந்துறையிற் பாடப்பட்டதாய்த் தெரிகிறது. அதன்கண்ணும் திருப்பள்ளியெழுச்சியின் கண்ணும் 'பண்டாய நான்மறை'யின்கண்ணும் குறிப்பாகவே இச்செய்திகள் சுட்டப்பட்டனவாதலால் அவையுந் திருப்பெருந்துறையின்கண்ணே தொடக்கத்திலேயே பாடப்பட்டனவோ என்னும் ஐயம் நிகழ்கின்றது.

எண்ணப்பதிகம், வாழாப்பத்து, அடைக்கலப்பத்து என்பவைகள் அடிகள் பாண்டியன்பொருட்டு மதுரைக்கு மீண்டு அரசனலே துன்புறுத்தப்பட்டகாலை பாடப் பட்டன என்ப. திருப்பாண்டிப்பதிகம் மதுரையில் திருவிளையாடல்கள் நிகழ்ந்த பின்னர்ப் பாடப்பட்டதென்பது தெளிவு. திருச்சதகம், திருவார்த்தை, திருவம்மானை, திருத்தசாங்கம், குயிற்பத்து முதலியன மதுரையினின்று

திருப்பெருந்துறைக்கு மீண்டபின் இயற்றியருளப் பட்டவை. தம்மோடிருந்த அடியார் இறைவனோடு கலந்தபின் பாடப்பெற்ற பதிகங்கள் செத்திலாப்பத்து, ஆசைப்பத்து, புணர்ச்சிப்பத்து, பிரார்த்தனைப்பத்து, திருவெண்பா, குழைத்தபத்து என்பன. ஆனந்தமாலை என்பது திருப்பெருந்துறையிலாவது தில்லையிலாவது இயற்றப்பெற்றிருக்கலாம். அதன் இறுதிப் பாட்டுக்கள் 'தேவே தில்லை நடமாடி' எனவும், 'பிச்சதேற்றும் பெருந்துறையாய்' எனவும் வந்தமை காண்க. நீத்தல் விண்ணப்பமும், திருப்பொன்னூசலும், அன்னைப்பத்தும் உத்தரகோசமங்கையில் அருளிச் செய்யப்பட்டன. திருப்புலம்பலிலுள்ள மூன்று பாட்டுந் திருவாரூர், திருப்பெருந்துறை, திருக்குற்றாலம் என்னும் மூன்று திருப்பதிகளுக்கு முறையே உரியனவாகத் தெரிகின்றன. திருவேசறவு திருவிடைமருதூரில் அருளிச்செய்யப்பட்டது. 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' என்றபடி திருக்கழுமலத்தில் இறைவனது திருக்காட்சியைப் பெற்று அடிகள் அவ்விடத்திற் பிடித்தபத்தைப் பாடியிருத்தல் கூடும். திருவெம்பாவை திருவண்ணமலையில் அருளிச் செய்யப்பட்டது போலும். அதற்குப் பின்னேயே திருக்கழுக்குன்றப்பதிகம் அமைக்கப்படல் வேண்டும். தில்லையிலருளிச் செய்யப்பட்ட பதிகங்களாவன: கண்டபத்து, கோயில்மூத்ததிருப்பதிகம், குலாப்பத்து, அச்சப்பத்து, திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி, திருத்தோணோக்கம், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம் என்பனவாகும். திருப்படையாட்சி, திருப்படை எழுச்சி, யாத்திரைப்பத்து என்னும் மூன்றும் இறுதிக்காலத்தில் அருளிச்செய்யப்பட்டிருத்தல்கூடும்.

சிவபுராணம் திருப்பெருந்துறையி லருளிச் செய்யப்பட்டது. கீர்த்தித்திருஅகவல் தில்லையி லருளிச் செய்யப்பட்டது. திருவண்டப்பகுதியும் போற்றித் திருவகவலும் தில்லையிலாவது திருப்பெருந்துறையிலாவது அருளிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

திருவாசகத்தின்கண் இயற்கைப் பொருள்களின் அழகைப்பற்றிப் பேசும் பாட்டுக்கள் மிகச் சிலவே. இறைவ னியல்பையும் உயிரினியல்பையும் பாசத்தினியல் பையும் இனிதுணர்த்தும் புகழ்ப்பா மாலைகளே செறிந் துள்ளன. அடிகளது சிவானுபவ நிலையை உணர்த்தும் பகுதிகள் பல. அவை யாவர்க்கும் உருக்கத்தைத் தருவன.

இறைவன் ஒப்பற்ற ஒரே முதல்வனென்பார் 'ஒருவ னென்னு மொருவன் காண்க' 'உருமூன்றுமாகி உணர் வரிதாம் ஒருவனுமே' 'சோதியாய்த் தோன்றும் உரு வமே அருவாம் ஒருவனே' என்றார். ஒருவன் என்று இறைவனை வழங்கும் மரபு பெரியபுராணத்திலும் பிற நூலிலுங் காணப்படும். 'எவ்வுயிர்க்குஞ் சான்றாம் ஒருவனை', 'உணர்வினால் உணரவொண்ணா ஒருவரை' என்ற ஆசிரியர் சேக்கிழார் திருவாக்குங் காண்க.

முனைவன் என்ற சொல்லாற் கடவுளை உணர்த்துதல் தொல்காப்பியத்திலுந் திருவாசகத்திலுங் காணப்படு கின்றது. 'முனைவன்பாத நன்மலர் பிரிந்திருந்தும்' என்றதுகாண்க. இறைவனது தனித்தன்மையை 'ஒரு நாமம் ஒன்றுமிலான்' 'ஏதவனூர் ஏதவன்பேர் யாருற் றார் யாரயலார் ஏதவனைப் பாடும் பரிசு' 'குறியொன்று மில்லாத கூத்தன்' 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே' 'எப்பாலவர்க்கும் அப்பாலாம் என்னாரமுது' 'நாடற்கரிய நலத்தை' என்றினைய அருண்மொழிகளா லடிகள் குறித்தருளினர்.

கடவுள் உயிர்கட்குத் தலைவனென்பதை 'ஆறு வறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்குங் கோனாகி நின்றவா' என்றவிடத்து விளக்கி யருளினர். உயிர்களின் சுட்டறி வினால் அறியப்படாதவனென்பார் 'ஓசையால் உணர் வார்க்கு உணர்வரியவன்' 'நினைப்ப தாக சிந்தை செல் லும் எல்லையேய வாக்கினாற், றினைத்தனையு மாவ தில்லை சொல்லலாவ கேட்பவே' 'நின்னை ஐம்புலன்கள் காண்

கிலா' 'நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க' முதலிய திருவாசகப் பகுதிகளால் உய்த்துணர்ந்து கொள்க. அவன் உலகத்தைப்படைத்துக் காத்து அழிக்கும் மூவராலும் பிறதேவராலும் அறியப்படாதானென்பார் 'மூவர்மற் றறிகிலர் யாவர்மற் றறிவார்,'

'பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்முகனும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ'

என்றுரைத்தருளினர்.

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்"

"முந்து நடுவு முடிவு மாகிய மூவாறியாச்
சிந்துரச் சேவடி யானே"

என்றதுங் காண்க.

இறைவனே எல்லாவற்றிற்கும் ஆதியும் நடுவும் அந்தமுமாம் ஐந்தொழிலியற்றுவானென்பதைச் 'சொல்லுதற்கரிய ஆதியே நடுவே அந்தமே பந்த மறுக்கு மானந்தமாகடலே தீதிலா நன்மைத் திருவருட்குன்றே' என்பது போன்ற திருவாக்குகளாற் பெறவைத்தனர்.

'முந்திய முதனடு விறுதியு மானாய்' என்றமையால் இறைவன் முதல் நடு விறுதி இல்லாதவனென்று அறிவுறுத்தினர். 'தன் பெருமை தானறியா' 'தன்மை பிறராலறியாத' என்றதுங் காண்க. இறைவன் பிற சமயக் கடவுளர்க்கு மிகவும் வேறாய அளவில் பெருமையுடையவனென்று கூறுவார்,

'அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன்'

என்றார்.

இறைவன் எப்பொருளினும் எவ்வுயிரினும் இரண்டறக் கலந்து நின்றும் பொருட்டன்மையால் வேறுவானென்பார்,

'எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை
யல்லையாய் நிற்கும் எத்தனே'

'நீயலாற் பிறிதுமற்றில்லை'

'ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை'

'விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க'

'நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க'

'மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க'

'இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே'

என்றார்.

கடவுள் மெய்ப்பொருள் என்பார்,

'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா'

என்ற விடத்து விளக்கினமை காண்க.

'மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறும்'

என்றது மது.

மெய்யர்க்கு மெய்யாயும் பொய்யர்க்குப் பொய்யாயும் இறைவர் இருக்கின்றா ரென்பதை

'உண்மையுமா யின்மையுமாய்'

'பொய்யர்தம் பொய்யனே மெய்யர் மெய்யை'

என்பவற்றாற் பெறவைத்தார்.

இறைவன் அன்பர்கட் கருள்செய்யும் பொருட்டுத் தமது திருவருட் சத்தியினாலே பல்வேறுருவு கொள்வானென்பார்,

'ஏறுடை ஈசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளி
நூறுநூ றாயிர மியல்பின தாகி'

'எவ்வுருவுந் தன்னுருவாம்'

'பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
அருவா யுருவமு மாயினன்'

'போரேறே அடர்கரியே கயிலைப் பரம்பரனே'

என்றார்.

'நிறங்களோ ரைந்துடையாய்'

என்றதற் கேற்பச்

'செந்தழல் புரை திரு மேனி'

'அரத்த மேனியாய்'

'பச்சையனே செய்ய மேனியனே'

'புண்சுமந்த பொன்மேனி'

'தாமரை மேனியப்பா'

'திருநீற்றை உத்தூளித்து
ஒளியொளிரும் வெண்மையனே'

என்றார்.

இறைவன் அன்பு வடிவின னென்றும் அன்பர்க்கே அருள்புரிபவனென்றும் தெரிவிப்பார்,

'பத்திவலையிற் படுவோன் காண்க'

'ஓவாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானே'

'தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினு மன்பபோற்றி'

என் றியம்பியருளினார்.

மந்திரங்களுள் ஓங்காரத்தையும் ஐந்தெழுத்தையுமே விதந்தோதினார்.

'ஓங்காரத் துட்பொருளே'

'உள்ளத்து ளோங்காரமாய் நின்ற'

'நமச்சிவாய வாழ்க'

'சிவாயநம வெனப் பெற்றேன்'

'நமச்சிவாயவென் றுன்னடி பணியாப் பேயனுகிலும்'

'நாயேனேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்'

என்பவை காண்க.

சிவபெருமான் பசுபாசத் தொடக்கற்ற பேரின்ப வடிவினன் என்பார்,

'பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவில்லா மாளாவின்ப மாகடலே'

என்றார். ஏழுகட லாதலின் ஏழு அடைமொழி கொடுத்தார். 'குணங்கடா மில்லாவின்பமே' என்றதுமது. கடவுளை 'ஆதிப் பிரம'மென்றும் 'தாட்செய்ய தாமரைச் சைவ' னென்றும் அடிகள் செப்பினர்.

அவர் தமது காலத்துள்ள மூவேந்தர் பேரையும் இறைவனுக்கே அமைத்துப் பாடினமை உற்று நோக்கத் தக்கது.

'தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங்கன் வரக் கூவாய்'

என்றது காண்க.

சிவபெருமான் தனது திருவருட் சத்திக்குப் பல் வேறு முறையில் இனமாக நூல்களாற் கூறப்படுவா னென்பார்,

'எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்'

என்றனர்.

சிவபெருமான் தூய பேரின்ப வடிவினனாய்த் தமக்கு அத்தகைய இன்பத்தை யிடையறாது நல்குகின்றா னென்பார்,

'தேனைப் பாலைக் கன்னலின் றெளிவை'

'தேனே யமுதே கரும்பின் றெளிவே'

'தேனையும் பாலையுங் கன்னலையு மமுதத்தையுமொத்
தூனையு மென்பினையு முருக்காநின்ற வொண்மையனே

'ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து'
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்'

'ஞானக் கரும்பின் றெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை'

'பாலு மமுதமுந் தேனுடனாம் பராபரமாய்'

'நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை'

என்றுள்ள கனிவு மொழிகள் புகன்றனர். இறைவன் தம்மைப் பேரின்ப நுகர்ச்சிக்குத் தகுதியாக்கி யருளினதைக் குறிப்பான்,

'கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை'

'கல்லை மென்கனி யாக்கு மிச்சை கொண்(டு)
என்னை நின்கழற் கன்ப னாக்கினாய்'

'காயத்துள் அமு தூறவூறநீ கண்டுகொள்ளென்று காட்டி
'அவையவம் கோற்றேன் கொண்டு செய்தனன்' [ய'

'அளிதரு மாக்கை செய்தோன் போற்றி'

'ஆற்றா வின்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்'

'இன்பே அருளி உயிருண்கின்ற எம்மானே''

என்றியம்பினர். தம்மை இழித்துக் கூறும் பொருட்டு அடிகள் நாய் என்ற சொல்லைப் பல விடங்களில் வழங்கி யிருக்கின்றனர். 'நாயிற் கடையா நாயேனை' 'செய்வ தறியாச் சிறு நாயேன்' 'ஊர் நாயிற் கடையானேன்' 'நாணமில்லா நாயினேன்' முதலிய பல சொற்றொடர் களில் அச்சொல் வந்தமை காண்க. திருவருள் பெறு வதற்கு முன் உலக இன்பத்தில் தான் உழன்றதைப் பல விடங்களிற் குறித்துள்ளார்.

'செழுகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை'

'வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத்துருகும் பாழ்நெஞ்சே'

'மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன்.'

தாம் பல பிறவி எடுத்து உய்ந்ததை,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்றார்.

தாம் வீடு நாடி மெய்ப்பரம் பொருளைத் தேடி யலைந் ததைப் பின்வரும் அடிகளிற் கூறினமை காண்க.

'என்னை யப்பா அஞ்சலென் பவரின்றி நின்றெய்த் தலைந்தேன்'
'கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே'
'உன்னை யோலமிட் டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்.'

திருவருள் பெற்றபின் எடுத்த உடலைவிட்டு இறைவ னோடு இரண்டறக் கலக்க வேண்டுமென்று அடிகள் பெரு விழை வுற்றதைப் பின்வரும் அடிகளா லறிக.

'உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளுபோற்றி'
'வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி'
'ஊனையான் இருந்தோம்புகின்றேன் உயிர் ஓயாதே'
'உன்னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே'
'வீடுதந் தருளு போற்றி'

அவர் அழுதடி யடைந்த அன்ப ரென்பது,

'வினையேன் அழுதா லுன்னைப் பெறலாமே'
'அழுகே னின்பா லன்பாய்'
'மயல்கொண் டழுகேனே'
'அழுமதுவே யன்றி மற்றென் செய்கேன்'

முதலிய பல அடிகளிற் காண்க. சிவபெருமானைத் தலைவ னாகவும் தம்மைத் தலைவியாகவுஞ் சில விடங்களில் திருவாசகத்துள்ளுங் குறித்துள்ளார். ஓர் உதாரணம் வருமாறு:

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய்."

தமது உள்ளத்தினையும் உறுப்பினையும் இறைவன் தனக்கே பயன்படுத்திக்கொண்டா னென்பார்,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே"

என்றார்.

'என்னுடைய அன்பே' என்றபடி இறைவ னிடத்துத் தனக்கு உருக்க மிருப்பதை ஒப்புக்கொண்ட அடிகள், தம்மிடத்து இறைவன் பேருபகாரத்திற்கு ஏற்ற அளவு அன்பும் நன்முயற்சியு மில்லை என்பார்,

'நெகுமன் பில்லை நின்னைக் காண'

'இனையன் பாவனை இரும்புகல் மனஞ்செவி
இன்னதென் றறியேனே'

'வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது'

"உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே"

'ஆடுகின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை'

'இரும்பின் பாவை'

"யனையநான் பாடேனின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்"

'கிடந் துருகேன்'

என்றமை காண்க.

இறைவன் அருள் புரிந்தபின் அவனது பிரிவாற்றாமையால் தாம் உயிர்விடவில்லை என்று சில விடங்களில் அடிகள் வருந்துவது மிகவும் உருக்கத்தை விளைப்பதாகும்.

'முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் தலைகீறேன்'

'தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே'

முதலியன காண்க. இடையறு அன்பொன்றினையே இறைவன்பால் அடிகள் வேண்டினரென்பது,

'இடையறா அன்புனக்கென் னூடகத்தே
நின்றுருகத் தந்தருள்'

'ஐயா எனஅன் வாயாலரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன்'

"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்பதாற் றெளியப்படும்.

பல பிறவி எடுத்தாலும் இறைவனை அன்பினாற் றொழும் பேறு வேண்டு மென்பார்,

'வேண்டுநின் கழற்க ணன்பு
....
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்னநின் வணங்கவே'

என்றார்.

'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்
கென்கடவேன்'

என்றது மது.

திருவருளாலே நரகம் அடைந்தாலும் தானதனை இகழாமையை,

'நரகம் புகினும் எள்ளேன் திருவருளா
லிருக்கப் பெறின்'

என்ற விடத்துத் தெரிவித்தார். 'யாமார்க்குங் குடியல்லோம்' 'குற்றாலத்துக் கூத்தன்' முதலிய சில சொற்றொடர்கள் பிற்காலத்தே அப்பர் சுவாமிகள் தேவாரத்தும் வந்துள்ளன. மும்மலங்களைப் பற்றிய குறிப்புத் திருவாசகத்திற் பலவிடங்களில் வந்துள்ளன.

"மூலமா மும்மல மறுக்கும்"

"மும்மை மல மறுவித்து"

"மும்மலங்கள் பாயும்"

"மும்மலப்பழ வல்வினைக்கு ளழுந்தவும்"

என்று வருவன காண்க. மலங்கள் ஐந்தென்பதும் ஓரிடத்துக் கூறப்பட்டது.

" மலங்கள் ஐந்தாற் சுழல்வன்
தயிரிற்பொரு மத்தெனவே"

பசுபாச மென்ற சொற்றொடரை,

'கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம்'

'பல்லோருங் காண என்றன் பசுபாச மறுத்தானே'

என்ற இடங்களிற் காண்க. 'இருவினை மாமரம்' என்றது போன்ற சொற்றொடர்களாற் கன்மமலம் குறிக்கப் பட்டது.

'மாய வாழ்க்கை வல்வினைச் சிறுகுடில்
மயக்காங் தொடக்கு'

'மையலா யிந்த வாழ்வெனும் ஆழி'

'பாச மானவை பற்றறுத்து'

முதலிய சொற்றொடர்களால் மாயா மலங் குறிக்கப் பட்டது. ஆணவ மலமென்பது இருளென்ற சொல்லினு லேயே பெரிதும் விளக்கப்பட்டது.

'நெஞ்சத் திருளகல வாள் வீசி'
'என்னுடை யிருளை ஏறத் துறந்தும்'
'மறைந்திட மூடிய மாய விருளை'
'இருள் திணிந் திட்டதோர்'

என்றும் வருவன காண்க.

தேவாரத்திலும் திருவாசகத்திலும் முப்பத்தாறு தத்துவம் விதந்தோதப்படவில்லை. அத்துவசுத்தி என் பது பின் வருஞ்செய்யுளிற் கூறப்பட்டது.

'என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்க ளேய்மை செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.'

கண்ணப்பரையும் சண்டேசுரரையும் பற்றி அடிகள் திருத் தோணோக்கம் என்பதில் விதந்தோதினர்.

" பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணேக்க மாடாமோ."

" தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம்."

நாராயணன் சிவபெருமானுக்குப் பூசனை புரிந்து சக்கரம் பெற்றதையும் இதன்கண் கூறினர்.

" பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடர்ந்து) அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவா "

என்றது காண்க. ஒருவனை அவன் செய்த குற்றத்திற்காக ஒறுத்தல் அவன் அக்குற்றத்தின் நீங்கித் திருத்தமடைதற் பொருட்டே யென்பதை,

'தக்கனையும் எச்சனையுந் தூய்மைகள் செய்தவா'

என்றவிடத்து விளக்கிப் போந்தனர். சித்தர்கள் யோகிகள் ஞானிகள் முதலியவர்களுக்கு அவரவர் கடமைகளை அடிகள் வற்புறுத்துவதால், அவர் ஞான நிலையில் நின்றாரென்பது தெளியப்படும்.

" தொண்டர்கா டூசி செல்லீர் பத்தர்காள் சூழப்போகீ
ரொண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்க
டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்க
ளண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே"

" நிற்பார் நிற்கநில்லாஉலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே......
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே "

என்றது காண்க.

" சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனனுடையா யடியேனுன் னடைக்கலமே"

என்ற விடத்து வாசனு மலத்தொடர்பு குறிக்கப்பட்ட தென்ப.

'உன் னருளா
ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக் கொள்ளாய்'

என்றது மது.

'சீவோபாதி யொழித' லென்பதில் கடவுளோடு இரண்டறக் கலந்தபோதுள்ள சிவப்பெரு வாழ்வின் அமைவு நிலை தெள்ளிதின் விளக்கப்பட்டது. அதனுள், 'எண்ணிலியாகிய சித்துகள் வந்தெனை யெய்துவதாகாதே' என்றமையால் அடிகள் அளவற்ற அற்புதமியற்றும் ஆற்ற லுடையவரென்பது உய்த்துணரற்பாற்று.

பாநயஞ் சிறந்திலங்குமாறு இறைவன் திருமேனி வடிவினை அழகாகப் புனைந்துரைக்கும் அடிகளின் பேராற் றல் திருவாசகப் பகுதிகள் சிலவற்றில் தெள்ளிதின் விளங்குகின்றது. சிவனார் திருமுடியிற் கங்கை நிலையுற் றிருப்ப மதியும் அவண் தங்கியிருப்பது, கங்கை வெள்ளம் பெருகிய சிறு குளத்துள் மலை வாழ்வார் வழங்கும் சிறு தோணி கிடப்பது போல்வதென்பார்,

"கங்கை பொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே"

என்றார். பரமர் திருமுடியின்கணுள்ள வெண்டலை மாலைக் குகையிற் பதுங்கிய பாம்பு தன்னை விழுங்கி விடுமென் றஞ்சி மதி கங்கையுள் ஒளித்ததாக அடிகள் பிறிதோரிடத்திற் கூறியருளினர்.

"வெண்டலை முழைபிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே."

ஒரு குளத்தில் குவளைமலர் மலர்ந்திருப்பது உமையம்மையின் திருமேனி போலவும், செந்தாமரை மலர்ந்திருப்பது இறைவன் திருமேனி போலவும், அங்குள்ள அன்னக் கூட்டம் இறைவன் திருமேனியின் வெண்டலை மாலை போலவும், நீர்ப் பாம்புகள் இறைவன் திருமேனியில் வளைந்து கிடக்கும் அரவம்போலவும் இருத்தலானும், மாசு கழுவுதற்பொருட்டுக் குளத்திற்கு மக்கள் வருவது போல மும்மலங்களையுங் களைதற் பொருட்டு அம்மையப்பர்பால் உயிர்கள் சேருதலானுந், திருக்குளமானது பிராட்டியையும் பெருமானையும் ஒத்திருந்ததென்று திருவெம்பாவையிற் புனையப்பட்டது.

" பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடு "

என்றது காண்க.

'முகில்கள் நீருண்டு கறுத்து மின்னி இடித்து மழைபொழிவதை உமையம்மையின் திருமேனிபோல விளங்கி, அவள் இடைபோல மின்னி, அவள்தன் திருவடிச் சிலம்பு போல ஒலித்துத், திருப்புருவம்போல வில்லெறிந்து, சிவனன்பர்க்குந் திருவருட் பதிவுடையார்க்கும் அம்மை வழங்கும் இன்னருள்போல மழைபொழிவன' என்றது மிகவும் உவமைநயஞ் செறிந்தது.

" முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்."

சிவபெருமானது மாதொரு பாகத் திருவடிவத்தைத் திருக்கோத்தும்பியில் ஓர் அழகிய செய்யுளாற் றெரிக்கின்றார்.

"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."

மாணிக்க வாசகப் பெருமானது திருச்சிற்றம்பலக் கோவையார், இப்பொழுதுள்ள கோவை நூல்களி லெல்லா முற்பட்டது. ஒத்த நலனு மன்பு மமைந்த தலைவனுந் தலைவியும் நிகழ்த்துங் களவு கற்பென்னு மொழுக்கங்கள், இருபத்தைந்து கிளவிக்கொத்தென்னும் அதிகாரங்களுட் கூறப்பட்டன. ஒவ்வொரு அதிகாரமும் பல துறைகளாகவும் வகுக்கப்பட்டு ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கட்டளைக்கலித்துறைச் செய்யு ளமைக்கப்பட்டிருப்பதால், இந்நூல், நானூறு செய்யுட்க ளடங்கிய சிறு காப்பியமாகும்.

திருக்கோவையாரிற் பல இடங்களில், இயற்கைப் பொருள் வனப்பு புனைந்துரைக்கப் பட்டது.

திருவாசகத்துள் முகில்வனப் பொன்றுமே திருவண்டப் பகுதியுள் விரிக்கப்பட்டது. திருக்கோவையார் முதற்றிருப் பாட்டிலேயே தலைவியின் மேனி கொடி போன்ற நறுமண மிக்க மலர்மாலைக்கும் அவளுறுப்புக்கள் பலவும் பலவகை மலர்களுக்கும் உவமிக்கப்பட்டமை காண்க. தாமரை முகத்திற்கும் இதழிற்கும், குவளை கண்ணிற்கும், குமிழ் மூக்கிற்கும், கோங்கரும்பு நகிற் காம்பிற்கும், காந்தள் கைக்கும், உவமையா மாதலின் அடிகள்,

"திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்
[டோங்குதெய்வ
மருவளர் மாலை"

என்றார்.

இம்மலர்கள் முறையே மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி யென்னும் ஐந்திணைக்குரியனவாதலின் ஐந்திணை யின்பமுங் குறிப்பாலுணர்த்தப்பட்டன. தலைவியின் நடைக்கு அன்ன நடையும் பிடி நடையும் (உச) சாயலுக்கு மயிலையும், பாவையையும் (கக) நுதலுக்குப் பிளவு மதியையும் (கO) சுரிகுழலுக்குப் புயலையும் (ரு) கண்ணிற்கு மான்விழியையும் (கஉ, உக) கண்ணின் துன்புறுத்து மியல்பிற்கும் இணங்கி யின்புறுத்து மியல்பிற்கும் பிணியையும் மருந்தினையும் (ரு) விடத்தையும் (ரு) அயிலையும் கணையினையும், கண்ணின் ஒளிக்கு வாளினையும் (கO), பிறழ்ச்சிக்குக் கயலினையும் கெண்டையினையும் (சு) கண்ணின் வடிவிற்கு மாவிடுவினையும், புருவத்திற்கு வான வில்லையும் (கசு), செவ்வாய்க்குக் கொவ்வைக் கனியையும் (க) பவளத்தையும் (ருஉ) ஆம்பற்பூவையும், பல்லிற்கு வெண் முத்தத்தையும் (கசு) முகத்திற்குத் திங்களையும் (கசு), பணிமொழிக்குக் கிள்ளை மொழியையும், இனிமைக்குக் குயிலினையும் (ருO) தோளிற்கு மூங்கிலையும் (ருகO) மின்னிடைக்குத் துடியினையும் (உக) மார்பிற்கு இணைச் செப்பினையும் (ரு) அல்குலுக்கு அரவத்தையும் ஒப்பிட்டமை காண்க. பிற்கால நூல்களிற் காணப்படும் இவ்வுவமைகளிற் பல முதன்முதற் றிருக்கோவையாரிலே தான் வந்துள்ளன.

'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கு' (எக)

'கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கு'

என்ற விடங்களில், இயற்கை நட்பங்கள் குறிக்கப் பட்டமை காண்க.

'வைகொண்டவூசி கொற்சேரியில் விற்று'

'கொடுங்குன்றி னீள்குடுமி'

'மேற்றேன் விரும்பு முடவனைப் போல மெலியு நெஞ்சே'

என்பவை இந்நூல்களுள் வந்த பழமொழிக்கு உதாரணங்களாவன.

'எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களப பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகமேய்க்கும்'

என்ற விடத்தில், அண்மைத்தாய் வெள்ளொளி வீச்சினல் கருப்பு வெளுப்பாய்த் தெரியுஞ் சிறப்புக் கூறப்பட்டது காண்க. வேங்கை மலர்கள் உதிர்ந்து பரவிக்கிடக்கின்ற பாறையைப் புலியென்று யானை அஞ்சியொளித்தல் நகைச் சுவையொடு கலந்த இயற்கையினை யுணர்த்தும்.

"நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கை யெனநனி யஞ்சும்"

என்றது காண்க. வேங்கையென்ற சொல் இரு வேறு பொருளில் வந்தது நோக்கத் தக்கது. தேன் நிறைந்த பலாச் சுளையைக் கடுவன் மந்தியின் வாயிற் கொடுத் தோம்புதல் காதற்சுவை மிக்க இயற்கை நயமுணர்த்தும்.

"பந்தியின்வாய்ப்பல வின்சுளை பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்பும்." (கூகூ)

மரங்களினின்றுங் கனி யுதிர்வதை நயம்பெற இரண்டடிகளில் விளக்கினர்.

"தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை."

இது, மிகவுயர்ந்த தென்னையினின்று விழுந் தேங்காய், கமுகின் பாக்குக் குலையைத் தட்டிப், பின்னர் அதன் கீழுள்ள வாழைக் குலைகளை உதிர்த்துக் கீழே விழுந்ததைக் குறித்தவாறும். தலைவன் தலைவி யொருமை நேர்த லருமைக்கு உவமை கூறுவார்,

'வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
றுளைவழி நேர்கழி கோத்தென'

என்றார். கோங்கு, வேங்கை, பாதிரி என்பவற்றின் மலர்களைப் பெண்டிர் குழலிற் சூடிக் கொள்வது அக் காலத்துக் குறிஞ்சிநில மக்கள் வழக்கமென்பது,

"குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு
கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்" (எஅ).

என்றமையாற் புலனுகின்றது. ஊழிப் பெரு வெள்ளத்தை ஓர் அழகிய முறையிற் சுருங்கிய வளவில் அடிகள் குறித்தனர்.

'விண்ணை மடங்க விரிநீர் பரந்துவெற் புக்கரப்ப
மண்ணை மடங்க வருமொரு காலத்து மன்னிநிற்கும்.'

அண்ணல், தலைவியின் முகமலர்ச்சியைக் குறிப்பார், திருக்குளத்துள் குவளை பூத்தன வென்றனர்.

"முகமடுவிற்
பைந்தாட் குவளைகள் பூத்திருள்சூழ்ந்து பயின்றனவே" (சகக)

என்றது காண்க.

கண்ணின் விளக்கமே அகமலர்ச்சியை யுணர்த்துமென்று குறித்தவாறும். மல்லிகையை வெண்சங்காகவும் வண்டை ஊதுவோனுகவும் ஓரிடத்திற் குறித்தார்.

'மல்லிகைப் போதின் வெண்சங்கம் வண்டூத' (கூசு)

என்றார். குற்றாலத்தைக் குறித்தபோது ஆங்கு வீற்றிருந்தருளும் உமையம்மையின் திருநாமத்தை அடிகள் நவின்றருளினர்.

'குழல்வாய் மொழிமங்கை பங்கன் குற்றாலத்து'

என்றார்.

சில் திருப்பதிகள் திருக்கோவையாரின்கன் ஆங்காங்குக் குறிக்கப்பட்டன. கூடல்வாய் (உ௦) பெருந்

துறை (க0ச) ஈங்கோய்மலை (உகஙு) திருப்பனையூர் (கஙுஎ) பொதியின்மலை (கச0, ஙுகூச) மூவலூர் (ககூக), இடைமருது திருவேகம்பம் திருவாஞ்சியம் (உசுஅ) திருப்பூவணம் (ஙு0ரு, (ஙுஙுஅ) சீகாழி (ஙுஎகூ) என்ற திருப்பதிகளிற் பெரும் பாலன திருவாசகத்துட் கீர்த்தித் திருவகவலிற் காணப் படும். இறைவன் திருவடியை நிலத்தை அகழ்ந்து நெடிது சென்றுங் காணமாட்டாத திருமால், தில்லையம்பலத்துள் ஆடவெடுத்த பாதங் கண்டவுடன், மற்றத் திருவடியை யுங் காட்டென்று தவங்கிடந்ததாக அடிகள் புனைந்து கூறிய நயத்தினைப் பின்வரும் பாட்டினுட் காண்க.

> "புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
> திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
> கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
> வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே." (அசு)

இதனால், அடிகள் காலத்தே, தில்லைக் கோவிந்தர் கோயில் தில்லைக் கோயிலின் மேலைவாயிலில் இறைவனை அவர் தலை யால் வழிபடுதற்குரிய இயைபுடன் இருந்ததென்று தெரி கிறது.

> 'வரகுணனுந் தென்னவ னேத்துசிற் றம்பலத்தான்' (ரு0சு)

என்ற விடத்துக் குறிக்கப்பட்ட வரகுணன் அடிகளை அமைச்சனாகப் பெற்ற அரசனின் முன்னோனாய்த் தில்லை யிற் றங்கியிருந்தவனாதல் வேண்டும். 'தில்லை மூவாயிரவர்' என்ற சரித்திரக் குறிப்பும் எழுபத்திரண்டாவது பாட லுட் காணப்படுகின்றது. 'கூடலிணைந்த ஒண்டீந்தமிழ்' என்றமையால், அடிகள் காலத்தே கடைச்சங்க முடி வெய்தி யிருத்தல்வேண்டும். பாணனைப் பழித்த செய்யு ளுள் (ஙுஅகூ) அவனை 'ஆத்தின்னி' என்றிகழு முறை காணப்படுதலின், பாணர் ஆவின் ஊனையுண்ணும் புலை யரோ டொத்த மரபினரென்று தெரிகிறது. உயர் மரபினர் அக்காலத்தும் அருளொழுக்க முடையராய்த் திகழ்ந்தனரென்பது, மடலேறுந் தலைவனுக்கு அது அருளா லரிதென விலக்கிய விடத்துச் சுட்டப்பட்டது.

"பெண்ணை
உடனும் பெடையொடொண் சேவலும் முட்டையுங் கட்டழித்து
மடனும் புனைதரின் யார்கண்ணை தோமன்ன வின்னருளே"

என்றது காண்க.

புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தலைக் கூறுந் திருப்பாட்டின்கண், தலைவனின் பரத்தையர், புதல்வனின் சிற்றன்னைமார்களென அழைக்கப்பட்டமை கருதத் தக்கது. தலைவன் விழைந்த பரத்தை தலைவியை யிகழ்ந்து தன்னை வியந்துரைத்தமை கேட்ட தலைமகள், பரத்தைக்கும் ஓர் தங்கை தோன்றின், அவள் இறுமாப்பொழியு மென்ற விடத்தும், தலைவனின் காதற்பரத்தையர் தங்கைய ரென்று குறிக்கப்பட்டமை காண்க.

'இறுமாப் பொழியுமன் றேதங்கை
தோன்றின்என் எங்கை' (கூஎகூ)

என்றது காண்க. தலைவன் கழலணிவதும் வெள்ளையுடையுடுப்பதும், தலைவி சிலம்பணிந்து செம்பட் டுடுத்துவதும் அக்கால வழக்கமென்பது,

'மின்னொத் திடுகழல் நூபுரம் வெள்ளைச்செம் பட்டுமின்ன
ஒன்றொத் திடவுடை யாளொடொன் றும்புலி யூரனென்றே'
(உசுச)

என்றமையாற் புலனும். ஒருவன் பெற்ற பெண் அவனோ டொத்த மற்றொரு ஆண்மகனுக் குரியளாதல் உலகியற்கை யென்பார்,

'சுரும்பிவர் சந்துந் தொடுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணியாம்............
....
கரும்பன மென்மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே' (உசுஅ)

என்றார். சந்தனமும் கடலில் விளைந்த முத்தும் வெண் சங்கும் தாம் பிறந்தவிடங்கட்குப் பயன் படாது தம்மை விரும்பி யணிவாரிடத்தே சென்று அவர் மெய்க்கு அணியாவன; அவைபோலவே மென்மொழி மங்கையரு மாவர் என்றவாறு. ஓவியமெழுது மாற்றலைப் பண்டைத்

தமிழ்மக்கள் பெரிதும் வளர்த்து வந்தனர். தலைவியின் உருவினை யெழுதி அதை மடற்குதிரைக்கு முன் வைத்தே மடலூர்தல் வழக்கம். தலைவியின் குரலையுஞ் சில வுறுப்புக்களையும் எழுதுதல் அரிதெனக் குறிக்குந் தோழி கூற்றாகவந்த பாட்டு மிகுந்த நயமுடையது.

"யாழு மெழுதி யெழின்முத் தெழுதி யிருளின்மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டியென் றூல்பிறவி
யேழு மெழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம்
போழு மெழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே"

இஃதென் சொல்லியதெனின், தலைவியின் மொழிபோன்ற யாழினையும், புன்முறுவல் பூக்கும் எயிறுபோன்ற முத்துக்களையும், கூந்தல் போன்ற இருட் செறிவையும் கூந்தலின் அமைத்த முறையிலுள்ள பூமாலையையும், வாய் போன்ற தொண்டைக் கனியையும் கண்கள் போன்ற பிஞ்சுமாவடு வகிரையும் எழுதி யமைத்ததோர் கொம்புண்டாயின், அதனை முன்வைத்து மடலேறும் என்றவாறும். உவமானப் பொருள்கள் உவமேயமாக வமைக்கப்பட்டன, தன் பிறவி யேழும் எழுதவியலாமை போல, இவையுமா வென்று குறித்தவாறும். உடன் போக்கின் கண், தோழி தலைவன் தலைவியை எஞ்ஞான்றும் பாதுகாத்தலை வற்புறுத்துவான் கூறுமுரை ஓம்படுத்துரைத்தலென்பதனால், ஓம் என்பது காப்பு என்ற பொருளுடையதென்பது துணியப்படும். இறைவன் அமைத்த அற்முறை கூறும் அருமை நிலைதிரியாமையும் கடல்வற்றாமையும் இதன்கண் சுட்டப்பட்டது. தலைவன் அருள் தலைவியினின்று வேறுபடுமாயின், அறநிலை திரியும்; கடல் வற்றும் என்று குறித்தார்.

"அறந்திருந் துன்னரு ளும்பிரி தாயி னருமறையின்
திறந்திரிந் தார்கவி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே"

என்றமை காண்க. தலைவி தலைவன்பாற் காதலுறுவதை 'நெருப்புறு வெண்ணெயுநீருறு முப்பும்' (௩௧௫) என்றுவமித்தார். 'சொற்பாலமுது இவள் யான் சுவை' (அ)

என்றதும் இருவர் நட்பின் ஒருமை யுணர்த்தும். 'நாண் ணிவளாம் பகுதிப்பெற்ற' என்றமையால், தலைவன் தலைவி யின் வயமாய் நிற்றல் குறிக்கப்பட்டது. 'இதோ வந்து நின்றதென் மன்னுயிரே' (ஙக) என்ற விடத்து, தலைவி தலைவன் மன்னுதற் கேதுவாய உயிரெனப்பட்டமை காண்க. தலைவன் றலைவி யொருமைப் பாட்டைத் தோழி மதியுடம்படுதலின்கட் கூறுவது மிக்க நயஞ் சிறந்தது.

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பத் துன்பங்களே."
(எக)

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (பொருள், களவு. உஉ.)

என்னுந் தொல்காப்பியக் கருத்து

"தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்று" (உoச)

என்ற விடத்து மொழியப்பட்டது. உயிரினைக் கூறாது தாயினைக் கூறினர்; உயிரினும் தாய் சிறப்பாகப் போற் றற்குரிய ளாகலினென்க. 'சிறியேன் சொல்லும் வாச கமே' (கரு அ) 'தமியேற் கொரு வாசகமே' (கஎஎ) 'புற்றில்வாளரவன்' (ஙஉo), 'பைங்குவளை' (ஙகூங), 'மூவர் நின்றேத்த' (ஙஙஎ), முதலியன திருவாசகச் சொற்களையுங் கருத்துக்களையும் நினைவுறுத்துவன. 'கூற்றாயின' (ஙஅஉ) என்பது அப்பமூர்த்திகளின் முதற் றேவாரத்தை நினைவுபடுத்தும். திருக்கோவையாருள் பலபாட்டுக்களில், தில்லைச் சிற்றம்பலவர்மாட் டன்பிலா தவரே துன்புறுவார்க்கு உவமிக்கப்பட்டனர். சஅ, எரு, அஎ, கஙக, கஙச, கஅகூ, ககூஉ, உoகூ, உகஉ, உஉஎ, உஉகூ, உசo, உருo, உருங, உருச, உகூo, உகூங, உஎஅ, உஅங, உஅச, ஙoகூ, ஙஉகூ, ஙசo, ஙசரு, ஙருரு, ஙகூஎ என்னும் எண்ணுடைய திருக்கோவைப் பாட்டுக் களை நோக்குக. அவனதருள் பெற்றவரே பேரின்

புற்றூர்க்கும், மகிழ்ச்சியுற்றூர்க்கும், ஒப்புளாராக்கப்பட்டனர். அடிகள் இறைவன் தம்மை யாட்கொண்டு பிறவி யறுத்ததையும் பல விடங்களிற் கூறிப்போந்தனர். 'பிறவி பெருமற் செய்தோன்' என்றது காண்க. தலைவியின் கண்களைப் புனைந்துரைப்பார் அவை தமதன்பின் விரிந்து, பாசம்போற் கறுத்து, தில்லையம்பலம்போல் ஒளியை யுடையவாய்த் திருநீறென வெளுத்து இறைவன் புகழ் மொழிபோல் நீட்சியுடையன என்றமை காண்க.

"ஈசற் கியான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்றில்லை யின்னொளி போன்றவன்றோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே."

ஈண்டும் இறைவன் தன் பாசத்தை வாங்கியதும், அவன் பாற் றூம் பேரன்பு பூண்டதுங் குறித்தமை நோக்குக. கல்வி நலங்குறித்த விடத்து, கல்வியுடையார் இறையடி தொழுவார்போல் அளவற்ற பெரும்பய னுறுவார் என் றமையாற் கல்விப்பெருஞ்சிறப்பும், அதன் பெரும்பயன் இறைவழிபா டென்பதும் குறிப்பாக உணர்த்தினர்.

"சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையி
னூரள வில்லா வளவுசென் றூரம் பலத்துநின்ற
வோரள வில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போ
லேரள வில்லா வளவின ராகுவ ரேந்திழையே." (௧0அ)

செல்வச் சிறப்பு

'வறியா ரிருமை யறியார்' (௩௩௩)
'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னூன் முடியும்' (௩௩௨)

என்றவிடத்து எதிர்மறையானும் உடன்பாட்டானு முணர்த்தப்பட்டது. இத்திருக்கோவையார் இறுதிப் பாட்டில், 'மற்றியாவர்க்கு மூதியமே' என்ற குறிப்பாற் சிற்றின்பம் விழைவார்க்கும் பேரின்பங் கருதுவார்க்கும் எக்கலை பயில்வார்க்கும் இந்நூல் நயந்தருவது என்ப தினி துணரக் கிடக்கின்றது. இதுபற்றியன்றே பெரியோர்,

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என்றனர்.

திருவாசகத்தின் முதனான்கு பகுதியின் கருத்தினையுஞ் சுருக்கமாக ஆராய்வாம்.

சிவபுராணம்: சிவபுராணத்துள் உலகியலுக்குரிய திருவைந்தெழுத்து முதற்கண் வாழ்த்தப்பட்டது. உயிர்கள் கட்டுற்ற நிலையில் தமது அறிவினை உலகின்கட் செலுத்தும் மறைப்புச் சத்தியின்வயமாய் நிற்றலின், ஈண்டுக்கூறிய திருவைந்தெழுத்தில் நகரமானது முதலில் நின்றது. மறைப்புச் சத்தியையே ஆதிசத்தி யென்ப. ஆதிசத்தி பந்தத்திற்கும் பராசத்தியாகிய அருட்சத்தி வீட்டிற்குங் காரணமாதலின், உலகத்தோற்றத்திற் கேதுவாகிய ஆதிசத்தியையே முதற்கண் இதனுள் விதந்தோதினார். புராணமென்பது பழைய வரலாறுதலானும், வரலாற்று முறையில் மிகத் தொன்மையானது உலகத் தோற்றமாதலானும், உலகத்தோற்ற முதலியனவற்றை இறைவனது திருவருட் செயலின்வைத்து விளக்கக் கருதிய அடிகள் அதற்கேதுவாகிய ஆதிசத்தியைத் திருவைந்தெழுத்தின் வாயிலாக வாழ்த்தின ரென்க. 'நமச்சிவாய வாஅழ்க' என்றது அது. படைப்பின்கண் நாத தத்துவமாகிய ஒலிமுதலே தொடக்கத்தில் தோற்றமுறுதலானும் அத் தத்துவத்தைச் சிவதத்துவமென்று வழங்குதலானும் அத்தத்துவத் தலைவனாகிய இறைவனை நாதன் என்ற பெயரால் விளக்கினார். 'நாதன்றாள் வாழ்க' என்றது காண்க. 'அறிவினில் அருளால் மன்னி' என்றபடி அருட்சத்தி வாயிலாக உயிரினது அறிவின்கட் கலந்து அவற்றின் உயிர்க்குயிராய் அவற்றை நடத்துதலாலே அச்செயலுக்குரிய சத்தி தத்துவ முதல்வனைச் சிவபுராணத்தின் இரண்டாவது அடியில் வாழ்த்தி

னர். 'என்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க' என்றதும் அது. அருளுதலென்னும் ஐந்தாந் தொழிலுக்குரிய சதாசிவ முதல்வரை மூன்றாவதடியில் வாழ்த்து முறையானே சதாசிவ தத்துவத்தைக் குறிப்பா னுணர்த்தினர். 'குருமணிதன் றாள்வாழ்க' என்பது காண்க. அன்பர்கட்கு அருளுருக்கொண்டு இன்னருள்கள் புரிவதற்குரிய மகேசுர தத்துவத்தைச் சிவபுராணத்தின் நான்காவதடியில் 'அண்ணிப்பான்' என்ற சொல்லாலும், உயிர்கட்குச் சுட்டறிவினை உதிப்பித்தற்குக் காரணமாகிய சுத்த வித்தியா தத்துவத்தை 'ஆகமமாகி' என்ற சொல்லாலும் பெறவைத்தமை காண்க. சுத்த தத்துவங்களில் ஐந் தொழிலையும் தாமே யியற்றும் முதல்வன் ஒருவனே கீழ்ப்பட்ட தத்துவங்களிலே முத்தொழில் நிகழ்த்துவதற்குக் காரணமாகிய மூர்த்திகள் பலரையும் அதட்டித்து நிற்றலின், 'அநேகன்' என்றார். அங்ஙனம் அநேகனாயும் தனது இறைமைத் தன்மையிற் குறைவுபடாதவனென்பார், 'இறைவனடி வாழ்க' என்றார். இங்ஙனம் பொதுப்பட இறைவன் செய்யும் நன்மையைக் கூறிய பின்னர், தமக்குச் சிறப்பாக அவன் புரிந்த அருட்டிறத்தை விதந்தோதுவாராயினர்.

"அவனரு ளாலே யவன்றாள் வணங்கி"

என்றமையால், இறைவனை வணங்குவதற்கு அவனுடைய திருவருள் வேண்டுமென்பது பெறப்பட்டது. அறநெறியில் நின்று உலக நிலையாமை கண்டு வீடு பேற்றின்கண் அவா மிக்குடையார்க்கே இறைவன் றிருவருள் புரிவன்.

'முனிவி லாததோர் பொருளது கருதலும்'
'தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி'

என்றது மது.

'சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்'

என்று ஈண்டுக் குறித்ததும் அக்கருத்தை வலியுறுத்துதல் காண்க. இறைவனது அருளும் அடியவரது அன்பும் வித்தும் மரமும்போல் ஒன்றுக்கொன்று ஏதுவாயிருத்தல்

வாயுசங்கிதையுள் 'ஆங்கவ னருளால் பத்திநன் குண்டாம், பத்தியால் அவனருளுண்டாம்' என்றுரைத்தவாற்றால் தெளியப்படும். பத்திக்குக் காரணம் அறம் என்பதும் ஆண்டுணர்த்தப்பட்டது.

"ஆங்கவ னருளாற் பத்திநன் குண்டாம்
பத்தியா லவனரு ளுண்டாம்
வீங்கிய பத்தி பற்பல பிறப்பில்
வேதங்க ளுரைத்திடும் படியே
தீங்கறு கரும மியற்றிய பலத்தாற்
சிவனருள் செய்திட வருமால்
ஓங்கிய பத்தி யாற்சிவ தரும
மொழிவறப் புரிந்திடப் படுமால்."

பல்வகைப் படைப்புகளும் செவ்விதிற் றிகழ்வதற்கு ஒளி வேண்டப்படுமாதலின், "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்" என்றார். கிறித்து விவிலிய நூலிலும் 'கடவுள் ஒளியை முதற்கண் படைத்தார்' என்றது காண்க. நிற்பனவும் நடப்பனவுமாகிய பல்வகை உயிர்களைக் குறித்த விடத்து எழுவகைப் பிறப்புங் குறிக்கப்பட்டன. புழு, பாம்பு என்பன ஊர்வனவற்றையும், நீர் வாழ்வனவற்றையும் அடக்கிநிற்கும். பேய்க்கணம் அசுரர் முதலியவை தேவப் பிறப்பினுள் அடங்கும். கணங்களென்றது பூதகணங்களை. 'கல்லாய்' என்றது புல்லாவதற்குமுன் கல்லினிடை காண்டற்கரிய நுண்ணிய உருவொடுகிடந்த உயிர்களைக் குறித்தற்கு. அவை கல்லின் வேறாகப் பகுத்தறியப்படுமாறின்மையின், அவற்றைக் கல்லாயென்றார். நிலத்திலகழ்ந்தெடுக்கும் பொன் வெள்ளி முதலிய தாதுப்பொருள்களிடத்தும் உயிர்ச்செயல் காணப்படுகின்றது என்று டாக்டர் போஸ் முதலிய உயிரியல்நூலார் கூறுவதும் இக்கருத்தை வலியுறுத்தும். அண்டத்துள் நாதவடிவாய் நின்று எவற்றையும் இயக்குவது ஒப்ப, பிண்டத்துள்ளும் ஓங்காரமாய் நின்று உயிரினையும் உடம்பினையும் தொழிற்படுத்தும் முதல்வனென்பார், "உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்றார். "போக்குவாய் என்னைப் புகுவிப்

பாய்'' என்றது மறைத்தற்ளுெழிலைக் குறிக்கும். பந்தமும் வீடும் உணர்த்தப்பட்டன என்பாரும் உளர்.

"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்''

என்றதனுலே ஐந்தொழிலுங் குறிக்கப்பட்டன; 'ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்றமையால் முதற்பூதம் குறிக்கப்பட்டதென்றும், 'வெய்யாய் தணியாய்' என்றமையால் தீயும் நீரும் குறிக்கப்பட்டன வென்றும், காணப்படும் மூன்று பூதங்களுங் குறிக்கப்படவே, காணப்படாத இரண்டும் பெறப்படும் என்றும், 'இயமான' னென்றமையால் உயிர் குறிக்கப்பட்டதென்றும் இயம்பி உயிரில் பொருட்காரணமாகிய ஐம்பூதங்களின்கண்ணும் இறைவன் கலந்திருப்பது ஈண்டுச் சுட்டப்பட்ட தென்ப. இறைவன் முத்தொழிற்படான் என்பார், "ஆக்க மளவிறுதியில்லாய்'' என்றவிடத்து ஐம்பூதங்களின் நிறம் உணர்த்தப்பட்டது. இறைவனது ஐம்முகத் திருமேனியில் உச்சிமுகம் பளிங்குநிறமாயும், கிழக்குமுகம் பொன் நிறமாயும், தெற்கு முகம் கரிய நிறமாயும், வடக்கு முகம் செம்மை நிறமாயும், மேற்கு முகம் பால்நிறமாயு மிருத்தல் காண்க. வானிற்கு நிறம் பளிங்கின தென்றும் காற்றுக் கறுப்பென்றும், மண், புனல், அனல் முறையே பொன்மை, வெண்மை, செம்மை நிறங்கள் உள்ளன வென்றுந் தத்துவ நூல்கள் பகர்வதை யுணர்க. ஐந்து திருமுகங்களின் நிறம் சிவதரு மோத்திரத்திற் றெளிவாய்க் கூறப்பட்டது.

"உச்சிமுகம் ஈசானம் ஒளிதெளியப் பளிங்கே
உத்தரபூ ருவதிசையை நோக்கியுறும் உகந்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகம் தற்புருடம் கோங்கலர்போல் நிறமே
அச்சுறுத்தும் அகோரமுகம் அறக்கரிது காளம்
அவிழ்தாடி வலத்தோளில் தென்னோக்கி அமரும்
செச்சைநிறத் தெரிவைமுகம் இடத்தோண்மேல் வாமம்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திதழ்பால்.''

'அறம் பாவம்' என்ற சொற்கள் இருவினைகளை உணர்த்தி நின்றன. அறம் என்பது தமிழ்ச்சொல்லா யிருத்தல் போலவே பாவமென்பதுந் தமிழ்ச்சொல்லே யென்பாரு முளர். பாவுதல் என்ற பரவுதல் என்று கருத்து. வரையறுக்கப்பட்ட அறவழியிற் செல்லுதல் நல்வினை என்றும் வரம்பிற்குள் நில்லாது உள்ளம் ஈர்த்த வழியே பரந்து செல்லுதல் பாவமாகிய தீவினை என்றும் கருதுக. இதனாற் கன்மமலங் குறிக்கப்பட்டது. 'மூடிய மாய இருளை' என்றவிடத்து உடம்பின் றொடர்பால் வரும் மயக்கமாகிய மாயாமலங் குறிக்கப்பட்டது. ஆணவமலத்தை நீக்கவே உடம்பு கொடுக்கப்பட்டது. அவ் வாணவமலம் அஞ்ஞானம் எனவும் படும். 'அஞ் ஞானந்தன்னை அகல்விக்கு நல்லறிவே' என்றவிடத்து அது குறிக்கப்பட்டது. மும்மலமாகிய பாசத்தை இறைவன் நீக்குதலால், 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே' என்றார்.

'சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' என்றவிடத்து 'உணர்ந்து' என்பது நுகர்ந்து உணர்ந்து என்று பொருள்படும். உரை, கருதல் என்னும் ஈரளவையினும் நுகர்ச்சியாகிய காட்சியே சிறந்த கருவியாதல் தெளிக. 'செம்பொருள் காண்பது அறிவு' என்ற திருவள்ளுவ நாயனார் கருத்தையும் உற்று நோக்குக.

கீர்த்தித்திருவகவல்: கீர்த்தித்திருவகவலின் முதற்கண் 'தில்லை மூதூர்' என்றது எல்லாவுலகங்களின் தோற்றத்திற்கும் அடிப்படையாகிய முதலிடம் என்ப. அவ்விடத்தே நடத்துந் திருக்கூத்தினால் உலகங்களைத் தோற்றுவித்தும், பின்னர்த் தோன்றும் உயிர்களை உள்ளத்தே நின்று அவற்றை இயக்குவித்தும், படைப்பு முதலிய தொழில்களினால் அளவற்ற பல்வேறு வகைப்பட்ட கடவுட்டன்மைகள் புலனாகும் வண்ணம் சிறப்பாகத்திகழ்ந்தும், வெவ்வேறு உலகங்களிலுள்ள தலைவர்களும் பிறரும் சுட்டறிவாற் றத்துவ வுண்மை உணர்ந்து

உய்தற் கேதுவாகிய கலைஞானத்தைத் தோற்றுவித்தும், அன்னோர் பாசநீக்கத்துக்குரிய ஞான்று சுட்டறிவிற் கேதுவாகிய கலைஞானத்தை மறைப்பித்தும் இறைவன் பொதுவாக ஆட்கொள்ளும் முறைமையை விளக்கிய பின்னர் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு திருவடிவங்கொண்டு இறைவன் அவர்களை ஆட்கொண்டருளிய சிறப்பு முறைகளை ஆசிரியர் எடுத்துக்காட்டு முகத்தால் விளக்குவாராயினர். 'என்னுடை யிருளை யேறத் துறந்தும்' என்றவிடத்து இருள் என்றது ஆணவ மலத்தைக் குறித்து நின்றது. இருள் என்ற சொல்லைத் தனியாக வழங்குமிடத்து அஃது ஆணவமலத்தை உணர்த்துமென்றும், அடைமொழிகளோடு சேர்ந்துழி ஏனையவற்றை யுணர்த்துமென்றும் அறிக. சிவபுராணத்துள் 'மாயை இருளை' என்ற விடத்து மாயாமலங் குறிக்கப்பட்டது. 'இருள் திணிந் தெழுந்திட்டதோர் வல்வினை' என்ற விடத்துக் கன்ம மலம் குறிக்கப்பட்டது. 'இருள் சேர் இருவினை' என்ற குறட்பகுதியில் இருள் என்பது இருவினைக்கு அடைமொழியாக வந்தது காண்க. இருண்டு பந்தித்து நின்ற பழவினை என்ற தேவாரமு மது.

மகேந்திரமலையில் இருமுறை ஆகமங்களை இறைவன் தோற்றுவித்ததாகத் தெரிகின்றோம். 'மன்னுமாமலை மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்' என்று முதற்கூறிய பின்னும், 'மற்றவைதம்மை மகேந்திரத் திருந்து, உற்றஐம் முகங்களாற்பணித் தருளியும்' என்றருளிச் செய்தமையால் அது தெளியப்படும். முதலில் உமையம்மையார்க்கும் பின்னர் ஐந்து திருமுகங்கள் வாயிலாக ஐந்து முனிவர்கட்கும் ஆகமம் அறிவுறுத்தியதாகக் கருத இடமுண்டு. வலைவீசிய திருவிளையாடலினால் ஒருழியிற் றோன்றிய ஆகமம்பிறிதோர் ஊழியில் மறைவுற்றமையால் இறைவன் அவற்றை மீட்டும் வெளிப்படுத்தினன் என்பதுஅறியக்கிடக்கின்றது. மகேந்திரம் பொதிய மலைக்குத் தெற்கேயுள்ளதென்று சிவதருமோத்தரங் கூறுகின்றது. இவ்வகவலில் 'மந்திரமாமலை

மகேந்திர வெற்பன்' என்று பிறிதோரிடத்திலும் அருளிச் செய்தமை உணர்க. திருவார்த்தை என்னும் பதிகத்தில் 'தூவெள்ளை நீறணியும் எம்பெருமான் சோதி மகேந்திர நாதன்,' 'வேடுருவாகி மகேந்திரத்து மிகுகுறை வானவர் வந்து தன்னைத் தேடவிருந்த சிவபெருமான்' என்ற இடங்களில் மகேந்திரத்தை விதந்தோதினமை காண்க. நந்தம்பாடி என்ற இடத்திலும், உத்தரகோச மங்கையிலும், திருவாரூரிலும் இறைவன் ஞானமுணர்த்தும் அருட்குரவனாகத் திகழ்ந்தனன் என்று கீர்த்தித்திருவகவலில் குறிக்கப்பட்டது. கல்லாடம், பஞ்சப்பள்ளி, திருவேகம்பம், திருவாஞ்சியம் என்னுமிடங்களில் அம்மையுடன் இறைவன் கலந்து தோன்றி அருள் செய்தனன் என்று விதந்தோதப்பட்டது. விதந்தோதாத விடத்தும் முதற்கண் திருவருட்சத்தி பதியப்பெற்ற பக்குவமுடையார்க்கே இறைவன் சிவப்பேறு நல்குதலால், 'கூறுடைமங்கையுந் தானும் வந்தருளி யேறுடையீசன் இப்புவியை உய்'விக்கின்றனன் என்று தெளிக. இறைவனின் திருவடிவம் அருள்வடிவமாதலின், அவன் திருவுருக்கொண்டு அன்பர்க்கருளும் வண்ணம் வெளிப்பட்டபோதெல்லாம் அவனும் அம்மையும் உடனெழுந் தருளுவதாகவே கூறுதல் மரபு. ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான்புகில் அளவில்லை' என்றதற் கேற்ப, 'வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும் நூறுநூறுயிரம் இயல்பினதாகி' என்றார். இங்ஙனங் கூறியவாற்றால் இவ்வகவலுள் விதந்தோதிய அருட்செயல்கள் எடுத்துக் காட்டாமாதல் மாத்திரையேயா மென் றுணர்க.

கீர்த்தித் திருவகவலுள், பெரும்பான்மையும் பாண்டிய நாட்டில் இறைவன் இயற்றிய திருவிளையாடல்கள் எடுத்தோதப்பட்டன. கல்லாடம், சாந்தம்புத்தூர், வேலம்புத்தூர், திருப்பனையூர், திருப்பூவணம், பட்டமங்கை, ஓரியூர், பாண்டூர், தேவூர்த் தென்பால் தீவு, தற்றலம் முதலிய இடங்கள் பாண்டிய நாட்டிலுள்ளனவே. 'குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசை'

என்ற விடத்துக் குடநாடென்பது திருப்பெருந்துறைக்கு மேற்றிசையி லுள்ளதாய் மதுரையைச் சூழ்ந்துள்ள பாண்டிநாட்டுப் பகுதியே யென் றுணர்க. அரசர்க்குச் சிறந்த பத்துறுப்புக்கள் எனப்படுந் தசாங்கமென்பது இருவகையாக இந்நாலுட் கூறப்பட்டது. கீர்த்தித் திருவகவலினும் தசாங்கமென்னுந் திருப்பதிகத்திலும் வெவ்வேறு முறையிற் கூறப்பட்டமை காண்க. அகவலில் நீற்றுக் கொடியும், தசாங்கத்தில் ஏற்றுக்கொடியுங் கூறப்பட்டன. பாசநீக்கத்தினையுஞ் சிவப்பேற்றினையும் நினைவுறுத்தும் திருநீற்றின் பொலிவே இறைவன் அருட்குருவாய் வந்தகாலை அடிகள் உள்ளத்தைக் கவர்ந்ததாமாக லின், தன்னை வெல்லுதற் கெடுத்த கொடியென்று அதனைச் சிறப்பித்தனர். எல்லார்க்கும் பொதுவாகிய அறத்தை யுணர்த்தும் ஏற்றுக் கொடியைத் தசாங்கப் பொதுமை கூறும் பதிகத்தே விதந்தனர். ஆனந்தமே அவனுடைய ஆறென்றும், பாண்டிநாடே அவனுடைய நாடென்றும், உத்தர கோசமங்கையே அவனுடைய ஊரென்றும், புரவியே அவனுடைய ஊர்தியென்றும், நாதப்பறையே அவனுடைய பறையென்றும், முத்தலைச் சூலமாகிய கழுக்கடையே அவனுடைய படையென்றும், அருண்மலையே அவனுடைய மலையென்றும், ஈரிடத்தும் ஒத்த முறையிலேயே குறித்தருளினர். அவன் தேவர் கட்கெல்லாம் தேவனென்ற கருத்தினையே தேவதேவனென்ற சொல்லுந் தேவர் பெருமானென்ற சொல்லும் உணர்த்துமாதலின், அவன் திருப்பெயரும் ஒன்றாகவே ஈரிடத்துங் குறிக்கப்பட்டது. மாலையைக் கூறுமிடத்து அகவலுள் கழுநீர் மாலையும், தசாங்கத்துள் அறுகின் தாரும் கூறப்பட்டன. தமக்கு அருள் புரிந்த காலத்து முதற்கண் கழுநீர் மாலையையும், பின்னர் அறுகின் தாரையும் இறைவன் அணிந்திருந்தனன் போலும். 'தாளி அறுகின் தாராய் போற்றி' என்று போற்றித்திருவகவலின்கண் குறித்தமையுங் காண்க. அடிகள் இறைவன் தில்லைக்கு வரும்படி பணித்தருளிய செய்தியும் இவ்வகவலுள் உரைத்தமை காண்க. உலகத்தோற்றத்தின்

பொருட்டு உமையம்மையோ டாடியும், அதன் ஒடுக்கத்தின் பொருட்டுக் காளி காண ஊனநடன மியற்றியும் மன்னுயிர்களை இறைவ னுய்யக்கொள்ளுதலால், கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு அருளிய 'திருமுகத் தழகுறு சிறுநகை' யென்றார். 'ஒளிதரு கயிலை உயர்கிழவோனே' என்ற விடத்துக் குறிக்கப்பட்ட கயிலையானது நாத தத்துவத்திற் கப்பாற்பட்டதென்று உய்த்துணர்க.

திருவண்டப்பகுதி: திருவண்டப்பகுதியுள் படைப்புப் பொருள்கள் முழுவதையும் உள்ளடக்கிய பேரிடமாகிய பிரமாண்டத்தை அண்டமென்றும், அவற்றின் பல்கோடி பிரிவுகளை உண்டைப்பிறக்க மென்றுங் கூறி, முத்தொழிற் றன்மையைப் பொதுப்பட வியந்தார். அண்டங்கள் பல என்றும், அவற்றின் பகுதிகள் உண்டை வடிவாகத் திகழ்கின்றன என்றுங் குறித்ததாகக் கருதலாம். அங்ஙனங் கருதுமிடத்து உருண்டை வடிவாகிய பல உருவங்களின் தொகுதியே அண்டமென்றும் உணரக்கிடக்கின்றது.

ஒரு வெஞ்சுடர் மண்டிலத்தை நடுவாகவுடைய உலகங்கள் பலவும் ஓர் அண்டமாகக் கூடுமென்று கருதுவாருமுளர். ஓர் அண்டத்துள் நுண்ணுடம் புடைய உயிர்கள் வாழ்தற்கு ஏற்றவாறு நமக்குக் கட்புலனாகாத சிறப்பிடங்கள் பல இருத்தல் கூடும். அவற்றைப் புவனமென்று கூறுப. இறந்த உயிர்கள் செல்லும் உலக்மானது நுண்ணிய தன்மையுடையதாதலின், நம்மவர் கண்ணுக்கு அது புலப்படுவதில்லை. நமது சமய நூல்களிலே இயமனது உறைவிடமும் பிற திக்குப் பாலகர்களின் உறைவிடமும் மேருவின் முடியில் உள்ளனவென்று கூறப்பட்டிருப்பதால், மேருவும் கட்புலனாகாத நுண்ணிய தோற்றமுடையதென்று கருதற்பாலது. சமய நூல்கள் அண்டப் பகுதிகளைக் கூறுமுறை, உண்மையைச் செவ்வியின் விளக்குந் தெளிவோ டமையவில்லை. ஆதியில் எழுதப்பட்ட அவற்றின் வரலாறு பற்பல காலங்களில் மாறுபாடடைந்தமையால், இப்போதுள்ள ஏடுகள் உண்மையை நேரே மொழியலாகாதன வாயின. ஆதலால்

அவை பொய்யானவையென்று சிலரால் ஒதுக்கப்படுகின்றன. அங்ஙனம் ஒதுக்குதலுந் தக்கதன்று. பொய்யினின்று மெய்யைப் பிரித்தறியவே முயலவேண்டும். உலகங்கள் எண்ணிலாதன என்றும், அவை வெவ்வேறு தொகுதிகளாகப் பகுக்கப்பட்டகாலை அண்டமென்று பேர்பெற்று நின்றன என்றும் இதுகாறுங் கூறியவாற்றால் எளிதில் அறியப்படும். சைவநூல்கள் நிலமுதல் நாதம் ஈறாக ௩௬ தத்துவங்கள் கூறி, ஒவ்வொரு தத்துவத்தினும் அண்டங்கள் பலவுள்ளன என்று தெரிக்கின்றன. கீழுள்ள தத்துவங்களைப் பார்க்கிலும் மேலுள்ளவைகள் ஒன்றுக்கொன்று பெரிதும் விரிவுடையன ஆகலான், அண்டங்களும் அவ்வாறே விரிந்து பெருகியுள்ளன. ஆதலாற்றான், ஆசிரியர் **சிவஞானயோகிகள்** சிவஞானமா பாடியத்துள் பின்வருமாறு கூறினரென்க.

'சாதாரணமான அப்பு தத்துவ அண்டம் பிருதிவியண்டத்தளவிற் பதிற்றுமடங்கேற்றமாகிய ஆயிரங்கோடியோசனை மானமுடைத்து. அவ்வண்டங்களும் எண்ணிறந்தன. இவ்வாறே சாதாரண தேயு தத்துவ முதற் சாதாரண மூலப்பகுதி தத்துவங்காறும், கீழண்டத்தை நோக்கி மேன்மேலண்டம் பப்பதிற்று மடங்களவு ஏற்றமாக வுடையன வெனக்கொள்க. இவற்றின் விரிவினைச் **சிவதருமோத்தரத்துட்** காண்க.'

'மூலப்பகுதிக்குமேற் புருடதத்துவ முதல் மோகினியீறாகிய ஏழு தத்துவங்களுங் கீழ்க்கீழ்த் தத்துவங்களை நோக்கி மேன்மேல் நூறு நூறு மடங்கு பிரமாணம் ஏற்றமாக வுடையன.'

'இவ்வேழுக்கும் மேலாகிய சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் மூன்று தத்துவங்களுங் கீழ்க் கீழ்த் தத்துவங்களை நோக்கி மேன்மேல் ஆயிரம் மடங்கு பிரமாணம் ஏற்றமாக வுடையன.'

'சத்தி தத்துவஞ் சிவதத்துவம் இரண்டுங் கீழ்க் கீழ்த் தத்துவப் பிரமாணத்தை நோக்கி நூறாயிர மடங்கு பிரமாணம் ஏற்றமாக வுடையன.'

அண்டங்களெல்லாம் நுண்ணிய அணுக்கள் போல இறைவன் திருமுன் இயங்குதலால், 'இல்நுழை கதிரின் துன்னணுப்புரையச் சிறியவாக' என்றார். அண்டங்கள் தோறும் அயன் அரி அரன் என்னும் மூவரும் வெவ் வேறுவர். ஆதலின் அவர்கள் தொகையும் அளப்பிலா தனவே. அவருள் அரன் நிலையில் நிற்போர் சிவபெருமான் பால் வீடு பயக்கும் உணர்வு பெற்று, பிறப்பிறப்புக் கடந்தவராதலின், அன்னோரைத் தோன்றிநின்றழியும் பிற தெய்வங்களோடு ஒருங்கு சேர்த்துக் கூறிற்றிலர். பிற தெய்வங்களுள் அயனும் அரியும் சிறந்தோராதலின், அன்னோரையே விதந்தோதினார். அன்னோரது உடம்பு களே முத்தொழிற்படுவனவாதலான், அவைகள் குறிப் பான் உணர்த்தப்பட்டன என்று தெளிக. பெரியவாகிய அண்டங்களும் சிறியவாகிய உடம்புகளும் தோன்றுதற் கும், தோன்றி வளர்தற்கும், விரிதற்கும், மறைந் தொடுங் குதற்குங் காரணமாகிய அடிப்படையான சுழற்சியை இறைவன் எழுப்புதலையே,

"தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன்"

என்றவிடத்துத் தொகுத்துரைத்தனர். தோன்றி மறைந் தழிவது நுண்ணுடம்பின்கண்ணும், பருவுடம்பின்கண் ணும் நிகழ்வன ஆதலின், 'சூக்கமொடு தூலத்து' என்றார். சுழற்சிக்கு உவமை சுழற்காற்றாதலின், 'சூறை மாருதத்து' என்றார். சிறப்பு என்பதையே ஆங்கில நூலார் 'இவல்யூஷன்' (Evolution) என்பார்கள். அறு வகைச் சமயமென்று அடிகள் கருதிய சமயங்கள் யாவை யென்னின், அவர் காலத்திற்கு முற்பட்ட **மணிமேகலையுள்** கூறிய ஆறுசமயங்களென்று கருதுதல் வரலாற்று முறைக் குப் பொருத்தமானது. உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், சாங்கியம், நியாயம், மீமாம்சகம் என்பன.

இவற்றுள் யாதுங் கூறாத உலோகாயதத்தை யொழித்துப் பாஞ்சராத்திரத்தைக் கொள்ளுவதும் பொருத்தமே. திருவார்த்தையுள் 'அறுசமயம் பணிவகை செய்து' என்று வந்தமையுங் காண்க.

ஒவ்வொரு சமயமுந் தாம் கைக்கொண்ட தத்துவங்களின் அளவில் நின்றுவிடு மாதலால், அவைகள் தனித் தனியே முடிவாகக் கொண்ட தத்துவங்களின் தலைவர்களே அச்சமயக் கடவுளர்களாவரென்பது சைவநூற் கருத்து. தத்துவங்களிலுள்ள புவனங்களின் அதிபதிகள் உயிரினத்தைச் சார்ந்தவரே யன்றி முழுமுதற் கடவுளர்களாகார். தத்துவமெல்லாங் கடந்த பரம்பொருளாகிய முழுமுதற் கடவுளை நோக்க அவர்கள் மிகச் சிறுமை யுடையோராதலின், 'விண்ணோர் பகுதி கீடம் புரையுங் கிழவோ' னென்றார். முழுமுதற் கடவுள் ஒருவனே வீடுபேற்றினை யருளும் ஆற்றலுடையானாதலின், தத்துவத்தலைவர்களால் அவர் பெறும்முத்திமெய்யானவீடு பேறாகாமையை 'இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை' என்றார். அளவற்ற நற்றவஞ்செய்து திருவருட்சத்தி பதியப்பெற்ற பெரியோர்க்கே இறைவன் தனது அருட் காட்சியை நல்குவானே யன்றிப் பிற எத்தவத்தார்க்கும் அதனை நன்கு புலப்படுத்தாமையால், 'ஒளிக்கும் சோர' னென்றார். சோரனுக்கு விலங்கிடுதல்போல அவனுக்கும் 'மலர்மாலையாற் றாளிற் றளையிடுமின்' என்றார். தாள் தளையிடுமி னென்பதை தாள் தலையிடுமினென்று கொள்ளுமிடத்து இறைவன் திருத்தாளினைச் சென்னியிற் சூட்டுதலாகிய முத்திநிலை குறிக்கப்பட்டதென்றுணர்க.

திருவண்டப் பகுதியுள் பரமானந்தப் பழங்கடலாகிய முகிலானது அருண்மழை பொழிந்து தொண்டராகிய உழவர்க்கு அருளமுதம் உண்பித்த அருஞ்செயல் மிகவும் அழகாகவும் விரிவாகவும் புனைந்துரைக்கப்பட்டது. இறைவன் தன்னை வலியவந் தாட்கொண்டமையால் 'அறைகூவி யாட்கொண்டருளி, மறையோர் கோலங் காட்டி யருளலு' மென்றார். செம்பொருளைக் கண்டு பிறவி நீங்

கப் பெற்றார்க்கு இந் நிலவுலகின்கண்ணும், தாங்குதற்கரிய பேரின்பம் இடையறாது பொங்கித் ததும்பும் என்பது 'அருளிய தறியேன் பருகியு மாரேன் விழுங்கியும் ஒல்லகில்லேன்' 'வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்' 'அமுததாரைகள் எற்புத்துளைதொறும் ஏற்றினன்' என்னும் திருவாக்குகளாற் றெள்ளிதிற் றெளியப்படும்.

போற்றித் திருவகவல்: போற்றித் திருவகவலுள் உயிர்கள் பல்வகைப் பிறப்பெடுத்தபின் மக்கட் பிறவியையடைந்து, பலவகையான இடையூறுகளைக் கடந்து பேரன்பின் பயனாகச் சிவபெருமானே குருவாக வந்தருளப் பெற்று வீடுபேற்றிற்குரிய நெறியில் நிற்கும் முறையினைத் தொகுத்துக்கூறி இறைவன் புகழைப் பகுத்துப் பாடியருளிய சிறப்பு மிகவும் பாராட்டத் தக்கது. உயிர்கள் ஒரு மல முடையவர்கள், இரு மல முடையவர்கள், மும்மல முடையவர்கள் என முத்திறத்தராவர். மும்மலமுடைய சகலருள் வானவர் தலைநின்றவராவர். வானவருள் திருமாலே மிகச் சிறந்த தெய்வமாதலின், அக்கடவுளையே இதனுள் விதந்தோதினர். மும்மூர்த்திகளுள் அரன் இறைவனை நேரே கண்டு வீடு பயக்கும் உணர்வு பெற்றவனாதலின், அங்ஙனம் நல்கப்பெறாதாருள் தலைநின்றவன் அரியாதலின், 'அவன் வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்' என்றார். அயன் அரிக்குக் கீழ்ப்பட்டவனாதலானும், ஏனை வானவருள் முதன்மையுற்றவனாதலானும் 'நான்முகன் முதலா வானவர் தொழுதெழ' என்றார். திருமால் இறைவன் அடியைத் தேடினமையே ஈண்டு அடிகள் எடுத்துரைத்தாராதலின், 'அடிமுடி' என்பதற்கு அடியின்முடிவென்றே பொருள் கொள்ளவேண்டும். இறைவனை வழுத்திய பின்னும் திருவடிப்பேறெய்தும் பக்குவம் வாய்க்கப் பெறாமையான், இறைவன் மலரடிகளை அவன் காணாயினான். அருந்தவத்தின் பயனாகத் திருவருட் சத்தி பதியப் பெற்றுப் பாசநீக்க மெய்தற்குரிய பக்குவம் வந்தபோது இறைவன் குருவாய்

வந்தருள் புரிவனென்ற கருத்தை 'வார்கட லுலகில் வாழ்த்துதற் கெளிதாய்' 'அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி யருளிய பெருமையை' என்றவிடத்து இனிது விளக்கினர். நிலத்தின்கண் யாவர்க்குங் கட்புலனாதற்குரிய உயிர்களுள் யானை பெரியதும் எறும்பு சிறியதுமாதலின், 'யானை முதலா எறும்பீறாய' என்றார். எனினும் யானையினும் பெரிய திமிங்கிலம் முதலிய நீர் வாழ் உயிர்களும் எறும்பினுஞ் சிறிய கட்புலனாகாப் புழுக்கள் முதலியனவும் இவற்றுள் அடக்கிக்கொள்க.

தப்பிக் கடக்க வேண்டிய பொருள்களுள் கருப்பையிற் றுன்பம் மிகவுங் கடுமையாதலின், அதனை விரித்துரைத்தனர். உயிரில் பொருளிடத்து வைக்கும் பற்றுப் புறப்பற்றெனவும், தொடர்புடைய உயிர்கள் மாட்டு வைக்கும் பற்று அகப்பற்றெனவுங் கூறப்படும். மனைவி மக்கள்பாலுள்ள பற்றுக் கடத்தற்கரியது. மக்களைப் பெறுவதற்குமுன் இளைஞர்க்குப் பெண்களிடை உளதாகும் பற்றானது அறிவை மயக்கி மிக்கதோர் பிணிப்பினை விளைக்குந் தன்மைத்தாதலின், அதன் கடுமையையும் அடிகள் பாரயந்தோன்றக் கூறி இனிதுணரவைத்தார். 'மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியு ளகப்பட்டுத், தைய லார்எனுஞ் சுழித்தலைப் பட்டுத் தலை தடுமாறுமே' என்றவிடத்துத் தையலாரைப் பிறவித் துன்பக்கடலில் உள்ள பெருஞ் சுழியென்று கூறி அதன் சுழற்சியினின்று தப்புதலருமையைக் குறிப்பா லுணர்த்தினமை காண்க. மாதரைவேட்டு மணந்த பின்னேயே மக்களும் உறவினரும் பல்கிப் பொருளீட்டு மவாவும், குடும்பத் தொல்லையும் பிறவும் ஏற்படுதலால், பிறவேட்கையைப் பெண்டிர் விழைவிற்குப் பின் வைத்தனர். ஆசை மிகுந்த காலத்தே அதன் வலிமையால் ஈர்க்கப்பட்டு உயிர்கள் அறிவிழந்து பித்துக் கொள்வராதலின், 'மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்' என்றார்.

உலகிற் சிறப்பெய்தற்குரிய கல்வியானது பல்வகைப் பட்டு விரியும். ஒவ்வொரு கலையிலும் தேர்ச்சியடைய

விரும்புவோர் பல்பிறவிகளில் அதனைப் பயிலவேண்டியதா யிருத்தலினாலும், அத்தன்மையையுடைய கல்விகளுள் மெய்ந்நூற்கல்வி தலைசிறந்த தெனினும் அதனைக் கற்ற வண்ணமே நன்னெறி நிற்றல் அரிதாகலானும், அந்நன்னெறியை எய்துவித்தலின்றி விரிந்து கிடக்கும் பல்வேறு வகைக் கல்விகளும் வீடுபேற்றினை யுதவாவாதலின், 'கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்' என்றார். கழி பெருஞ் செல்வம் பெற்றோர் அப்பொருளைப் பாதுகாக்குங் கவலையால் விழுங்கப்பட்டுத துன்புறுவராதலின் 'செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்' என்றார். உலகியல் வாழ்க்கை செவ்விதின் நடைபெறுவதற்கு வேண்டப்படும் உண்டி, உடை உறைவிடம், மருந்து முதலியவற்றைக் கைவரப் பெறுதற்குப் பொருள் இன்றி யமையாதாதலின் அப்பொருளில்லாதவர்கள் இவற்றைப் பெறுதற்கே வாழ்நாட்கழிப்ப ராதலானும், இவற்றைப் பெறுவிடத்துப் 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' என்ற வாறு இறந்தாரோடு ஒப்பராதலானும் 'நல்குரவென்னுந் தொல்விடம் பிழைத்தும்' என்றார். பலவகையாகவும் இன்பவாழ்வடைய முயன்று, இந்நிலவுலகில் அதனை நல்கும் மக்களும் இல்லையென்று தேர்ந்து, அதனை ஈய வல்ல கடவுளுண்டென்று துணிந்த விடத்தேதான் கடவுள் நினைவு உறுதிப்படுமாதலின் 'புல்வரம் பாய பலதுறை பிழைத்தும், தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி' என்றார். கடவுட்கொள்கை யாராய்ச்சியில் மிகப் பயின்று அன்பு வடிவாய பரம்பொருளுண்டென்று தெளிந்து அதனை யடையும் வீட்டுநெறியிலே செல்லத் தொடங்குங்கால், அச்செலவிற்கு இடையூறுகிய அகப் பகைஞரையும் புறப்பகைஞரையும் அடிகள் அழகாகத் தொகுத்துரைத்தனர். காம வெகுளி மயக்கம், ஈயாமை, செருக்கு, அழுக்காறு என்னுமிவைகள் எழுவதற்குக் காரணமாகிய மாயா காரியப்பொருள்கள் யாவும் 'ஆறு கோடி மாயாசத்திகள்' என்றவிடத்துக் குறிக்கப்

"மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
யோமாயை யுள்ளொளி யோராது கோடியிற்
றூமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே"

என்ற திருமந்திரச் செய்யுளில் மாயாசத்தி ஆறுகோடி என்று விதந்து கூறினமை காண்க.

வீடுபேற்றினை நாடும் ஒருவன் பலர்க்கும் உதவி புரியுந் தன்மையனாயிருப்பின், உதவி பெற விரும்பும் நண்பரும் உறவினரும் அவனை அந்நெறிச் செல்லாது தடுத்தற்பொருட்டு நாத்திகம் பேசுதல் உலகியல்பு. இந்திரன் அரசினை நீத்துத் தவம் புரியச் சென்றகாலை, வியாழப் புத்தேள் விண்ணவர் அரசு நிலைத்தற் பொருட்டு அவனுக்கு நாத்திகநூலைப் போதித்தனர் என்ற கதை கேட்கப்படுகின்றது. ஞான நெறியிற் செல்லுவோர்க்குப் பயன் கருதிப் பயிலுங் கருமநெறியைப் போதித்து மேல் நெறி செலலாது தடுக்கும் மீமாஞ்சகரையே,

"விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்"

என்றவிடத்துக் குறித்தனர். தன் தெய்வம் என் தெய்வமென்று வழக்கிடும் பல கோடி சமயங்களும் தத்தஞ் சமயக்கொள்கைகளைப் பெரிதாகப் பிதற்றி மெய்ப் பொருளை யறியவொட்டாது மலைவு செய்தலின், அவற்றை அடிகள் கடிந்தனர். 'உலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம், சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும் கவலைக்கெடுத்து' என்றதுங் காண்க. அடிகள் காலத்து வழங்கிய சமயங்களுள் புத்தமும், உலோகாயதமுமே மக்களுக்குப் பெருமயல் விளைத்தமையால் அவற்றையே விதந்தோதினர். மாயாவாதமென்பது அடிகள் காலத்துப் பௌத்த மதத்தையே குறிக்கவேண்டுமென்று திரு. மறைமலையடிகளால் திருவாசக விரிவுரையுள் விளக்கப் பட்டது. வாதவூரடிகளுக்குப் பிற்காலத்தே அச்சொல் ஏகான்ம வாதங் கூறும் சங்கரர் கொள்கையைக் குறிக்க

வழங்குவதாயிற்று. அடிகள் காலத்து ஏகான்ம வாதக் கொள்கை தலையெடுத்துப் பரவவில்லை. பிற்கால மாயா வாதமும் மறைந்த பௌத்தமென்று வழங்கப்பட்டது. பௌத்த மதம், குரு உண்மை, இருவினை யுண்மை, அறிவுண்மை முதலியவற்றை யொப்புக்கொண்டாலும் அறிவினைக் கணந்தோறுந் தோன்றியழியுமென்றுகூறி அஃது அற்றுப்போதலே முத்தியென்பதாலும், அறிவிலேதான் உலகந் தோன்றுவதென்றும், அறிவின் வேறாய உலகம் இல்பொருளென்றுங் கூறுதலாலும், அது சூனியவாதங் கூறுஞ் சமயமாகவே தோன்றுகின்றது. எல்லாம் உண்மை போலக் காட்டி மக்கள் மனத்தை இழுத்துச் சென்று சூனியக்கொடியைத் தள்ளுதலால் அதனைச் சண்டமாருதமென்றார். உலோகாயதன், கடவுளும் உயிரு மில்லையென்று கூறி உயிர்க்குறுதியைத் தொலைத்தலின் அதனைக் கடுவிடமென்றார். கடவுள் உண்மை தெளிந்து அதனை நெகிழவிடாது கடைப்பிடித்து இறைவன்பாற் பயன் கருதாது பேரன்பு செலுத்துவதே வீடுபேற்றினை விரும்பினோர் கடனென்பதைக் 'கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்படியே யாகி, நல்லிடையறா வன்பிற் பசுமரத் தாணியறைந்தாற் போல' என்ற விடத்தே இனிது விளக்கினர். உலகியல் ஒழுக்கத்துச் செல்வார்க்கு வீட்டுநெறி செல்லும் பேரன்பர் நிலை பித்தர் நிலைபோற் றோன்றும். தமது அறியாமையான் உலகவர் பேரன்பரைப் பித்தர் பேயர் என்று நகையாடி எள்ளுவர். அதனைப் பொருட்படுத்தாது, நன்னெறி கடைப்பிடித்தல் வேண்டுமென்பார்,

'நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றி'

என்றார்.

போற்றித் திருவகவலுள் மதுரை, தில்லை, திருவிடைமருதூர், திருவாரூர், திருவையாறு, திருவண்ணாமலை, திருவேகம்பம், திருப்பராய்த்துறை, திருச்சிராப்பள்ளி, திருக்குற்றாலம், கோகழி, ஈங்கோய்மலை, திருப்பழ

னம், திருக்கடம்பூர், திருக்கயிலை, திருக்கழுக்குன்று, திருப்பூவணம் என்னுந் திருப்பதிகள் விதந்தோதப்பட்டன. தென்னுடாகிய தமிழ்நாட்டில் ஆதியில் வழங்கிய சிவநெறியே பின்னர் எந்நாட்டினும் பரவியதாதலின்,

> ‘தென்னு டுடைய சிவனே போற்றி
> எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி’

என்ருர். இதனையே தமிழ்ப்பற்றுடையார் பேரவைகளில் கிளர்ச்சி மிக வழங்கி வருகின்ருர்கள். இறைவன் மாதொருபாக னென்ற கருத்தை அடிக்கடி நினைவூட்ட விரும்புவார்,

> ‘குவளைக் கண்ணி கூறன் காண்க
> அவளுந் தானும் உடனே காண்க’

என்னும் திருவாசக அடிகளை முறையே முதன்மொழியாகவும் எதிர்மொழியாகவும் வழங்குதல் மிகவும் பொருத்தமானது.

மணிவாசகரைப் பற்றிய பட்டயத்தின் மூலம்

“காவெரிப்பூப்பட்டணத்தில் விஶ்வஸிச்ச வெள்ளாளருடெ நெரெ ராஜ பௌத்ரீம் ஒண்டாய பௌஷ்ம் ஆயவரு கப்பலில் கரெறி கொரக்கெணியில் வரிகயும் செய்து, வந்ந எழுபத்துரண்டு குடும்பக்காரரும் இக்கொரக்கெணியில் விஶ்வஸிச்ச ஆளுகளும் தம்மில் பந்துக்களாயி நடந்நுவந்நகாலம் நம்முடெ கற்த்தாவின்றெ காலம் உாக்ஷ்யங்ஙல் நிரணத்துள்ள விஶ்வாஸகாரரும் கூடெ ஈவந்நதமிழரிலனுஸரிச்சு தமிழருடெ மர்யாதயில் சிலதும் மலயாம் மர்யாதயில் சிலதும் இங்ஙனெ நடந்நுவரும்பொள் ஙாயரு காலம் மாணிக்கவாசகரெந்ந ஒரு க்ஷேத்ரக்காரன் வந்ந மாற்ஜீமர்யாதயில் ஒள்ள ஆளுகளில் சிலரடெ நெரெ அவன்றெ க்ஷேத்ரத்தோடுகூடெ

ஸெவாமூற்த்தியெ விட்டு ஜ்வரங்ஙள் ஒண்டாக்குகயும்
ஹோந்துவருத்துகயும் அம்மகொஷ்டிகள் வருத்துகயும்
ஜீவஜந்துக்களெ கொல்லுகயும் இங்ஙனெ யொள்ள தஹவிக்
குந்ந ஆளுகள் அவன்றெ அடக்கல் செந்நுஹஸ்மம்
வாங்ஙி இட்டால் ஒட்டு ஸமனம் காண்கயும் ஒட்டு வாய
யாக்கி துள்ளிச்சு ஒழிக்கயும் காவ்யம் நிறஞ்ஞு நாடாக
கொண்டு அவரு வைஹமானிக்குந்நதினெ கண்டயிவ
ரில் சிலருமாயிட்டொள்ள செங்ஙா தங்ஙளெக்கொண்டு
ரஹஸ்யத்தால் மாணிக்கவாசகருடெ அடுக்கல் கூட்டிக்
கொண்டு செல்லுகயும் பஞ்சாக்ஷரங்ஙளெக் கெள்க்கயும்
ரஹஸ்யத்தால் நெற்ச்ச காழ்ச்சகள் க்ஷேத்றங்ஙளில்
கொடுக்கயும் கருமணியும் முடியெற்றும் காணுகயும்
காவ்யத்தில் ஒள்ள கயகளும் காவ்யங்ஙளும் மந்த்றங்ஙளும்
படிக்கயும் இங்ஙனெ ரஹஸ்யத்தால் செய்துவரும் பொள்
ஸொஷமண்டலத்திருந்ந வந்ந வீட்டுகாரரில் ஒள்ளத்தில்
நாலாறு குடும்பக்காரு மாணிக்ய வாசகரெ அன்வெ
ஷிச்சு வந்நு, அவரும் எயஉல் கூடி மாணதொஷங்ஙளும்
ஆயி யெகொல் ஹவிச்சு வருந்ந ஸமயங்களில் இயெழுபத்
தரண்டு வீட்டுகாரரில் எல்லாவரும் கூடெ மூப்பு
கொடுத்து நடத்திவந்ந மூப்பன் கழிஞ்ஞு ஹெதுவுங்கல்
வச்சு மாணிக்ய வாசகருடெ க்ஷேஉத்தில் அகப்பெட்ட
தில் எ0உ.ல் அ-ம் அன்வெஷிச்சு வந்நதில் நாலும்
இவிடெ ஒள்ளதில் உ0-ம் இங்ஙனெ எட்டொடு கூடெ
ந0உ-ல் நிந்நு பெருக்கிய க0சு-ம்(?) ஒருமனஸ்ஸாயிட்டு
கூடி ஈ வைஹமானப்பெட்ட ஆளினெகொடியில்
பொதிஞ்ஞு கொள்ளிவச்ச அடக்கணமெந்நும் இவராறு
பத்து நாலில் நிந்நுள்ள வீட்டுகாரரும் மலயாளத்தில்
நாந0சு வீட்டுகாரரில் குரக்கெணியில் ஒள்ள ஆளுகளு
மாற்ஹம் விஸ்வஸிச்ச காலம் தொட்டு இந்நுவரெயும்
வெள்ளயில் பொதிஞ்ஞு அவரவருடெ ஹவனங்ஙளிலடக்கி
வருந்நதின் வண்ணம் அடக்கணமெந்நும் தங்ஙளில் விவ
ஹிச்சபி பொள் எட்டு குடும்பக்காரரும் கூடி ஞங்ஙள்
மாருமந்த்ற மெந்ந பஞ்சாக்ஷரவும் கெட்ட பஸவின்றெ
சாணவும் மூத்றவும் பாலும் மொரும் நெய்யும் கூடி

பஞ்சமௌவ்யமாக்கி ஸெவிச்சு வீக்ஷப்பெற்ற ஞங்ஙடெ வசனம் நிங்ஙள் கெள்க்கயில்லா யெங்கில் ஞங்ஙள் கoசு-ம் வெஷம் திரியு மெந்நும் பறஞ்ஞு மாணிக்ய வாசகர்க்கு ப்றத்யக்ஷமாயிடம் செற்நந மாணிக்ய வாசகருடெ ஸெவா மூற்த்தியெ அவருடெ பற்றில பரமெப்பிசசு அதினெப ணயன்றுகாவில் குடியிருத்துகயும் செய்து ஆமாடும் பக்காரரெ மாணிக்ய வாசகருடெ நாமம் சொல்லி மணிமாமக்காரரந்நும் விளிச்சுவருந்நு. மாணிக்ய வாசகருடெ மாருமந்த்றம் கெள்க்காதெயும் ஊஸ்மம் யரிக்காதெயும் சுoஅ குடும்பக்காரரும் கூடி வெள்ளச்சீலயில் சகவும் பொதிஞ்ஞு கழிஞ்ஞ ஆளின்றெ ஊவனத்து அடக்கிய ஆளுகளெ யரியாய்க்களெந்நும் விளிச்சு வந்நு.''

மணிவாசகரைப்பற்றிய பட்டயத்தின் மொழி பெயர்ப்பு

'காவிரிப்பூம் பட்டினத்திலே கிறித்து மதத்தை நம்பிச் சேர்ந்த வேளாளருக்கு எதிரிடையாக அரச தண்டனை உண்டான பின்பு அன்னோருள் கப்பலில் ஏறிச்சென்று குரக்கணி (கொல்லம்) என்னுமிடத்தை அடைந்த எஉ குடும்பக்காரரும் குரக்கணியிற் கிறித்துவர்களாயிருந்தவர்களும் தம்முள் உறவினராகி ஒருங்கு வாழ்ந்தகாலம்.நம்முடைய கர்த்தாவின் காலம் உகூ௩-ம் ஆண்டாகும். (கொல்லத்திற்கு வடக்கேயுள்ள) நிரணம் என்னுமிடத்துள்ள கிறித்துவர்களும் இங்கேவந்த தமிழரைப்பார்த்து தமிழர் வழக்கத்திற் சிலவற்றையும், மலையாள வழக்கத்திற்சிலவற்றையும், கைக்கொண்டு நடந்து வருங்காலத்தில், மாணிக்கவாசகனென்ற ஒரு மாய வித்தைக்காரன் புதிதாக நாட்டுக்கு வந்த கிறித்து மதத்திலுள்ள மக்களிற் சிலர்க்குத் தன்னுடைய வித்தையினலே தான் வழிபடும் மூர்த்தியை ஏவிச் சுரங்கள் உண்டாக்குதலும், மயக்கம் வருவிப்பதும், உறுப்புக்களின் முடக்கம் உண்டாக்குவதும், கால் நடை

களைக் கொல்லுதலும், இங்ஙனம் நோயுற்ற ஆட்கள் அவன் பால் அடக்கத்துடன் சென்று திருநீறு வாங்கி யிட்டால் குணங்காணுதலும், பேயோட்டுதலுஞ் செய்வதைக்கண்டு, காவிய மதம் (இந்து மதம்) நிறைந்த நாடாதலினாலே அவரைப் பெரிதும் மதிக்கும் அன்பர்கள் துன்புறுவார் களை மறைவாக மாணிக்கவாசகரிடங் கூட்டிக்கொண்டு செல்லுதலும், சென்றவர்கள் பஞ்சாட்சரங் கேட்டலும், மறைவாகக் கோயில்களுக்குக் காணிக்கைகள் கொடுத்த லும், கோயிற்றிருவிழாக்களிற் சென்று வணங்குதலும் நாட்டுச்சமயத்திலுள்ள காவியங்களையும், கதைகளையும், மந்திரங்களையும் படித்தலும் இரகசியமாகச் செய்து வரும் போது சோழமண்டலத்திலிருந்து வந்த உச குடும்பத் தாரும், மாணிக்க வாசகரை நாடி யடைந்து, வந்தவர் களுஞ் சேர்ந்து, எஉ வீட்டுக்காரர்கள் தமக்குள் பெண் கொடுத்தலும் கொள்ளுதலுஞ் செய்து தங்களுக்குள் ஒற் றுமைப்பட்டு வாழ்ந்தார்கள். அக்காலத்தில் எஉ வீட்டுக் காரருங் கூடித் தலைமை ஏற்றுக் காரியங்களை நடத்திய தலைவன் இறந்துபோன சந்தர்ப்பத்தில் மாணிக்கவாசக ருடைய வித்தையி லகப்பட்டவர்களில் எஉ குடும்பத் தாரில் அ குடும்பத்தாரும் அவரைத்தேடி யடைந்தவர் களில் ச குடும்பத்தாரும் இவ்விடம் உள்ளவர்களில் உ௦ குடும்பத்தாரும் ஆகச் சேர்ந்த கூஉ-ல் ககச ஆட்களும் ஒரு மனதாய்க் கூடி இந்த மதிப்புடைய தலைவனுடைய உடம்பைக் கோடித் துணியிற் பொதிந்து கொள்ளி வைத் துத் தகனஞ்செய்ய வேண்டுமென்று வாதிக்க, எஞ்சிய கூச வீட்டுக்காரரும் மலையாளத்தில் கூகூரு வீட்டுக்காரரில் கொரக்கணியிலுள்ள கிறித்துவர்களும், கிறித்து மதத்தைத் தழுவிய காலந்தொட்டு அன்றுவரை இறந்தவருடம்பை வெள்ளைத்துணியிற் பொதிந்து அவரவருடைய இடங்க ளில் அடக்கஞ்செய்ய வேண்டுமென்று வாதிட்ட காலை, முன்னையோர் எங்கள் குருமந்திரமாகப் பஞ்சாட்சரத்தை யுங் கேட்டுப் பசுவின் சாணமும் சிறுநீரும் பாலும் தயிரும் நெய்யுங் கூடிய பஞ்சகவ்வியம் உட்கொண்டு சிட ராகிய எங்களுடைய வார்த்தையை நீங்கள் கேட்க மாட்

டார்களாயின் நாங்கள் ககசு பேரும் மதத்திலிருந்து விலகி விடுவோமென்று சொல்லி வெளிப்படையாக மாணிக்க வாசகரை நெருங்கிச் சென்று, மாணிக்கவாசகருடைய கடவுளின் வடிவத்தைத் தாங்கள் செய்விப்பித்து அதனைப் பனையின் நாறுகா என்னுமிடத்து நிலையிருத்தி அக்குடும் பக்காரரை மாணிக்கவாசகர் பேரினலே மணிக்கிராமக் காரர் என்று அழைப்பாராயினர் மாணிக்கவாசக ருடைய குருமந்திரங் கேளாதும் திருநீறணியாது மிருந்த சுஅ குடும்பக்காரருங் கூடி வெள்ளைச்சிலையிற் சவத்தைப் பொதிந்து தங்களிடத் தடக்கஞ்செய்து வந்தமையால் நெறியான கிறித்துவர்க ளென்று அழைக்கப்பட்டுவந் தார்கள்.

முற்றிற்று.

வரலாற்று நூல்கள்

		ரூ.	அ.
சிவஞான முனிவர் வரலாறு	...	1	4
ஆண்டாள் வரலாறு	...	0	4
செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும்	...	0	4
திருஞான சம்பந்தர் வரலாறும் நூலாராய்ச்சியும்	...	2	0
அப்பர்சுவாமிகள் சரித்திரம்	...	1	8
சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறும் நூலாராய்ச்சியும்	...	2	0
மணிவாசகப் பெருமான் வரலாறு	...	1	8
சேக்கிழார் சுவாமிகள் வரலாறு (அச்சில்)			
சந்தாசாரியர் வரலாறும் நூலாராய்ச்சியும்	...	0	12

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.